
www.tamilarangam.net

# எரிமலை

சுறவம் 1992



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# இந்திய ஆக்கிரமிப்புச் சதிக்கு உள்ளாகி வங்கக் கடலில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட வேங்கைகளின் முதலாமாண்டு நினைவுநாள்



மேஜர் வேலன் (மலரவன்)
(சுந்தரலிங்கம் சுந்தரவேல்)
வியாபாரிமூலை, பருத்தித்துறை.



கடற்புலி
கப்டன் நாயகன்
சிவலிங்கம் கேசவன்
பொலிகண்டி, வல்வெட்டித்துறை




## கேணல் கிட்டு
**(சதாசிவம் கிருஷ்ணகுமார்)**
வல்வெட்டித்துறை



கடற்புலி கப்டன் ஜீவா
நடராசா மார்க்ஜெயராஜ்
கொய்யாத்தோட்ட ஒழுங்கை,
பாசையூர், யாழ்ப்பாணம்.



கடற்புலி
லெப். தூயவன்
மகாலிங்கம் ஜெயலிங்கம்
கண்டிவீதி, யாழ்ப்பாணம்.



கடற்புலி
கப்டன் குணசிலன்
(குணராஜ்)
சேகரன்குருஸ் மைக்கல்ஜீவா
2-ம் குறுக்குத்தெரு,
உதயபுரம், மணியம்தோட்டம்.



கடற்புலி
லெப். நல்லவன்
சிவஞானசுந்தரம் ரமேஸ்
மணியந்தோட்டம் கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்



## லெப். கேணல் குட்டிசிறி
(இராசையா சிறிகணேசன்)
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.



கடற்புலி
கப்டன் றொசான்
இரத்தினசிங்கம் அருணராசா
அரசடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.



கடற்புலி
லெப். அமுதன்
அலோசியஸ் ஜான்சன்
2-ம் குறுக்குத்தெரு, நாவாந்துறை
வடக்கு, யாழ்ப்பாணம்.

## 16.01.1994

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பதின்மூன்றாம் ஆண்டு
சுறவம் 1994



ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42


# புதிய வரலாறு படைக்கப்போகும் புத்தாண்டு

1994ம் ஆண்டுக்குள் நுழைந்துகொண்டிருக்கிறோம். பாதை நெடுகிலும் நம்பிக்கை ஒளியைப் பாய்ச்சிய ஆண்டாக 93 முடிவுறுகின்றது. 94ம் ஆண்டில் இந்த ஒளியின் பிரகாசிப்பு மேலும் மேலும் தீவிரமாக அதிகரித்து விடுதலையை விரைவில் வென்று தரும் என்ற உறுதியுடன் புதிய ஆண்டினுள் காலடி எடுத்து வைக்கிறோம். விடுதலையின் இலக்கை நெருங்க நெருங்க எதிரிகளும் அதனைத் தடுக்கும் நோக்குடன் முனைப்புடன் முயற்சிக்கிறார்கள். மக்களுக்குச் சொல்லொணாத் துயரங்களைக் கட்டவிழ்த்து விடுகிறார்கள். அழிவினையும், ஆக்கினையையும் ஏற்படுத்துகிறார்கள். மக்கள் விடுதலைக் குழந்தையைச் சுமப்பதற்கு முன், துயரச் சிலுவையைச் சுமக்குமாறு விதிக்கப்படுகிறார்கள்.

94ம் ஆண்டின் ஆரம்பத்திலேயே கிழக்குமாகாணம், மேலும் ஆக்கிரமிக்கப்பட்ட வன்னிப் பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தல்களை வைக்கவும், பின்னர் சர்வஜன வாக்கெடுப்பை கிழக்கு மாகாணத்தில் வைத்துத் தென் தமிழீழத்தைப் பிரித்து, தமிழரின் தாயக நில ஒருமைப்பாட்டைச் சிதைக்கவும் அரசு முற்படுகிறது. இராணுவ நடவடிக்கையின் விஸ்தரிப்பு, தென்தமிழீழத்தில் ஆட்களை காணாமல் செய்தல், சிங்களக் குடியேற்றம், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் முயற்சி என்பன 94ம் ஆண்டினுள் தொடரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளாக அமையும். பொருளாதாரத் தடை, விமானக்குண்டுவீச்சுக்கள் முதலான இன அழிப்பு நடவடிக்கைகள் தொடரும். 94ம் ஆண்டு சிறிலங்காவின் ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்களுக்கான ஆண்டாக இருப்பதால், அவற்றில் வெற்றி பெறுவதற்காக இராணுவத்தினரின் பின்பகுதியில் சூடுகாட்டி போர்முனை நோக்கித் தள்ளி வெற்றிபெற எண்ணும் அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளும் தொடரும். இவை அனைத்தும் தமிழீழ மக்களின் ஒருங்கிணைந்த எதிர்ப்பால் தோல்வியுறும்.

எமது இராணுவ ரீதியான வெற்றிகளும், சமூக மாற்றங்களும், சிவில் நிர்வாக அமைப்புக்களின் தோற்றங்களும், பொருளாதார அபிவிருத்திகளும் மிக வேகமாக இடம்பெற்று வருகையில், பாரிய இராணுவ நடவடிக்கைகள், பொருளாதாரத்தடையை இறுக்குதல் என்ற இரண்டு நாசகார சக்திகளை ஏவிவிட, 94ம் ஆண்டினுள் எதிரி முற்படுவது கண்கூடு. இவ்விடயத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஆகியவற்றின் செயற்பாடுகளின் கனபரிமாணம், விஸ்தீரணம், துறைகள் என்பன பலமடங்கு அதிகரிக்கின்றன. சர்வதேச மனிதாபிமான உதவி என்பது எமது அரசியல் இலக்கைச் சமரசம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்ய அனுமதித்தல் கூடாது. சர்வதேச மனிதாபிமான உதவி என்ற போர்வையில், "உணவு தருகிறேன்; அடிப்படை உரிமைகளை விட்டுக்கொடு." என்ற ரீதியில், எமது அவலங்களை எவரும் பயன்படுத்த இடமளிக்கக் கூடாது. எமது அரசியல் சுதந்திரமே சகல வேதனைகளுக்கும் நிவாரணி என்பதை நிலைநிறுத்தி, சர்வதேச நிறுவனங்களின் நிவாரண உதவிகளும் அரசியல் இலக்கை வென்றெடுக்கும் காரணிகளாகப் பயன்படுத்தப் படவேண்டும். இதனை நாம் சாதிக்க வேண்டுமெனில், உலகனைத்தும் வாழ் தமிழர்களின் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு, பாதிக்கப்பட்ட தமிழீழ மக்களின் புனர்வாழ்வு, நிவாரணம் என்ற சேவைகளின் உயிர்நாடியாய் அமைந்திட வேண்டும்.

தமிழீழ விடுதலையை உடைத்துக்கொட்ட, இந்தியா முதற்கொண்டு பல்வேறு பிராந்திய, சர்வதேச நாசகார சக்திகள் முயன்று வருகின்றன என்பதும் துல்லியமாக நாம் அறிந்துகொண்டவையே. இக்கட்டத்தில், நாம் பிராந்திய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் எமது நேச சக்திகளை அடையாளம் கண்டு, போராட்டத்தோடு அரவணைத்து வெற்றிக்கு ஆதரவைத் திரட்டுதல் வேண்டும். அதேவேளை, தாயகத்தில் எமது விடுதலைக்கான சூழ்நிலையை உருவாக்குதல் மூலம், சர்வதேச சமூகம், விடுதலையை அங்கிகரிக்கின்ற நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தல் வேண்டும்.

எமது பிரச்சினையில் பிராந்திய அல்லது சர்வதேசத் தலையீடு என்பது சாத்தியமானதல்ல. சிறிலங்கா அரசாங்கம் உள்நாட்டுப் பிரச்சினையாகவும், பயங்கரவாதப் பிரச்சினையாகவும் இதனைக் கையாண்டு இராணுவத்தீர்வு காணும் முயற்சியில் வெளிநாட்டு நிதி, ஆயுத உதவிகளைப் பெற முயற்சிக்கிறது என்பது அப்பட்டமான உண்மை. இவ்விடயத்தில் இந்தியாவின் உதவியையும் அது பெறுகிறது; இன்னும் கூடுதலாகப் பெறும் என்பதையும் எதிர்பார்க்கலாம். இந்தியா நேரடியாகத் தலையிடுதல் என்பது எளிதில் நடக்கக்கூடியதன்று. நீண்டகால கெரில்லாப் போரில் சிக்குண்டு அவமானகரமாகத் தோல்விகண்டு திரும்பிய பாடத்தை இந்தியா மறந்துவிடவில்லை. மேலும், அதிரடித்தாக்குதல் மூலமோ, உள்சதி நடவடிக்கை மூலமோ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தை அழிக்கும் முயற்சிகளும் ஏற்கனவே தோல்விகளிலேயே முடிந்துள்ளன. 1987ல் தலைவரைக் கைப்பற்றும் நோக்குடன் தின்னவேலியில் நடாத்தப்பட்ட இந்திய அதிரடித்தாக்குதல் படுதோல்வியில் முடிவடைந்ததும், மாத்தையாவைப் பயன்படுத்தி நடக்கவிருந்த பயங்கர உள்சதி முறியடிக்கப்பட்டதும் இந்தியாவுக்குக் கசப்பான அனுபவங்களாக உள்ளன. மேலும், நேரடித் தலையீடு, சிங்களப் பகுதிகளில் மீண்டும் தீவிர, தேசிய, வெளிநாட்டு எதிர்ப்பு அலைகளைத் தோற்றுவித்து, அரசாங்கத்தைக் கவிழச் செய்யும் ஆபத்துக்களும் உண்டு.

அமெரிக்காவின் தலைமையில் ஐ.நா. சபையின் தலையீட்டை இலங்கையில் மேற்கொள்ளுவதற்கும் உகந்த சூழ்நிலை இல்லை. சோமாலியா, கெயிற்றி ஆகிய நாடுகளில் ஐ.நா. சபையின் அங்கீகாரத்துடன் அமெரிக்கா செய்த தலையீடுகள் இதுவரை தோல்வியையே தழுவின. இந்நிலையில், இலங்கையில் மேற்கொள்ளப்படும் ஒரு தலையீடு, ஆழமறியாது காலை வைத்த கதையாகிவிடும். எனவே, பிராந்திய ரீதியிலான சாக் நாடுகள் அமைப்பின் தலையீடோ அல்லது பொதுநலவாய நாடுகளின் அமைப்பின் தலையீடோ ஏற்படலாம் என்று கருதப்படுகிறது. சாக் நாடுகள் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டிருக்கும் வேளையில், இவற்றின் படைகள் செல்லுமிடங்களிலும் தங்களுக்குள்ளேயே சண்டையிடும் ஆபத்து எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், பொதுநலவாய நாடுகளின் தலையீடு எனும்போது, இதன்மூலம் பிரிட்டன், அவுஸ்திரேலியா போன்ற மேற்குலக நாடுகளின் இராணுவச் செல்வாக்கு "தனது" பிராந்தியத்தில் விஸ்தரிக்கப்படுமோ என்று இந்தியாவும் அஞ்சுகிறது. ஐ.நா. சபையின் ஊடாக அமெரிக்கத் தலையீடு குறித்தும் இத்தகு அச்சம் இந்தியாவிடம் இருக்கின்றது. இத்தகு தலையீடுகள் குறித்து தமிழீழ மக்கள் எத்தகு அச்சங்களைக் கொண்டுள்ளனர் என்பது ஒருபுறம் இருக்க, சிங்கள தேசம் இவற்றை வெறுக்கின்றது என்பதே சாஸ்வதமான உண்மை. இவ் ஆத்மார்த்த உள்ளக் கிடக்கைகளை மீறி, சிறிலங்கா அரசாங்கம் வெளிநாட்டுத் தலையீடுகளை வருந்தி அழைத்து, வினையைத் தேடிக்கொள்ளும் என்று எதிர்பார்க்க முடியாது.

எந்தப் பெரிய நாடோ, எந்த வல்லரசோ, எந்தக் கூட்டுக்களோ, எந்தப் பல்நாட்டு அமைப்புக்களோ தமிழீழப் போராட்டத்தை நசுக்குவதற்குரிய தார்மீக பலத்தையோ, சர்வதேச ஆதரவையோ பெறமுடியாது. சர்வதேச சட்ட வரையறைக்குள் உட்பட்ட, நியாயமான, ஒடுக்கப்பட்ட எமது மக்களின் போராட்டத்தை நேரடியாக அடக்குவதற்குரிய நீதிவல்லமை எவருக்கும் கிடையாது. அதனை ஆதரிப்பதற்கான தார்மீகக் கடமையே உண்டு. அதனை மீறி எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்க முற்படும் சக்திகள் தர்மத்தைக் கொன்றொழிக்க முயன்று தோல்விகண்ட வரலாற்றுப் பழிக்கு ஆளாக நேரிடும்.

★★★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழத்தின் எதிர்கால சிற்பிகள் உருவாகும் காந்தரூபன் அறிவுச் சோலை




கோப்பாயில் ஒரு குளிர்மையான பெரிய மாந்தோப்பு. அந்த மாந்தோப்பு வளவில் விடுதிகள் போன்று ஆங்காங்கே காணப்படும் வீடுகள். ஒருபுறத்தில் பாடசாலைக் கட்டிடம். இன்னொரு புறத்தில் பெரியதொரு சமையற்கூடம். முன் புறத்தில் தண்ணீர் தாங்கி. அழகான, அமைதி நிறைந்த ஒரு பூங்காவிற்குள் புகுந்தது போன்ற உணர்வு ஏற்பட்டது.

மாந்தோப்பை மெல்லென பற்றிப் படரும் காற்றாய், மாங்கிளையில் கூடுகட்டி தாவிப் பறந்து திரியும் குருவிகளாய், சுதந்திரமான மகிழ்வுடன் ஓடி விளையாடிக் கொண்டிருந்த சிறுவர் கூட்டம் நாம் உள்ளே சென்றதும் "மதிய வணக்கம் மாமா", "மதியவணக்கம் மாமா" என்று எம்மை வரவேற்றனர். மூன்று வயது தொடக்கம் பதினைந்து வயதுவரையிலான சிறுவர்களை அங்கே காணக்கூடியதாக இருந்தது. ஆம், அதுதான் காந்தரூபன் அறிவுச்சோலை.

ஓர் இடத்தில் ஒரு நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டிருந்தது. அதில் சிரித்தபடி ஓர் இளைஞனின் உருவப்படம். அது கரும்புலியாய் சென்று மாவீரரான கரும்புலி மேஜர் காந்தரூபனின் படம்.

காந்தரூபன் தாமே விரும்பி தலைவரிடம் கேட்டு கரும்புலியாய் சென்றதையும், முன்பு பெற்றோரை இழந்து யாருமற்ற நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்ததையும், தலைவர் பிரபாகரனிடம் "யாருமற்றவனாக வாழ்ந்த என்னை விடுதலைப் புலிகள் என்னும் குடும்பத்தில் இணைத்து ஆளாக்கியதைப் போல தமிழீழத்தில் அநாதைகளாக வாழும் பிள்ளைகளை இணைத்து அவர்களை அநாதைகள் என்ற நிலையிலிருந்து மீட்க வேண்டும்." என்று கேட்டுக் கொண்டதையும் பொறுப்பாளர் எம்மிடம் விளக்கினார்.

அந்த மாவீரனின் ஆசை நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனால் அவனுடைய பெயரிலேயே இந்த இல்லம் இயங்குகிறது. இந்த இல்லம் தலைவர் அவர்களினாலேயே 1.11.1993 அன்று திறந்துவைக்கப் பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.



**"எல்லோருக்கும் பொது அன்னையான தமிழன்னை இந்தச் சிறுவர்களை தாயாக அரவணைத்திருக்கிறாள். எமது போராளிகள் அனைவருமே இவர்களின் சகோதரர்கள். எமது இயக்கம் என்ற மாபெரும் குடும்பத்தில் இவர்கள் இணை பிரியாத அங்கமாக இணைந்துள்ளனர். தனிக்குடும்பம்; அந்தக் குடும்பத்தைச் சுற்றிய உறவுகள் என்ற வரையறுக்கப் பட்ட வரம்புகளுக்கப்பால் ஒரு பரந்த வாழ்வையும், விரிந்த உறவுகளையும் வைத்துக்கொண்டு வளரப்போகும் இவர்கள், எதிர்காலத்தில் எமது தேசத்தின் சிற்பிகளாகத் திகழ்வார்கள் என்பது திண்ணம். இந்தச் சமூகச் சூழலில் இவர்களிடம் மண்பற்றும், மக்கள் பற்றும் ஆழமாக வேரூன்றி வளரும். இத்தகைய நற்பண்புகளுடன் இவர்கள் கல்வியறிவு பெற்று இந்தத் தேசத்தின் நிர்மாணிகளாகவும் உருப்பெற்று எமது மக்களுக்குப் பெரும்பணியாற்றுவார்கள்."**

**தலைவர் வே. பிரபாகரன்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆரம்பத்தில் 45 பிள்ளைகளுடன் இவ்வில்லம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா இராணுவத்தின் தாக்குதல்களினால் பெற்றோரை இழந்தவர்களும், வேறு பாதிப்புக்குள்ளானோரும் இவ்வில்லத்தில் வாழ்கின்றனர். காலையிலிருந்து இரவுவரை ஓர் ஒழுங்குமுறையான வழிநடத்தலில் இவர்கள் வளர்ந்து வருகிறார்கள். அதிகாலையில் உடற்பயிற்சி; பின்பு காலை உணவு; எட்டுமணிக்குப் பாடசாலை; ஒரு மணிவரை படிப்பு; பின்னர் பகல் உணவு; இரண்டுமணிவரை ஓய்வு; மூன்று மணிக்கு விளையாட்டு; யோகாசனம் போன்றவை; பின்னர் படிப்பு; இரவு எட்டரை மணிக்கு இரவு உணவு; ஒன்பது மணிக்கு படுக்கை. இவ்வாறான ஒழுங்கில் இவர்களது தினசரி வாழ்வு மகிழ்வுடன் கழிகிறது.

ஒன்பதாம் ஆண்டு வரையிலான கல்வி, அறிவுச்சோலை பாடசாலையிலேயே நடைபெறுகின்றது. இதற்கென அறிவுச்சோலை நிர்வாகத்தினால் ஏழு ஆசிரியர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். ஏனைய வகுப்பு மாணவர்கள் அண்மையில் உள்ள பாடசாலைகளுக்குச் செல்கின்றனர்.

வயது குறைந்த சிறுவர்களைப் பராமரிக்க தாதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். பத்து குழந்தைகளுக்கு ஒருவர் என்ற ரீதியில் இவர்கள் சிறுவர்களைக் கவனித்துக்கொள்வர்.

கிழக்கு மாகாணம், வன்னி, குடாநாடு என சகல பிரதேசங்களிலிருந்தும் வந்துள்ள சிறுவர்கள் இங்கே பாதுகாத்து வளர்க்கப்படுகின்றனர். இவர்கள் தலைவர் கூறுவதைப் போல தமிழன்னையின் புதல்வர்கள். இவர்கள் தமிழீழத்தின் எதிர்கால சிற்பிகளாக உருவாக்கப்பட்டு வளர்ந்து வருகின்றார்கள். அறிவியல் கல்வியை ஊட்டி சகல துறைகளிலும் சிறந்த முறையில் வளர்த்து, மிகச் சிறந்த எதிர்காலச் சந்ததியை உருவாக்குவதே இவ்வறிவுச் சோலையின் குறிக்கோள். அதன் பொறுப்பாளராக ரமேஸ் அப்பா விளங்குகிறார்.

★★★

## தூரப் பறந்துவிட்ட துணிவுப் பறவைகளே




நேற்றுவரை நீங்கள் நேரிருந்தீர்
கண்களிலே.....
பூத்ததுபோல் பூத்துப் புன்னகைத்தீர்.
எங்களுடன்
பேசிக்களித்தீர்; போய்விட்டீர்.
தாயகத்தில்...
வீசிவரும் காற்றில் விரித்த சிறகெடுத்துத்
தூரப் பறந்துவிட்ட துணிவுப் பறவைகளே!
ஈரவிழியிங்கு எமக்கின்னும் காயவில்லை.
ஊரறியோம்.
உங்கள் உறவறியோம்
தந்தையிட்ட பெயரறியோம்
ஆனாலும் புகழறிந்து நிற்கிறோம்.
நெஞ்சினிலே உங்கள் நினைவுக்கு மாலையிட்டு
நஞ்சணிந்தோம்.
நீங்கள் நடந்தவழி நடக்கின்றோம்.
தம்பியென்றும்
அண்ணன் தங்கையென்றும்
எங்களுக்கோர்
வம்சவழி தோன்ற வாழ்ந்தோமே.
என்றாகி
வந்தபகை வீழ்த்தவரிசையிட்டுப் போனோமே.
செங்குருதி பாய்ந்து திசை சிவந்து
எதிரிகளின்
தங்ககங்கள் யாவும் தணலில் கருக்கியபின்
வென்றகளிப்பில் வீடு வந்தோம்
அன்றிருந்து
இன்றுவரை உம்மை எவ்விடத்தும் காணவில்லை.
கல்லறைக்குள் நீங்கள் கண்மூடித் தூங்குவதாய்
சொல்லுகிறார்
உங்கள் தேகம் தூங்காதே!
மொட்டவிழும் பூவினிலே முகம் தெரியும்
கல்லறைக்குக்
கிட்டவர உங்கள் கண்தெரியும்
வீசுகின்ற
காற்றினிலும் மூச்சுக் கலந்து
எம்மை உயிப்பிக்கும்.
இனிக்
கூற்றெனவே வரும்பகையைக்
குடிப்போம்
வென்றிடுவோம்!

புதுவை இரத்தினதுரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போர்க்கால இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்த புதுவை



## புதுவை இரத்தினதுரையின் "நினைவழியா நாட்கள்" கவிதை நூலுக்கு தமிழீழத் தேசியத்தலைவர் திரு.வே. பிரபாகரன் அவர்கள்வழங்கிய வாழ்த்துரை

காலத்தின் மூச்சாக வாழ்வியக்கம் அசைகிறது. அந்தக் காலத்தையும், அந்தக் காலமாக விரியும் வாழ்வையும், அந்த வாழ்வாக அவிழும் மனித இன்னல்களையும், விளைச்சல்களையும் நுட்பமாகச் சித்தரிக்கும் கலை இலக்கியங்கள் உன்னதமானவை.

தான் பிறந்த மண், தான் வளர்ந்த சூழல், தான் உறவு கொள்ளும் சமூகம், தான் வாழும் காலம் என்ற ரீதியில் வாழ்க்கையே ஒரு கலைஞனது படைப்புத் தளமாக அமைகிறது. வாழ்வின் புறநிலை உண்மைகளை மூலப்பொருளாக எடுத்துக் கலைப்பொருள் படைப்பவனே சிறந்தகலைஞன்.

புதுவை அண்ணா என நாம் அன்பாக அழைக்கும் புதுவை இரத்தினதுரை ஒரு சிறந்த கலைஞர்.

அவர் இந்த மண்ணைக் காதலிப்பவர். இந்த மண்ணின் மக்களை நேசிப்பவர். இந்த மண்ணின் விடுதலையை இலட்சியமாக வரித்துக்கொண்டவர். மண், மக்கள், விடுதலை என்ற முப்பொருளை மூலப்பொருளாக எடுத்துக் கலைப்பொருள் படைப்பவர். கவிதை அவரது கலைப் பொருள். அந்தக் கவிதையில் அவருக்கு இங்கு எவரும் நிகரில்லை.

புதுவை இரத்தினதுரையின் கவிதையில் ஒரு புதுமை இருக்கிறது; அழகும் ஆழமும் இருக்கிறது; ஒரு இசை இருக்கிறது; ஒரு ஈர்ப்பு சக்தி இருக்கிறது.

இந்தத் தேசத்தின் பண்பாட்டு மரபில் ஆழவேரோடி நிற்பதால் அவரது கவிதைக்கு அலாதியான வீச்சும், வலிமையும் உண்டு. சதையும் இரத்தமுமாக இந்த மண்ணின் பண்பாட்டு படிமங்கள் அவரது கவிதைக்கு உயிர்வடிவம் கொடுக்கிறது.

மனித அவலங்களையும் ஏக்கங்களையும் படிமக் காட்சிகளாகச் சித்தரித்து, இனவாதக் கொடூரத்தின் அராஜகத்தை அழுத்தமாக உணர்த்திக் காட்டுவதுடன் ஒடுக்குமுறைக்கு எதிரான ஆவேசமிக்க கொதிப்புணர்வையும் அவரது கவிதை தட்டி எழுப்புகிறது.

புதுவை இரத்தினதுரையின் படைப்பிலக்கியம் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு உந்துசக்தியாக இருக்கிறது. கவிதை உலகில், போர்க்கால இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்துக் கொடுத்த பெருமை அவரைச் சாரும். அவரது இலக்கியப் பணியின் முக்கியத்துவமும் இதில்தான் தங்கியிருக்கிறது.

எமது தேசத்தின் போராட்ட வாழ்வையும் வரலாற்றையும் தமிழீழ இலக்கிய இயக்கத்திற்குள் முதன்மைப்படுத்தி, தமிழ்த் தேசிய பிரக்ஞையை விழிப்புறச் செய்வதில் அவரது பங்கு கணிசமானது. விடுதலைக்காக ஏங்கும் தமிழினத்தின் ஆன்மதாகமாக வெளிப்பாடு காணும் அவரது கவிதை, போர்க்கால இலக்கியத்திற்கு புதுமையும் செழுமையும் கொடுக்கிறது.

புதுவை இரத்தினதுரை இலக்கியப் படைப்பாளியாக மட்டுமன்றி, ஒரு இலட்சியப் போராளியாகவும் எமது விடுதலை இயக்கத்தில் இணைந்து நிற்பவர். இலக்கியப் படைப்பிலும், இலட்சியப் பயணத்திலும் அவரது பணி சிறப்புடன் தொடர எனது நல்லாசிகள்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாலைவனத்திடையே ஒரு பசுஞ்சோலை

யாழ்ப்பாணத்தில் இருந்து 40கி.மீற்றர் தூரத்தில் உள்ள மணற்காடு பெயருக்கு ஏற்ப "மணல்காடுதான்". எங்கும் எதிலும் மணலாக இருப்பதனாலும், கடற்காற்றினால் மணல் அள்ளப்பட்டு மூடப்பட்டுக் கொண்டிருப்பதனாலும், இந்த நிலம் பயிர்ச் செய்கைக்கு உதவாது.

எனினும் இந்த மண்ணை வளமுள்ள மண்ணாக மாற்றவும், கடலரிப்பைத் தடுக்கவும். மணல் காற்றுக்கு அள்ளுண்டு போகாமல் காப்பாற்றவும், சூழல் பாதுகாப்பினை ஏற்படுத்தவும், விறகுத் தேவையினை ஓரளவு பூர்த்தி செய்யவும், பொருத்தமான செயற்பாடு இப்பகுதியில் மரங்கள் நடுவதுதான் எனக் கண்டறியப்பட்டது.

மரம் நடுவது என்றால் எந்த மரத்தினை நடுவது? அதனால் ஏற்படக்கூடிய பொருண்மிய நன்மைகள் என்ன? என்பவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும் போது சவுக்கு மரநடுகையே மிகப் பொருத்தமானது என முடிவு செய்யப்பட்டது.

அதன் அடிப்படையிலேயே மணற்காட்டின் வெட்டவெளியான 9300 ஹெக்ரேயருக்கு மேற்பட்ட நிலத்தில் 1976..1985ம் ஆண்டு வரையான காலப்குதியில் 410 ஏக்கர் நிலப்பரப்பில் சவுக்கு மரநடுகை மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை வீதியால் வல்லை வெளி தாண்டி நெல்லியடி, மந்திகை சந்தியூடாக வல்லிபுரக் கோவில் வீதி வழியே செல்லும்போது மணற்காட்டுச் சந்திக்கு வருகிறோம்.

களைத்து விழுந்து வருகிறவர்களுக்கு தாகசாந்தி செய்ய சிறிய ஆச்சிரமம் போல் அந்தக் கடைதான் கடைசி இலக்கு. அப்பால் இறங்கினால் மணற்காட்டுக்கான பாதை.

மண்பானைகளில் சில்லிட்டுப் போய் இருக்கும் தண்ணீரைச் சுவைத்துக் கொண்டு பாதையில் இறங்கினால் புதிய அனுபவம் தான். கண்ணைக் கவரும் அதி அற்புதமான இடத்துக்கு செல்லும் பாதையும் அற்புதம் தான். குதிரையில் சவாரி செய்வதுபோல் பள்ளங்களில் விழுந்தும் மேடுகளில் ஏறி இறங்கியும் பயணப்பட்டு 1 1/2கி. மீற்றர் தூரம் பயணம் செய்தால் சவுக்குத் தோப்பு.... அட்டகாசமான அதன் எழில்.....

கால் புதைய சவுக்குத் தோப்பினூடாக நடப்பது ஒரு சுகமான அனுபவம். அதைவிட நீண்டகாலத் தழும்புகளுடன் ஒல்லாந்தர் காலத்து தேவாலயமும், சிதையுண்டு போயிருக்கும் கல்லறைகளும். ஒரு தடவை போய்த்தான் பாருங்களேன்.

1976ம் ஆண்டில் நடப்பட்ட சவுக்கு மரங்கள் நெடு நெடுவென வளர்ந்து நாங்கள் யாருக்கும் அஞ்சமாட்டோம் என நெஞ்சை நிமிர்த்தி நிற்பதுபோல் நிற்கின்றன. உயரம் கிட்டத்தட்ட 40'..50' வரை இருக்கும். முழுவதுமாகச் சவுக்கு நடப்பட்டால் மணற்காட்டின் 9300 ஹெக்டர் நிலப்பரப்பையும் இவ்விதம் கற்பனை செய்து பாருங்கள்! எப்படி இருக்கும்?

இச்சவுக்கு மரம் மணற்காட்டில் வளர்க்கப்பட்டதன் முக்கிய நோக்கம் காற்றுத் தடைக்காகவும், நகரும் மணல்மலைகளை நகராமல் தடுப்பதற்கும், காலப்போக்கில் இந் நிலத்தினை வளமடையச் செய்வதற்குமேயாகும்.

இத்திட்டம் மேற்கொள்ளப்படும் போது காலத்துக்குக் காலம் "தெரிந்து அகற்றும் நடவடிக்கை" மூலம் ஒன்று விட்ட ஒரு மரம் அகற்றப்படுவதோடு அகற்றப்படாது இருக்கும் மரத்தின் கிளைகளும் அகற்றப்படுவதற்கு திட்டமிடப்பட்டு இருந்தது. இன்று யாழ் குடா நாட்டில் நிலவும் விறகுத்தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய இவ்விதம் வெட்டப்படும் விறகு உதவும்.

இதன் மூலம் மேலும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயிரக்கணக்கான ஏக்கர் சவுக்கு மணற்காட்டுப் பிரதேசத்தில் மீள் நடுகை செய்ய நிதி பெறக்கூடிய தாயிருக்கும். இப்பாரிய நடுகைத் திட்டத்தினை அடிப்படையாக வைத்து ஆளணி, தொழில் நுட்பம் மற்றும் இயற்கையின் தாக்கம் என்பவற்றை அறிந்துகொள்ள முன் னோடியாக தமிழீழ பொருண்மிய



கடற்படைத் தளபதி சூசை

மேம்பாட்டு நிறுவனம் இப்பகுதியில் கடந்த ஆண்டு கடற்புலிகள் விசேட தளபதி சூசையின் ஆதரவுடன் மீண்டும் சவுக்கு நடுகையை பரீட்சார்த்தமாக ஆரம்பித்தது.

1992ல் கால போக மழையுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கடற்புலிகளின் நிதியூட் டத்துடன் 5 ஏக்கரிலும், வட மராட்சி தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் கொத் தணியின் நிதியூட்டத்துடன் 5 ஏக்கரிலும் சவுக்கு மரநடுகை மேற் கொண்டது. தற்போது இது பெரும் வெற்றியளித்து, காண்போர் மனதில் நம்பிக்கையூட்டுகின்றது.

இதனால் 1993ல் கடற்புலிகளின் நிதியூட்டத்துடன் மேலும் 15 ஏக்கரிலும் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தாணியின் நிதியூட்டத்துடன் மேலும் 15 ஏக்கரிலும் சவுக்கு நடுகை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அடுத்த வருடம் நூற்றுக்கணக்கான ஏக்கர்களில் சவுக்கு நடுகை மேற்கொள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

வெளிநாடுகளில் குறிப்பாக இந்தியாவில் தமிழ் நாட்டின் கரையோரங்களில் இவ்விதம் சவுக்கு மரநடுகையும், தெரிவு செய்து மரங்களை வெட்டி விற்பனை செய்து வருமானம் பெறலும் பெரும் விருத்தி பெற்ற கைத்தொழிலாக நடைபெற்றுவருகிறது. இவ்விதமான பெரும் வளர்ச்சி எமது பிரதேசத் திலும் ஆக்கம் பெறுவது நம்பிக்கைக் குரிய ஒரு விடயமாகும்.

இவ் விதமான பொருண்மிய நலன்கள், கடற்கரையோரப் பாதுகாப்பு, மண்வளப் பாதுகாப்பு என்பவற்றுடன் இப் பிரதேசம் ஒரு சுற்றுலா மையமாக விளங்கும் என்பதிலும் ஐயமில்லை.

வெண் மணற் கடற்கரையும், நிழல் தரும் சவுக்கு மரங்களும் அதன் அமைதியும், கானமிசைக்கும் பறவைகளும், சுற்றுலாப் பிரியர்களுக்கு நிறைவைத் தரும் விடயங்களாகும்.

எதிர்கால சுதந்திரத் தமிழீழத் தில், வளர்ச்சியும், வனப்பும் மிக்க இடமாக மணற்காடு அமையும் என்பதில் சந்தேகமில்லை.

நன்றி: ஆதாரம்



## தமிழீழத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள

# புதிய இனப் பப்பாசி

குட்டையான, மிகப்பெரிய பழங்களைத் தரக்கூடிய ஒரு புதிய இனப் பப்பாசி மேஜர் பிரதாப் செட்டி மாதிரிப் பண்ணையில் பயிரிடப்பட்டுள்ளது.

நிலத்திலிருந்து ஒன்றரைஅடி உயரத்திலேயே காய்கள் இருப்பதும், 5, 6 கிலோகிராம் நிறையுள்ள பழங்களைத் தருவதும் இப் பப்பாசி இனத்தின் சிறப்பம்சங்களாகும்.

நட்டு மூன்றாம் மாதத்தில் பூக்கள் உருவாகி

எட்டு மாதப்பருவத்தில் பழம் கிடைக்கும். இந்த நல்லினம்

கேணல் கிட்டு அவர்களினால் வெளிநாட்டிலிருந்து அனுப்பப்பட்டதாகும். இந்த மூத்த தளபதியின் நினைவைச் சுமப்பதாகவும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டில் அவர் கொண்டிருந்த ஆர்வத்தைப் பிரதிபலிக்கும் வண்ணமாகவும் இந்தப் பப்பாசி இனம் தமிழ் ஈழ மக்களிற்குப் பொருண்மிய நலன்களைத் தரும் ஒரு இனமாக விளங்கும் என்பது எமது நம்பிக்கையாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிஞ்சுகள் சுமந்த பெருஞ்சுமை



மணலாறு காட்டுப் பகுதியில் அமைந்துள்ள முகாம் ஒன்றில் 25.07.93 அன்று மருத்துவக்குழுவினராகிய நாம் தாக்குதல் ஒன்றிற்கு எம்மை தயார்படுத்திய நிலையில் காத்திருக்கின்றோம். கிட்டத்தட்ட நேரம் காலை பத்து மணியிருக்கும். மருத்துவ சேவையின் முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நாம் அயலிலுள்ள கிராமத்திற்குச் சென்று சில ஆயத்தங்கள் செய்ய வேண்டும். அதற்கு வெளிக்கிட்டு நிற்குமாறு அறிவித்தல் வந்தது. இதற்காக நானும் மருத்துவப் போராளிகளுமாக மொத்தம் பதினொருபேர் எமது பயணத்தை ஆரம்பித்து பிற்பகல் ஒரு மணிக்கு அக்கிராமத்தை வந்தடைதோம். அங்கு எமது தேவையின் சில முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொண்டு அத்துடன் சில விசேட ஆயத்தங்களையும் செய்யத் தொடங்கினோம். அதே நேரத்தில் அவ்விடத்திற்கு மாணவரமைப்பு உறுப்பினர்கள் சிலரும் அத்துடன் உதவியாளர்கள் கொஞ்சப்பேரும், மருத்துவ சேவையின் போது தேவைப்படும் உதவிக்காக ஒன்று திரட்டப்பட்டு, கொண்டுவரப் பட்டிருந்தனர். எமது முன்ஆயத்தங்கள் அனைத்தும் அன்று இரவு ஒன்பது மணியளவில் முடிவடைந்ததும், நாமும் எமக்கு உதவிக்காக வந்திருந்த அனைவருமாக எமது கடைசி நிலை மருத்துவ முகாமுக்குச் சென்றோம். அங்கு சென்றதும் மிகவும் சுறுசுறுப்பாக வேலைகள் தொடங்கின. அனைவரும் ஒன்றுசேர்ந்து வீட்டில் உள்ள சாமான்களை ஒதுக்கி, துப்பரவு பண்ணி, எமது மருத்துவப் பொருட்களை எடுப்பதற்கு வசதியாக வரிசைக் கிரமத்தில் ஒழுங்குபடுத்தி அடுக்கினோம். அதற்கிடையில் வெளிச்ச வசதி செய்யப்பட்டது. வீடு துப்பரவாக்கப்பட்டதும் பாய்கள் விரிக்கப்பட்டு, தலையணைகள் போடப்பட்டன. நோய் நிவாரணிகள், உயிர்காக்கும் மருந்துகள், ஒரு மூலையிலும் 'சேலைன்', 'குளுக்கோஸ்' போன்றன இன்னுமொரு மூலையிலும் வைக்கப்பட்டு பின்பு அவை அனைத்தும் சகல மருத்துவப் போராளிகளுக்கு மட்டுமல்ல, அங்கு வந்திருந்த மாணவர்கள் சிலருக்கும் சொல்லிக் கொடுக்கப்பட்டன. இது காயமடைந்து வருபவர்களுக்கு சிகிச்சையை தாமதமின்றிச் செய்ய வழிவகுக்கும். இவ்வாறு சொல்லிக் கொடுக்கும் போது அதில் மாணவர்கள் சிலர் காட்டிய ஆர்வம் போராளிகளின் உயிரைக் காப்பாற்றுவதில் அவர்கள் காட்டிய அதி தீவிரத்தை எடுத்துக் காட்டியது. இது மனதில் இனந்தெரியாத ஒரு சந்தோஷ உணர்வை ஏற்படுத்தியது. இதிலும் குறிப்பாக, இரு சிறுவர்கள். அவர்களின் பால் வடியும் முகம், கொழு கொழுவென்ற கன்னங்கள், உருண்ட விழிகள், மழலைச் சிரிப்பு அத்தனையும் அவர்களுக்கு வயது ஒன்பது பத்தைத் தாண்டியிராது என்று எடுத்துச் சொல்லியது. மேலும் அவர்கள் போட்டிருந்த சாரணர் உடை அவர்களை மேலும் எடுத்துக் காட்டியது. அவர்கள் இருவரும் மிகவும் சுறுசுறுப்பாக செயல்பட்டார்கள். இத்தனைக்கும் அன்று வீட்டில் பெற்றோர்களுக்கு எங்கு போகிறோம் என்று சொல்லாமல் வந்தவர்கள் தான் அவர்கள். இருந்தும் 'அம்மாவுக்குச் சொல்லாமல் வந்துவிட்டேனே; தேடுவாவோ' என்ற பதற்றமோ அந்தரமோ இன்றி சாதாரணமாகச் செயல்பட்டார்கள். அத்துடன் தாக்குதல் தொடங்கினால் நாம் நிற்கும் இடத்திற்கு சில வேளைகளில் 'ஷெல்' வரலாம்; கடலிலிருந்து பீரங்கித் தாக்குதல் நடத்தலாம்; ஏன் வானில் இருந்து கூட தாக்குதல் நடத்தலாம். ஆனால் அவர்கள் எதுவித பயமோ, கவலையோ இன்றி சிரித்த முகத்துடன் மிக உற்சாகமாக வேலைகளைச் செய்துகொண்டிருந்தார்கள்.

நான் சிறிது ஓய்வு எடுப்பம் என்று நினைத்து, அவ்வீட்டின் முற்றத்திலுள்ள மாமரத்தின் கீழ் இருந்த ஒரு கட்டிலில் வந்து அமர்ந்தாலும், எனது கண்கள் அவ்விருவரையுமே பார்த்துக் கொண்டிருந்தன. அப்போது, 'இளம் கன்று பயம் அறியாது' என்பது எவ்வளவு உண்மை என்பதைப் புரிந்தேன். அவர்கள் வரிசையாக விரிக்கப்பட்டிருந்த பாய்களுக்கு தலையணைகள் சரிசெய்து போட்டார்கள். வீட்டினைத் திரும்பத் திரும்பக் கூட்டினார்கள். பஞ்சு உருட்டினார்கள். என்னவெல்லாம் தங்களால் செய்ய இயலுமோ அதையெல்லாம் செய்துகொண்டிருந்தார்கள்.

இப்ப நேரம் இரவு 12.05.

**சாந்தி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாக்குதல் சத்தங்கள் கேட்கத் தொடங்கிவிட்டது. நாம் வழமையை விட கொஞ்சம் உசாரானோம். அவர்களும் எங்களுடன் சேர்ந்து செயற்பட்டார்கள். இறுதியாக சகல ஒழுங்கமைப்பும் சரிபார்க்கப் பட்டுவிட்டது. அது திருப்திகரமாக இருந்தது. இனிக் காயக்காரர்கள் வர இரண்டு மணித்தியாலங்கள் என்றாலும் எடுக்கும். எல்லோரும் கொஞ்ச நேரம் படுத்தால் நல்லது என்று நினைத்து, "பிள்ளைகள் 'சென்றி' ஒன்றை விட்டிட்டு எல்லோரும் படுங்கோ; நானும் படுக்கப்போறன். 'கேஸ்' வர எழும்புவம்" என்றேன். அநாவசியமாக 'லைற்' எரிவது சிலவேளை வான்தாக்குதலுக்கு வழிவகுக்கும் என்பதால் 'ஜெனரேற்றரை' நிற்பாட்டிவிட்டு, 'பெற்றோமக்ஸ்' ஒன்று கொழுத்தி வைக்கப்பட்டது. ஒரு பெண் போராளி சென்றியில் நின்றார். நான் முற்றத்து மாமரத்தின் கீழ் உள்ள கட்டிலில் படுக்க எத்தனித்த போது பார்த்தால், அவர்கள் இருவரும் இன்னமும் ஓயவில்லை. உடனே அவர்களை என்னருகில் கூப்பிட்டு, "அப்பன் நீங்க இரண்டு பேரும் கொஞ்ச நேரம் படுத்தால்தான் காயக்காரர் வர உசாராக வேலை செய்யலாம். ஒரு பாய் எடுத்துவந்து, இப்படி அன்ரியின்ரை கட்டிலுக்குக் கிட்ட போட்டிட்டுப் படுங்கோ; 'கேஸ்' வந்ததும் அன்ரி உங்களை எழுப்புறன்." என்றேன். ஆனால் அவர்கள் அதற்கு உடன்படவில்லை. "வேண்டாம் அன்ரி, நீங்க படுங்கோ; நாங்க இப்படி இருக்கிறம்." என்று கூறி கட்டில் கால்மாட்டில் இருவரும் இருந்து விட்டார்கள். என் நெஞ்சில் ஒரு திகைப்பு. இப்படி ஒரு தீவிரமா? இது எப்படி எங்கிருந்து வந்தது? நிச்சயமாக எமது மண்ணிலிருந்து வந்ததுதான், என நினைத்துவிட்டு "சரி தம்பியவை என்னால ஏலாது; நான் படுக்கிறன்." என்று சொல்லிப் படுக்கவும், "அன்ரி நீங்கள் படுங்கோ, காயக்காரர் வர நாங்கள் எழுப்புறம்." என்றார்கள். இது எப்படியிருக்கு? நான் சொன்னதையே திருப்பிச் சொல்லி விட்டார்கள்.

இன்று இவர்கள் வீட்டில் இருந்திருந்தால் இப்போது இவர்களுக்கு சாமம். ஆனால் காலத்தின் தேவையை உணர்ந்தபடியால் எங்களுக்கு மட்டுமல்ல அவர்களுக்கும் இன்று பகல். இதற்கிடையில் இருவரும் எழுந்து சென்று விறாந்தையில் கொழுத்தி வைத்திருந்த 'பெற்றோமாக்ஸ்'க்கு காற்று அடித்துவிட்டு வந்திருந்தார்கள். நான் சற்று அயர்ந்துவிட்டேன். திடுக்கிட்டு கண் விழித்துப் பார்த்தால் நேரம் அதிகாலை 1.35. கண்ணைக் கசக்கி விட்டு, எனக்கு அருகில் இருந்த இரு குழந்தைகளையும் பார்த்தால் காணவில்லை. எழுந்து ஒரு சில அடி வைத்துத் தேடிப் பார்த்தால், என்ன அதிசயம். வீட்டு விறாந்தையில் வைத்திருந்த 'பெற்றோமக்ஸ்'க்கு மிக அருகில் அதன் இரு பக்கங்களிலும் தலையணையோ அன்றி பாயோ எதுவுமின்றி ஆழ்ந்த நித்திரையிலிருந்தார்கள். கடவுளே கொஞ்சம் அசைந்திருந்தால், இருவருக்கும் எரிகாயம்தான். நான் ஓடிச்சென்று 'பெற்றோமாக்ஸை" அவர்களுக்கிடையிலிருந்து மெதுவாகத் தூக்கி சற்றுத் தொலைவில் வைத்துவிட்டு, அவர்களையே பார்த்துக் கொண்டு நின்றேன். அங்கு அவர்களின் மனத் தீவிரத்தை, உறுதியை, அவர்களின் உடல்நிலை வென்று, தனது அந்த நேரத்துக் கடமையைச் செய்து கொண்டிருந்தது. ஒன்று மட்டும் எனக்குப் புரிந்தது. அவர்கள் படுக்கக்கூடாது என்று முடிவு கட்டி, உறுதியாக இருந்திருக்கிறார்கள். ஆனால் தங்களை

> 'மக்கள் தங்களது உரிமைகளைத் திரும்பப் பெற வேண்டும் என்று தீர்மானித்து விட்டால் அவர்களை எந்தவொரு தாக்குதலும் அழித்து விட முடியாது.'
>
> - பிடல் காஸ்ரோ -

அறியாமலேயே நித்திரையாகி விட்டார்கள் என்பதை, அவர்கள் படுத்திருந்த கோலம் எடுத்துக் காட்டியது.


அதன் பிறகு எனக்கு நித்திரை வர மறுத்தது. ஒவ்வொரு வினாடியும் காயமடையும் போராளிகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

அதிகாலை இரண்டு மணியளவில் காயமடைந்தவர்கள் வரத் தொடங்கிவிட்டார்கள். முதலில் நான்கு காயக்காரர்கள் கொண்டுவரப்பட்டார்கள். பிறகு என்ன, எமது உயிர் காக்கும் பணி தொடர்ந்து கொண்டேயிருந்தது. அதில் இவர்கள் செய்த பணி அப்பப்பா! காயமடைந்த போராளிகளுக்குத் தலையணையை அணைத்து வைத்தார்கள். அவர்களை வாகனத்திலிருந்து இறக்க, ஏற்ற உதவினார்கள். சேலைன், குளுக்கோஸ் ஏறிக்கொண்டிருக்கும்போது அதைத் தாங்கிப் பிடித்தார்கள். காயத்துக்கு மருந்து கட்டும்போது 'ரோச்' பிடித்தார்கள். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, காயமடைந்த போராளிகளுக்கு அருகில் அமர்ந்திருந்து பரிவாக, ஆறுதலாக வீசிக்கொண்டிருந்ததுதான் இன்றும் என் கண்ணில் நிற்கிறது. நிச்சயமாக இச்செயல், அன்று உடலால் வேதனைப்பட்ட எம் போராளிகளுக்கு உளவேதனையைப் போக்கும் ஒரு மருந்தாக இருந்திருக்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. அன்று அவர்களுக்கு நித்திரையில்லை; ஓய்வுமில்லை. அத்துடன் தங்கள் வயதிற்குமேலாக வேலை செய்திருக்கிறார்கள். இருந்தும் அடுத்த நாள் பகல் பார்த்த போது, அவர்கள் முகத்தில் சோர்வோ அன்றிக் களைப்போ தெரியவில்லை. இது, காலத்தின் தேவையை உணர்ந்த அவர்களின் மனநிலையை எடுத்துக் காட்டியது; மண்ணில், போராளிகளில் கொண்ட தீராத பற்றை எடுத்துக் காட்டியது. இவ்வாறு பூக்களும் பிஞ்சுகளும் மண்ணை நேசிக்கும் போது.... நிச்சயம் விடுதலை மிக மிக விரைவில்தான்.

**நன்றி: வெளிச்சம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பன்முகக் கலைஞன் கிட்டு

கிட்டு ஒரு போராளியாக, களத்தில் தளபதியாக மட்டும் இருக்கவில்லை. அவர் ஒரு பன்முகத் திறமையின் கூட்டு வடிவமாகத் திகழ்ந்தார். கிட்டு ஒரு கலைஞர். ஆற்றல் படைத்த எழுத்தாளர். சிறந்த பதிப்பாளர். ஒப்பற்ற புகைப்பட நிபுணர். இப்படிப் பல துறைகளில் அவர் சிறந்து விளங்கினார். கிட்டு தமிழ் நாட்டில் தங்கியிருந்த பொழுது அவருடைய சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் கொடுத்தார். தமிழீழப் போர்க்களச் செய்திகளையும், போராளிகளின் தியாகங்களையும் மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காகத் 'தமிழீழம்' என்ற பெயரில் ஒரு பத்திரிகையைத் தொடங்கினார். மாதம் ஒருமுறை வெளிவந்த இவ்விதழ் தமிழ் மக்களைப் பெரிதும் கவர்ந்தது.

'தமிழீழம்' இதழானது தமிழ் நாட்டு மக்களுக்கு ஒரு வித்தியாசமான பத்திரிகையாகக் காட்சியளித்தது. திரும்பத் திரும்ப அரைத்த மாவையே அரைப்பதைப் போல ஒரே மாதிரியான கதைகள், கட்டுரைகள் அல்லது முக்கால் பொய்யும் கால்வாசி கற்பனையும் கலந்து எழுதப்படும் செய்திகளைக் கொண்டே பக்கங்களை நிரப்பி வெளிவந்துகொண்டிருக்கும் தமிழக பத்திரிகைகளுக்கு நடுவில் 'தமிழீழம்' பத்திரிகை புதுமையானதாகவும், புரட்சிகரமானதாகவும் காட்சி தந்தது.

இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற காலத்தில் இலண்டனில் போர்க்களச் செய்திகளை மட்டும் தாங்கிச் சில பத்திரிகைகள் வெளியாயின. அத்தகைய பத்திரிகைகளுக்கு மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு இருந்தது. அதைப்போல, தமிழீழப் போர்க்களத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளை முற்றிலுமாகத் திரித்தும் மறைத்தும் வானொலி, தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகள் வெளியிட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில், உண்மையான நிகழ்ச்சிகளைத் தாங்கி வெளிவந்த 'தமிழீழம்' தமிழ் உணர்வாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. வீரமரணம் அடைந்த போராளிகளைப் பற்றிய குறிப்புக்களைச் சுவைபடவும், வீரம் செறிந்த வகையிலும் கிட்டு எழுதினார். ஒவ்வொரு இதழிலும் வெளிவந்த இந்தக் குறிப்புக்கள் அனைவரின் உள்ளங்களையும் தொட்டன. கிட்டுவைத் தவிர வேறு யாரும் இதை எழுத முடியாது. ஏனென்றால் ஒவ்வொரு போராளியைப் பற்றியும் அவர்களுடைய சாதனைகள் பற்றியும் அவருக்குத்தான் தெரியும். அவர் எழுதிய இந்தக் கட்டுரைகளைப் படித்துவிட்டு நான் ஒரு முறை அவரிடம், "இயக்கம் தோன்றிய காலத்திலிருந்து நடைபெற்ற பல முக்கிய நிகழ்ச்சிகள், களத்தில் வீரமரணமடைந்த முக்கிய தோழர்கள் பற்றிய விபரங்கள் மக்களுக்குத் தெரியாது. அவற்றை எழுத உங்களால் மட்டுமே முடியும். நீங்கள் அதை எழுதாவிட்டால் பல வரலாற்றுக் குறிப்புகள் அடியோடு மறைந்துபோகும்." என்று கூறினேன்.

இந்த உரையாடலின் விளைவாக 'கிட்டுவின் டைரி' என்ற தலைப்பில் தேவி பத்திரிகையில் தொடர்ந்து கிட்டுவின் பல கட்டுரைகள் வெளியாயின. களத்தில் வீரமரணமடைந்த சீலன், செல்லக்கிளி, சங்கர், பண்டிதர், விக்டர் போன்ற பல தளபதிகளின் வரலாறுகளை உள்ள நெகிழ்ச்சியுடன் கிட்டு எழுதினார்.

துப்பாக்கி முனையில் மட்டுமல்

போராளிகளுடன் கிட்டண்ணா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லாமல் 'பேனா' முனையிலும் அவர் வல்லவர் என்பதை இந்தக் கட்டுரைகள் தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரிவித்தன.

தமிழீழத்தில் இந்திய இராணுவம் புரிந்த சொல்லொணா அட்டூழியங்கள் பற்றிய உண்மையான நிகழ்ச்சிகளைத் தொகுத்து 'பவான் பேப்பர்ஸ்' என்ற தலைப்பில் 20 பிரசுரங்களை ஆங்கிலத்தில் கிட்டு வெளியிட்டார். உள்ளடக்கத்தில் மட்டுமல்லாமல் பதிப்பிலும் அவைகள் மிகத் தரமானவையாக அமைந்திருந்தன. 'யூ டூ இந்தியா' (You too India) என்ற தலைப்பிலும் ஒரு பிரசுரம் வெளியிடப்பட்டது. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இந்தப் பிரசுரங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. இந்திய அரசின் முகத்திரையை இந்த வெளியீடுகள் கிழித்தெறிந்தன.

விடுதலைப் புலிகளின் பன்னாட்டுச் செயலகத்தின் பொறுப்பை ஏற்றுக் கிட்டு இலண்டனுக்குச் சென்றபின்பும் அவருடைய எழுத்துப் பணிகள் தொடர்ந்தன. இலண்டனில் இருந்து 'களத்தில்' என்னும் பத்திரிகை மாதமிருமுறை வெளிவரத் தொடங்கியது. இவ்விதழ் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கு தமிழீழப் போர்க்களத்தின் உண்மை நிலவரங்களைப் படம்பிடித்துக் காட்டிற்று.

பிரான்சிலிருந்து 'எரிமலை' என்னும் மாத இதழ் இதுவரை நிழற்படப் பிரதியாகவே வெளிவந்து கொண்டிருந்தது. இதற்குப் புது மெருகூட்டி பல வண்ணங்களுடன் அச்சிட்டுக் கலை, பண்பாட்டு, சமூக மற்றும் அரசியல் ஏடாக மாற்றினார். இதற்கு ஈடான தமிழிதழ் தமிழ்நாட்டிலிருந்து கூட இதுவரை வெளிவரவில்லை. கனடாவிலிருது மாதம் இருமுறை வெளிவந்த 'உலகத்தமிழர்' பத்திரிகையையும் சிறப்பான முறையில் வெளிவர ஆவன செய்தார். உலகம் முழுவதும் உள்ள பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்களைப் பற்றிய செய்திகள், தமிழீழப் போராட்டச் செய்திகள் ஆகியவை இந்த இதழில் வெளியாயிற்று.

நோர்வே நாட்டிலிருந்து ஆண்டுக்கு மும்முறை வெளிவரும் 'சுதந்திரதாகம்' என்னும் பத்திரிகை புதுப்பொலிவுடன் வெளிவரத் தொடங்கிற்று. தமிழீழப் போராட்டம், அதன் பல்வேறு வடிவங்கள், தமிழீழம் எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகள் போன்றவை குறித்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் இப் பத்திரிகையில் தொகுத்து வெளியிடப்பட்டன. வெளிநாட்டிலிந்து தமிழ்ப் பத்திரிகைகளை வெளியிடுவதே பெரும் சாதனையாகும். பத்திரிகைத் துறையில் பெருமளவு முன்னேறிவிட்ட மேலை நாடுகளில் வெளிவரும் பத்திரிகைகளுக்கு ஈடு கொடுத்து, செய்திகளிலும், பதிப்பிலும் தரமான பத்திரிகையை வெளியிடுவதென்பது எவ்வளவு பெரிய சாதனை என்பதை நினைத்துப் பார்த்தால் மலைப்புத் தட்டுகிறது.

ஐரோப்பிய மக்கள் தமிழீழப் போராட்டம் பற்றி அறிந்து கொள்ளச் செய்வது போராட்டத்திற்குப் பலம் சேர்க்கும் என்பதை உணர்ந்த கிட்டு, ஆங்கிலம், பிரான்சு, டேனிஷ், இலத்தீன், நோர்வேஜியன், ஜெர்மன் ஆகிய மொழிகளில் தமிழீழ விடுதலைப்



போராட்டம் பற்றி வெளியீடுகள் வெளிவர ஆவன செய்தார். பிரான்சிய மொழியில் 'தமிழ்' என்னும் பத்திரிகையையும், ஜெர்மன் மொழியில் 'வணக்கம்' என்னும் ஓர் இதழையும், நோர்வேஜியன் மொழியில் 'தமிழீழம்' என்னும் ஓர் இரட்டை ஏட்டையும் தொடர்ந்து வெளிவரச் செய்தார்.

சுவிட்சலாந்து நாட்டில் 'ஈழநாதம்' உள்ளூர் வானொலிச் சேவையைத் தொடங்கி வைத்தார். கனடாவில் உள்ள டொரண்டோ போன்ற நகரங்களில் உள்ளூர் வானொலிச் சேவைகள் கிட்டுவின் முயற்சியால் தொடங்கப்பட்டன. நவீன உலகில் சிறந்த பிரச்சார உத்தியாக வளர்ந்துவரும் ஒளிப் பேழைத் பதிவுத் துறையிலும் அவர் அடியெடுத்து வைத்தார். கிட்டு, யாழ்ப்பாணத்தில் இருந்த பொழுது 'நிதர்சனம்' என்ற புலிகளுடைய தொலைக்காட்சிச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதைப் போல வெளிநாட்டுத் தமிழர்களுக்காகத் 'தரிசனம்' ஒளிப் பேழையையும் (வீடியோப் பத்திரிகையும்) பிரான்சிலிருந்து வெளிவரச் செய்தார். இதற்காக ஒளிப்பதிவுத் துறையில் பல நுணுக்கங்களை அவர் கற்றார். படக் கலவையில்

மக்களுடன் தளபதி கிட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(வீடியோ மிக்சிங்) அவர் கைதேர்ந்த நிபுணராகத் திகழ்ந்தார்.

ஐரோப்பிய நாடுகளில் அமைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் அலுவலகங்களில் குறிப்பிட்ட தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொண்டால் அன்றைய தமிழீழச் செய்திகளைக் கேட்பதற்கு ஏற்பாடு செய்தார். புலிகளின் வானொலிகளும், தொலைபேசிகளும் அன்றாடம் கூறிய செய்திகள் யாரால் தொகுத்துக் கூறப்படுகின்றன என்பது எனக்குத் தெரியாது. நான் சுவிட்சர்லாந்து சென்றிருந்த பொழுது கிட்டு என்னிடம் இந்தச் செய்திச் சேவை பற்றிய எனது கருத்தைக் கேட்டார். பொதுவாக அதைப் பாராட்டினாலும் அதிலுள்ள சிறு குறைபாடுகளை நான் சுட்டிக் காட்டினேன். 'அவற்றைத் திருத்திக் கொள்கிறேன்' என்று அவர் கூறிய பொழுதுதான் அவரே அந்தச் செய்தித் தொகுப்பை எழுதுகிறார் என்பதை உணர்ந்தேன். பல்வேறு வேலைகளுக்கு நடுவே ஒவ்வொரு நாளும் என்ன செய்திகள் மக்களுக்குக் கூறப்படவேண்டும் என்பதை மிக கவனமாகத் தொகுத்து எழுதும் வேலையையும் கிட்டுவே செய்கிறார் என்பதை நான் அறிந்தபொழுது வியப்படைந்தேன்.

## புகைப்பட நிபுணன்

கிட்டு மிகச் சிறந்த புகைப்பட நிபுணராகத் திகழ்ந்தார். நானும் நண்பர் மணியரசனும் சுவிட்சலாந்து சென்றிருந்த வேளையில் எங்கள் இருவரையும் பல கோணங்களில் ஏராளமான படங்கள் எடுத்தார். மறுநாள் தான் எடுத்த படங்களை எங்களிடம் காட்டினார். துல்லியமாகவும், கலை உணர்வுடனும் அப்படங்கள் எடுத்திருப்பதனைப் பார்த்து நான் அதிசயித்தேன். 'இதை எங்கு கற்றுக்கொண்டீர்கள்?' என்று கேட்டேன். அவர் சிரித்துக்கொண்டே "அனுபவம்தான் எனக்கு ஆசான்" என்று கூறிவிட்டு ஒரு வேடிக்கையான நிகழ்ச்சியை நினைவு கூர்ந்தார்.

"யாழ்ப்பாணத்தில் இருந்த நண்பர் ஒருவர் ஒரு புகைப்படக் கருவியைக் (கேமிரா) கொடுத்தார். புகைப்படக் கருவி பற்றியும், படம் எடுக்கப்பட்டவுடன் எவ்வாறு சுவடிடப்படும் (பிரிண்ட்) என்பது பற்றியும் நான் எதையும் அறிந்திராத காலம் அது. அவசர அவசரமாக ஒரு படச்சுருள் முழுவதையும் எடுத்துத் தள்ளினேன். பின்பு அப்படச்சுருளை எடுத்துக்கொண்டு ஓர் அறைக்குள் சென்று படங்கள் எல்லாம் சரியாக விழுந்து இருக்கின்றனவா எனப் பிரித்துப் பார்த்தேன். எனது அறியாமையை நினைத்தால் இப்பொழுதும் சிரிப்புத்தான் வருகிறது." என்று

# புரட்சிக்காரனின் உள்ளம் மென்மையானது

"தம் உயிர் ஈந்து இம் மண்ணிலே விடுதலைப் பயிரை உரம்பெறச் செய்துவிட்ட தியாகிகளை நாம் என்றும் மறக்க முடியாது. மறந்தால் நாம் மனிதம் அற்றவர்களாகின்றோம்.

எம் தோழர்கள் நாம் எப்போதும் ஒரே குடும்பமாக வாழ்பவர்கள். இனிய உறவுகளைத் துறந்த நாம், எம்மை நேசித்து, நம்மோடு நாமே ஐக்கியமாகி, இறுகப் பிணைந்துவிட்ட ஜீவன்கள், நமக்கு நாமே தாயாகி, தந்தையாகி, இனிய உறவாகி இணைந்திருக்கின்றோம்.

எமக்கிடையே ஏற்படும் இழப்புகள்— எமக்கு மிக நெருக்கமானவர்கள் நிரந்தரமாகவே பிரிந்துவிடும்போது, எம்மோடு ஒன்றான, எம்மிலே ஒன்றான, அவர்களின் பிரிவுகள் எம்மை நிலைகுலையச் செய்கின்றன. உதிர்வை நினைத்தும் நாம் அழவில்லைதான். அழமுடியாதுதான். ஆனால் நாம் அடையும் வேதனை சொல்ல முடியாதது. சொன்னாலும் யாராலும் புரிந்துகொள்ள முடியாதது.

புரட்சிக்காரர்கள் என்றால் கடினமாணவர்கள் என்று எண்ணுகிறது இந்த உலகம். மனிதர்களுக்குள்ளே மிகவும் மென்மையானவன். மிருதுவான உணர்வுகளைக் கொண்டவன். அதனால்தான் புரட்சிக்கே புறப்பட்டவன் என்பதை உணரவில்லை. அந்த மென்மையான இனிய உள்ளங்களோடு நாம் உறவாட, வாழ இன்னுமொரு பிறவி கிடைக்காதா என்று ஏங்குகின்ற ஏக்கங்கள் யாருக்கும் புரியாமலிருக்கலாம். ஆனால் எம்மைச் சார்ந்தவர்கள் நிச்சயம் புரிந்துகொள்ள முடியும்.

அந்த தியாகிகள் கடந்துவந்த பாதை கடினமானதுதான். அந்தக் கடினங்கள் எம்மோடு இறுதிவரை பகிர்ந்துவந்த எம் இனியவர்கள் இடையிலே உதிர்ந்துவிடும்போது, எம் தாயை இழந்த துயர், எம் தந்தையை இழந்த துயர், இவைகளையும் கடந்து துயர் உண்டு என்றால் அவற்றையும் கடந்து துயரடையும் எம்நிலை யாருக்கும் புரியாது.

தம் இனிய கனவுகளை இம் மண்ணிலே புதைத்துவிட்டு இந்த மண்ணின் விடுதலைக்காகப் பாடுபட்ட உயிர்களை இந்த மண் மறந்துவிடக்கூடாது. அவர்களின் ஆத்மாவின் கீதங்கள் இன்னும் எம் உள்ளங்களில் ஒலித்துக்கொண்டிருப்பதை இம் மண்ணின் மைந்தர்களோடு பகிர்ந்துகொள்கிறோம்."

**தளபதி கிட்டு**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூறிவிட்டுக் கிட்டு சிரித்தபொழுது நானும் சிரித்தேன்.

## ஓவியர்

கிட்டு ஒரு ஓவியக் கலைஞராகவும் திகழ்ந்தார் என்பது மிகப் பலருக்கு தெரியாத ஒரு செய்தியாகும். அவர் யாழ்ப்பாணத்தில் தளபதியாக இருந்தபொழுதும், பன்னாட்டுத் தலைமையகத்தின் பொறுப்பாளராக இலண்டனில் இருந்த வேளையிலும் ஓவியத்தில் கவனம் செலுத்த அவருக்கு நேரம் கிடக்கவில்லை. ஆனால், இலண்டனிலிருந்து பிரித்தானிய அரசு அவரை வெளியேற்றிய பின்பு, ஐரோப்பிய நாடுகளில் தலைமறைவாக வாழ்ந்த காலம் அவருடைய கலை உணர்வுகளை வளர்த்துக் கொள்ளும் காலமாக அமைந்தது.

கிட்டு சிறந்த போர்வீரர் மட்டுமல்ல. சிறந்த ரசிகர் ஆகவும் திகழ்ந்தார். இயற்கை அழகை ரசிப்பதில், இனிய இசையில் மயங்குவதில் அவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. தான் வெளியிட்ட பத்திரிகைகள் மற்றும் பிரசுரங்களை வடிவமைப்பதில் அவர் காட்டிய திறன் அவருக்குள் ஓர் ஓவியக் கலைஞர் மறைந்திருக்கிறார் என்பதை வெளிப்படுத்தியது. மெக்ஸிக்கோ நாட்டு ஓவியர் ஒருவரிடம் முறையாக ஓவியக் கலையை பயின்றார் என கிட்டுவின் நெருங்கிய நண்பர் திலகர் கூறியிருக்கிறார். கிட்டுவின் ஓவியத் திறமை பற்றி திலகர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

நவீன ஓவியம் குறித்து கருத்து முரண்பட்டவராகக் கிட்டு இருந்தார். ஆனால் ஐரோப்பாவில் இருந்த காலத்தில் பிகாசோவின் ஓவியம் மீது காதலே கொள்ள ஆரம்பித்தார். 'சவ அறை' என்னும் பிகாசோ ஓவியத்தின் சாயல் அவருடைய ஓவியம் ஒன்றில் படிவதாக உணர்ந்தேன். தனது ஓவியங்களில் ஆழ்ந்த உணர்வுகளையும் தத்துவங்களையும் வெளிப்படுத்துவதிலும் வெளிப்பாட்டுக் குறியீடுகளைக் கையாள்வதிலும் தனது கற்பனைகளை உயர உயர பறக்கவிட்டுள்ளார் என்றே கூறுதல் வேண்டும். 'ஒரு விடுதலை வீரனின் மரணம்' என்ற ஓவியம் ஏராளமான வித்துக்களைப் பிரசவிப்பதாக அமைந்துள்ளது. வித்துக்களிலும் அவற்றிலிருந்து உயிர்ப்பெடுக்கும் பல்வேறு மரம், செடி, கொடிகளிலும் அவர் மாறாத அன்பு கொண்டு இருந்தார். அவருடைய ஓவியங்கள் மரபு ரீதியாகவும், யதார்த்தமாகவும் அமைந்துள்ளன. ஆயினும் அவற்றில் சில அம்சங்களில் பண்புத் தன்மையைக் கலந்துள்ளார்.



ஒருமுறை என்னுடன் தொலைபேசியில் பேசும்பொழுது "இனிமேல் என்னை ஓவியர் கிட்டு என அழைக்கலாமோ" என்று வேடிக்கையாகக் கேட்டார். "நிச்சயமாக" என்று கூறினேன்.

## ஆங்கிலக் கல்வி

தனக்குத் தெரியாதவற்றை "அறிந்து கொள்ள வேண்டும்



புதிய போராளிகளுக்கு பயிற்சி தரும் கேணல் கிட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்பதில் கிட்டுவுக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. தான் ஓர் இயக்கத்தின் தளபதி மட்டுமல்லாமல் மக்களால் மதிக்கப்படும் தலைவர் என்ற நிலையிலும் ஒரு விடயம் தனக்கு தெரியாது என்பதை வெளிப்படுத்தவும், தெரிந்தவர்களிடம் அதைக் கற்றுக்கொள்ளவும் அவர் கூச்சப்பட்டதே இல்லை. அவர் இலண்டனில் இருந்த பொழுது ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறுவது மிக அவசியம் என்பதை உணர்ந்தார். பிற நாட்டவர்களுடன் உரையாடுவதற்கும் அவர்களுடன் தொடர்புகொள்வதற்கும் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறவேண்டும் என்று விரும்பிய அவர் இலண்டன் பி.பி.சியில் பணியாற்றிக் கொண்டிருக்கும் ஆனந்தி அவர்களிடம் ஆங்கிலம் படித்தார். விரைவில் அம்மொழியில் அவர் பெற்ற தேர்ச்சியைக் கண்டு ஆசிரியையான ஆனந்தியே வியப்படைந்தார்.

அதைப்போலவே மிக நவீன சாதனமான கணணியின் (கம்யூட்டர்) தேவையைக் கண்டதன் விளைவாக அதில் தேர்ச்சி பெற வேண்டும் என்று விரும்பினார். கணணி அறிவியலையும் கற்றார்.

அவர் கற்றுக்கொண்ட திறமைகள், புகைப்படம் பிடித்தல், ஒளிப் பதிவு செய்தல், ஓவியம் வரைதல், கணணி போன்ற எதுவாக இருந்தாலும், அந்தத் திறமைகள் எல்லாவற்றையும் தனது தாயகத்தின் விடுதலைக்காகவே அவர் பயன் படுத்தினார். தான் நேசித்த தன் தாய் நாட்டின் விடுதலைக்காக உதவக்கூடிய எதுவாக இருந்தாலும் அதைக் கற்றுத் தேர்ந்தார்.

கிட்டு என்ற இளைஞர் ஒரு போராளியாக மட்டும் இருக்கவில்லை. நவீன ஆயுதங்களைக் கையாளுவதில் தேர்ச்சி பெற்றவராக மட்டும் இருக்கவில்லை. நல்ல எழுத்தாளனாக, சிறந்த கலைஞனாக, சிறந்த பதிப்பாளராக, சிறந்த ஓவியனாக இன்னும் பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கினார்.

ஆம்! கிட்டு ஒரு பன்முகக்

**திரு. பழ. நெடுமாறனின் 'காவியநாயகன் கிட்டு' என்ற நூலிலிருந்து, நன்றியுடன்.**



திரு. இளங்குமரனுடன் கிட்டண்ணா




தானைத் தலைவருடன் தளபதி கிட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 1993




# 1994 ?

**1993**ஆம் ஆண்டு உருண்டோடிவிட்டது. அதேவேளை 1983 போல் 93ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு முக்கிய ஆண்டாக வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுவிட்டது.

1993ம் ஆண்டின் ஆரம்பத்தில் தமிழீழ மக்களின் நெஞ்சை அள்ளும் ஒரு சோகம் கவ்விக்கொண்டது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் காவிய நாயகனாகத் திகழ்ந்த தளபதி கேணல் கிட்டுவும், ஏனைய ஒன்பது சக போராளிகளும் இந்திய வல்லாதிக்கப் பூதத்தினால் 16.01.1993 அன்று விழுங்கப்பட்டனர். இவர்களை இழந்த சோகத்தினால் நாம் வெதும்பி நின்றோம்; வெஞ்சினம் கொண்டோம். எத்தனை இடர்கள் வந்தாலும் அவற்றை எதிர்கொண்டு போராட்டத்தினை முன்னோக்கி நகர்த்தும் சத்திய வேட்கையுடன் தம்மைத்தாமே அழித்துக்கொண்ட அந்த வீரர்களின் நினைவில் எம்மை உருக்கிக் கொண்டோம்.



டி. பி. விஜயதுங்க

இந்த ஆண்டின் ஆரம்பமே இழப்பினைத் தந்துவிட்டது. இந்த ஆண்டு எப்படி அமையுமோ என்ற ஏக்கமும் மனதில் குடிகொண்டது.

ஆனால், 1993ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை கணிசமாக முன்னோக்கித் தள்ளிய ஆண்டாக அமைந்தது. அரசியல் இராணுவ ரீதியில் தமிழீழம் சிறிலங்காவை விட ஒருபடி முன்னேறிய ஆண்டாக இதனைக் கொள்ளலாம்.

முதலில் 1993ல் இடம்பெற்ற சில முக்கிய நிகழ்வுகளை குறித்துக் கொள்வோம்.

* தளபதி கேணல் கிட்டுவினதும் ஏனைய ஒன்பது போராளிகளினதும் வீரச்சாவு.

* ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் லலித் அத்துலத் முதலியின் கொலை.

* ஜனாதிபதி பிரேமதாஸாவின் கொலை.

**சர்வே**

* டி.பி. விஜயதுங்கா புதிய ஜனாதிபதியாக பதவியேற்றார்.

* 1993 இன அழிப்பின் பத்தாண்டு நினைவும், மண்கிண்டி மலை இராணுவ முகாம் தகர்ப்பும்.

* "இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை; பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது" என்ற புதிய ஜனாதிபதியின் பிரகடனம்.

* கிளாலிக் கடலிலும், பருத்தித்துறைக் கடலிலும் இடம்பெற்ற கடற் கரும்புலித் தாக்குதல்கள்.

* 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையும் அதன் தோல்வியும்.

* நாகதேவன்துறை, பூநகரி கூட்டுப்படைத் தளங்கள் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய 'தவளை' இராணுவ நடவடிக்கை.

* இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கும், பாதுகாப்பிற்கும் விடுதலைப்புலிகளால் ஆபத்து என்ற இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் கூற்று.

* தோல்வி காணும் இராணுவத்திற்கு தான் தலைமைதாங்க விரும்பவில்லை என்ற இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணாவின் கூற்றும் அவரது கட்டாய ஓய்வும்.

மேற்குறிப்பிட்ட நிகழ்வுகள் 1993ல் இடம்பெற்ற நிகழ்வுகளின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொகுப்பல்ல. மாறாக 1993ன் அரசியல் இராணுவ ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த, தெரிவுசெய்யப்பட்ட சில நிகழ்வுகளாகும்.

1992க்கும் 1993க்கும் இடையில் ஏற்பட்ட அடிப்படை மாற்றங்களில்



அத்துலத் முதலி

முக்கியமானது அரசியல் தலைமையில் ஏற்பட்ட மாற்றமாகும். 01.05.1993 அன்று குண்டு வெடிப்பு ஒன்றில் ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்ட பின் ஏற்பட்ட இந்த மாற்றம் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு சாதகமான நிலைமைகளைத் தோற்றுவித்துள்ளது. புதிய ஜனாதிபதியின் "இனப் பிரச்சினை என்று ஒன்றில்லை; பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது" என்ற பிரகடனம் சிங்கள பௌத்த இனவாதத்தினை அப்பட்டமாக உலகிற்கு எடுத்துக்காட்டுகின்றது. ஜனாதிபதி பிரேமதாசாவின் காலத்தில் அவரது தந்திரங்களால் ஓரளவு மறைக்கப்பட்டிருந்த சிங்களப் பௌத்தப் பேரினவாதத்தின் கொடூர முகம் இன்று மீண்டும் பூரணமாக அம்பலமாகியுள்ளது. இது 1990ம் ஆண்டு ஆரம்பமான இரண்டாம் கட்ட தமிழீழ விடுதலைப் போரில் தமிழீழ மக்களுக்கு கிடைத்த ஒரு அரசியல் ரீதியான வெற்றியாகும். தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கான நியாயத்தினை உலகிற்கு வெளிக்காட்டக்கூடிய, தமிழீழத்தினைத் தவிர வேறு ஏதும் தீர்வுகளுக்கு இடமில்லை என்பதினை எடுத்தியம்பக்கூடிய நிலைமைகளை புதிய ஜனாதிபதியின் "பயங்கரவாதப் பிரகடனம்" தோற்றுவித்து வருகின்றது.

ஜனாதிபதி பிரேமதாஸா, அத்துலத் முதலி ஆகியோர் கொல்லப்பட்ட பின்னர் யுத்தத்திற்கு தலைமை தாங்கக்கூடிய திறமை வாய்ந்த, சாமர்த்தியமான அரசியல் தலைவர்களை சிறிலங்கா இழந்துள்ளது. ஒரு சாமர்த்தியமான அரசியல் தலைவர் இன்றைய சூழலில் "இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை" என்ற பிரகடனம் செய்ய மாட்டான். ஜனாதிபதி விஜயதுங்கா தனது பதவியினை காப்பாற்றிக் கொள்ளவே இப்படியான இனவாதப் பிரச்சாரத்தில் இறங்கியுள்ளார் எனக் கூறப்படுகின்றது. ஆனால், அவரது நடவடிக்கைகளை ஆழமாக நோக்கும் போது, அவர் ஒரு பச்சை ஜனாதிபதியாகவே தென்படுகின்றார். தனது ஆட்சி நிலைக்கவேண்டும் என்பது ஒருபுறமும், சிங்கள பௌத்த இனவாதத்தினைத் தாங்கி நிற்கவேண்டும் எனும் ஓர்மம் மறுபுறமுமாக 'விடுதலை புலிகளை' அழிப்பதன் மூலம், தனது நிலையினை உறுதி செய்துகொள்ள அவர் துடியாய்த் துடிக்கின்றார்.

எனவேதான், "சாமர்த்தியமான அரசியல்" என்பதனைவிட பௌத்த சிங்கள இனவாதத்திற்கு விசுவாசமான அரசியலை விஜயதுங்கா வெளிப்படையாக நடத்துகிறார். பிரேமதாஸாவும் சிங்கள பௌத்த இனவாதத்திற்கு விசுவாசமான அரசியலையே நடத்தினார். ஆனால் அவரிடம் இருந்த "சாமர்த்தியமான அரசியல்" அவரது இனவாதப் போக்கின் முனைப்பினை மறைத்திருந்தது.

விஜயதுங்காவின் இன்றைய அரசியல் நிலைப்பாடு உண்மையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு அடிப்படைப் பலமாகும். ஆனால், விஜயதுங்காவின் அரசியல் நாடிநிற்கும் இராணுவத்தீர்வு முயற்சிகளை நாம் தொடர்ச்சியாக முறியடிக்கும் போதுதான் அவரது அரசியல் எமக்குப் பலத்தினை அளிக்கும். இராணுவத்தலைமைக்கு பூரண அதிகாரம் வழங்கி இராணுவ ரீதியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை அழித்தொழிக்க உத்தரவு பிறப்பித்த விஜயதுங்கா தனது அரசியலில் தோல்வியினைக் காணத்தொடங்கியது, இராணுவத் தீர்வு முயற்சியில் வெற்றி காண முடியாமல் தத்தளிக்கத் தொடங்கியதில் இருந்துதான். தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை இராணுவ ரீதியாக நசுக்க முடியு




ரணசிங்க பிரேமதாசா

மாக இருந்திருக்குமேயானால், விஜயதுங்காவின் அரசியல் அவருக்கு பெரும் வெற்றியினை அளித்திருக்கும். சிங்கள தேசத்தின் காவலனாக அவர் உயர்த்தப்பட்டிருப்பார். ஆனால், விடுதலைப்புலிகளை வெற்றிகொண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு இராணுவத்தீர்வு காணல் சாத்தியமல்ல என்பதினை 1993ம் ஆண்டு சிறிலங்கா அரசிற்குத் தெட்டத்தெளிவாக வெளிக்காட்டியுள்ளது.

1992ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8ம் திகதி அராலித்துறையில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் லெப். ஜெனரல் கொப்பேக்கடுவ,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நரசிம்மராவ்

மேஜர் ஜெனரல் விமலரத்தின உட்பட்ட வடபகுதி படைத் தலைமை அழிக்கப்பட்ட பின்னர் சிறிலங்காவின் இராணுவ பலம் நிரூபிக்கப்பட வேண்டிய ஒரு ஆண்டாக 1993 இருந்தது.

1993 செப்டம்பர் மாதம் இறுதிப் பகுதியில் மேற்கொள் ளப்பட்ட 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை வரை சிறிலங்கா ஆயுதப்படையினரால் தமிழீழ விடு தலைப் போராட்டத்திற்கு எதிராக பாரிய இராணுவ நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள முடிய வில்லை. மாறாக, ஆயுதப் படையினர் விடுதலைப்புலிகளின் பாய்ச்சலுக்கு உள்ளானார்கள். இவற்றில் 1983 இன அழிப்பின் பத்தாவது ஆண்டின் நினைவின் போது விடுதலைப்புலிகளால் மேற் கொள்ளப்பட்ட 'இதயபூமி 1' இராணுவ நடவடிக்கை சிங்கள தேசத்தினையே அதிர வைத்தது. ஆகஸ்ட் மாதம் 26ம், 29ம் திகதி களில் மேற்கொள்ளப்பட்ட கடற் கரும்புலித் தாக்குதல்கள் கடற் புலிகளின் வளர்ச்சியினை எடுத் தியம்பின. இராணுவ ரீதியாக விடுதலைப்புலிகளின் கை ஓங்கி வருவதான கருத்து பரவலாக எழுந்துள்ளது. இத்தகைய சூழலில் "இனப்பிச்சினை இல்லை" என்ற பிரகடனத்தின் பின் ஆயுதப்படை யினரின் முழுமையான தயாரிப் புடனும், திட்டமிடலுடனும், பெரும் பிரகடனங்களுடன் ஆரம்பமாகியது 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை.

ஆனால், 'யாழ்தேவி' எதிர் பார்த்த வெற்றியினை அளிக்க வில்லை. 'யாழ்தேவி'க்கு ஏற்பட்ட தோல்வி இராணுவ ரீதியானது மட்டுமல்ல; அது விஜயதுங்காவின் அரசியலுக்கு விழுந்த பேரடியாகும். விஜயதுங்காவின் "இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை; பயங் கரவாதப் பிரச்சினையே உள்ளது" எனும் அரசியல், விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ளும் போதே அவருக்கு சாதகமான நிலைமை களைத் தோற்றுவிக்கும். இராணுவ ரீதியில் சிறிலங்கா ஆயுதப்படை யினர் விடுதலைப் புலிகளிடம் தோற்றுப்போகும் போது, விஜய துங்காவின் அரசியலும் தோற் றுப்போக ஆரம்பித்துவிடுகின்றது. இந்த வகையில் யாழ்தேவியின் தோல்வியுடன் விஜயதுங்காவின் அரசியல் தோல்வியும் ஆரம்பித்து விட்டது.

1993, சிங்கள தேசத்தினை முழுமையாக உலுப்பிவிட்டது நாகதேவன்துறை, பூநகரி படைத் தளங்கள் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய 'தவளை'ப்பாய்ச்சலின் போதே. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், ஏன் உலக விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆயுதப்படையினரின் தளம்மீது நடாத்தப்பட்ட பாரிய தாக்குதலாக இது வர்ணிக்கப்படுகின்றது. ஆயிரத் துக்கும் மேற்பட்ட சிங்கள ஆயுதப் படையினர் இத்தாக்குதலில் கொல் லப்பட்டனர். பெருந்தொகையான ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. தரை, கடல் வழியாக விடுதலைப் புலிகள் ஆயு தப்படையினரை எதிர்கொண்டனர். இத்தாக்குதல் விடுதலைப் புலிகளின் போராற்றலையும் திட்டமிடும் ஆற்ற லையும் பெரும் படையணிகளை நிதானமாக நகர்த்தித் தாக்குதல் தொடுக்கும் ஆற்றலையும் துல்லிய மாக வெளிப்படுத்தியது.

இத்தாக்குதலுடன் சிங்கள தேசத்தினது அச்சம் அதிகரித்துள் ளது. ஆயுதப்படையினரின் தலை மைகளுக்குள் இருந்துவந்த கருத்து முரண்பாடு வெடிப்பெடுத்து, "தோல்விகாணும் இராணுவத்திற்கு தலைமை தாங்க விரும்பவில்லை" என இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்தின புலம்பும் அளவிற்கு தாக்கத்தினை ஏற்படுத்தியது. இத்தோல்வி 'யாழ் தேவி' இராணுவ நடவடிக்கையின் பின் ".....இவ்வருட முடிவிற்குள் இராணுவ நடவடிக்கைகளுக்குத் தேவையான யுத்த தளபாடங்கள்



மண்கிண்டிமலைத் தாக்குதலுக்கான ஆயத்தங்களில் போராளிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிகப்பெருமளவில் கிடைக்கவுள்ளன. இந்த ஆயுதங்களினூடாக எமது இராணுவத்தினரது போர் நடவடிக்கைகளுக்கு மேலதிகப் பலம் கிடைக்கும். இந்தப் பயங்கரவாதத்தினைத் துடைத்தெறிய முடியும். அவ்வாறு செய்யாது விடக்காரணம் ஏதும் கிடையாது....." (திவயின 13.10.1993) என்று போர்முரசு கொட்டிய வைத்தியரத்தின, அரசின் பணிப்பின் பேரில் "கௌரவமாக" பதவி விலகும் நிலையினை பூநகரித் தோல்வி ஏற்படுத்தியது.

விஜயதுங்காவின் அரசியலின் மீதும் பூநகரித்தோல்வி பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ளாவிடின் அவரது அரசியல் வாழ்வுக்கு முடிவு ஏற்படக்கூடிய நிலைமைகளை அவர் வளர்த்துவிட்டிருந்தார். அவ்வாறு அவர் வளர்த்துவிட்ட அரசியல் இன்று அவருக்கு ஒரு பொறியாக மாறியுள்ளது. அடுத்தடுத்து சிறிலங்கா ஆயுதப்படையினர் விடுதலைப் புலிகளிடம் கண்டுவரும் தோல்வி அவரது அரசியல் எதிர்காலத்தின் மீது கேள்விகளை எழுப்புகின்றது. அரசியல் தீர்வினை நிராகரிப்பவராக, இராணுவத்தீர்வு முயற்சியில் வெற்றி காணமுடியாதவராக இருக்கும் விஜயதுங்கா, இன்றைய சூழலில் அரசியல் தீர்வு குறித்து தனது நலனின் அடிப்படையில் நாடகமாடக்கூட முடியாதவராக மாறிவிட்டார். இதனால் தொடர்ந்தும் இராணுவத் தீர்வு குறுத்தே அவரது செயற்பாடுகள் இருக்கும். இதனை ஐக்கிய தேசியக் கட்சியின் 39வது வருடாந்த மகாநாட்டில் "பயங்கரவாத்தினை வடக்கிற்கு கட்டுப்படுத்தியபின், அதற்கு என்ன மருந்து செய்வது என தனக்குத் தெரியும்." என்ற அவரது பேச்சு வெளிப்படுத்துகின்றது.

1993ன் போராட்ட வளர்ச்சி இந்திய வல்லாதிக்கப் பூதத்தினையும் உசுப்பிவிட்டுள்ளது. 1993ன் ஆரம்பத்தில் தளபதி கேணல் கிட்டுவினையும் சக ஒன்பது போராளிகளையும் விழுங்கித் தனது பசியினைக் காண்பித்த இந்திய ஆளும் வர்க்கம் தற்போது, "இந்திய ஒருமைப்பாட்டிற்கும், பாதுகாப்புக்கும் விடுதலைப் புலிகளால் ஆபத்து" என்ற கட்டுக்கதையினையும் கட்டவிழ்த்து விட்டுள்ளது. விடுதலைப் புலிகளினால் நாகதேவன்துறை, பூநகரித்தளங்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதலின் பின்னர், இந்திய ஆளும் வர்க்கமும் அச்சம் அடைந்துள்ளது என்பதையே தற்போதைய பிரதமர் நரசிம்மராவின் மேற்குறிப்பிட்ட கருத்து வெளிப்படுத்துகின்றது. "தமிழீழ மக்கள் இந்திய நலனுக்கு எதிரானவர்கள் அல்ல; ஆனால், தமிழீழ மக்களின் நலனுக்கு இந்திய ஆளும் வர்க்கம் தடையாக இருப்பின் அதனை எதிர்கொள்ளவும் தமிழீழ மக்கள் தயங்கப் போவதில்லை." என்பதே வரலாறாக உள்ளது. இதனை இந்திய ஆளும் வர்க்கம் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி, 1993 தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு பாய்ச்சலைக் காட்டிநிற்கும் ஒரு ஆண்டாக அமைகின்றது. 1993 அரசியல் தீர்வு குறித்த மாயையினை அகற்றியுள்ளது. சிறிலங்கா அரசின் ஆயுதத் தீர்வு முயற்சி சாத்தியப்படப் போவதில்லை என்பதினைத் தெளிவாக மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தியுள்ளது. இராணுவ ரீதியில் இராணுவத்தினை வெற்றிகொண்டு போராட்டத்தினை வெற்றிக்கு இட்டுச்செல்ல முடியும் என்ற நம்பிக்கையினை ஏற்படுத்தியுள்ளது. சிறிலங்கா அரசியல் இராணுவத் தலைமைகளை நிலைகுலையச் செய்துள்ளது. தமிழீழம் எனும் தேசத்தின் உதயத்தினை நம்பிக்கையுடன் எதிர்நோக்க வைத்துள்ளது.



தலைவருடன் கரும்புலிகள் கப்டன் மதன், மேஜர் வரதன்


1993 இவ்வாறு அமைகையில், 1994 எவ்வாறு அமையும்? இந்தக் கேள்வியும் எம்முன்னே எழத்தான் செய்கின்றது. 1994ம் ஆண்டு தேர்தல் ஆண்டு. 94ம் ஆண்டின் இறுதியில் ஜனாதிபதித் தேர்தலும், 1995ன் ஆரம்பத்தில் பாராளுமன்றத் தேர்தலும் நடாத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, 94ல் சிறிலங்கா அரசியல் தேர்தல் வெற்றிகளை நோக்கியதாக அமையும். இதனால், ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கா இராணுவ ரீதியில் வெற்றிகளை அடைந்துவிட துடியாய்த் துடிப்பார். இதன் வெளிப்பாடாக பாரிய இராணுவ நடவடிக்கைகளை சிறிலங்கா ஆயுதப்படையினர் மேற்கொள்ள முனைவர். ஆனால், அத்தாக்குதல்கள் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்படும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஓரிரு பாரிய இராணுவத் தாக்குதல்கள் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படலாம். இராணுவத் தீர்வு முயற்சியில் சிறிலங்கா அரசு மீண்டும் தோற்றுப்போகும். தென்னிலங்கையில் ஏற்படும் அரசியல் கூட்டுக்கு ஏற்ப, அரசியல் மாற்றங்கள்கூட ஏற்படலாம்.

இந்திய ஆளும் வர்க்கம் விடுதலைப் புலிகளின் பலத்தினை முறியடிக்க முயற்சிகளை மேற்கொள்ளலாம். இந்திய இராணுவத்தின் நேரடி இராணுவ நடவடிக்கை இடம்பெறப்போவதில்லை. ஆனால் சிறிலங்கா அரசுக்கு இந்தியா வழங்கும் உதவிகள் அதிகரிக்கலாம். தனது கைக்கூலிகளைக் கொண்டு சதிமுயற்சிகளில் ஈடுபடலாம். நான் இங்கு குறிப்பிடும் விடயங்கள் ஒரு சோதிடரின் கணிப்பல்ல; தற்போதுள்ள அரசியல் நிலைமைகளை வைத்து மேற்கொள்ளப்படும் எதிர்வு கூறல்களே இவை. சடுதியாக ஏதும் மாற்றங்கள் ஏற்பட்டாலே அன்றி, நான் இங்கு குறிப்பிடும் நிகழ்வுகள் 94ல் இடம்பெறும்.

இப்படியே போராட்டம் எத்தனை காலம் தொடரும்? எமக்கான சர்வதேச அங்கீகாரம் எப்போது கிடைக்கும்? இக்கேள்வி எம்மவர்கள் பலரின் மனதில் எழுவதுண்டு. இக்கேள்விக்கான பதில், தேசியத்தலைவரின் மாவீரர் நாள் செய்தியில் வெளிப்படுகின்றது. "......தார்மீக அடிப்படையில் நாம் ஒரு உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம். எமது இலட்சியம் நியாயமானது. சர்வதேச மனித அறத்துக்கு இசைவானது. எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள். தனியரசு அமைக்கும் தகுதி பெற்றவர்கள். சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் இந்த உரிமையை எவரும் நிராகரித்து விட முடியாது. நீதியின் அடிப்படையில், சத்தியத்தின் அடிப்படையில் நியாயப்பாடு எமது பக்கம் இருக்கும் போது, நாம் எமது போராட்ட இலட்சியத்தில் உறுதி பூண்டு நிற்க வேண்டும். இலட்சியத்தில் உறுதி பூண்டு இறுதிவரை போராடும் மக்கள்தான் விடுதலையினை வெல்கிறார்கள். இந்த உலகமானது மானிட தர்மத்தின் சக்கரத்தில் சுழலவில்லை என்பது எமக்குத் தெரியாததல்ல. ஒவ்வொரு நாடும் தனது தேசிய சுயநலத்தினையே முதன்மைப்படுத்துகின்றது. மக்கள் உரிமை, மனித உரிமை, தார்மீக அறத்திலும் பார்க்க பொருளாதார, வர்த்தக நலன்களே இன்றைய உலக ஒழுங்கமைப்பை நிலைநாட்டுகின்றன. சர்வதேச அரசியலும் சரி, இராஜதந்திர உறவுகளும் சரி இந்த அடிப்படையில்தான் செயல்படுகின்றது. இந்த நிலையில் எமது போராட்டத்தின் நியாயப்பாட்டை சர்வதேச சமூகம் உடனடியாக அங்கீகரித்து விடும் என நாம் எதிர்பார்க்க முடியாது. ஆயினும் அந்த அங்கீகாரத்திற்காக நாம் தொடர்ந்து குரல் எழுப்பி வரவேண்டும். மாறிவரும் உலகில் எதிர்பாராத மாற்றங்கள் நிகழும் ஒரு சந்தர்ப்பத்தில் சர்வதேச சூழ்நிலை எமக்கும் சாதகமாக அமையலாம். எப்பொழுது உலகத்தின் மனச்சாட்சி நியாயத்தின் சார்பாக எம்பக்கம் திரும்பும்...."
(27.11.1993 தேசியத் தலைவரால் விடுக்கப்பட்ட மாவீரர்நாள் செய்தியிலிருந்து) ★★★



பூநகரி முகாம் தகர்ப்பின் போது கைப்பற்றப்பட்ட ரி.55 ரக டாங்கியுடன் போராளிகள்

## கருச்சிதைவு

கடந்த ஆண்டில் யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் மட்டும் நூற்று முப்பத்தைந்து தாய்மாருக்குக் கருச்சிதைவு ஏற்பட்டுள்ளது. ஆயிரத்து ஐந்நூற்று நான்கு குழந்தைகள் நிறைகுறைவாகப் பிறந்தன. யாழ்ப்பாணத்தில் கடந்த ஆறு மாதத்துள் மட்டும் ஐநூற்று நான்கு குழந்தைகள் நிறைகுறைவாகப் பிறந்தன. இவற்றுக்கெல்லாம் நிறையுணவு இன்மையே காரணம் என்று சுகாதார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சிங்கள அரசின் திட்டமிட்ட பொருளாதாரத் தடையால் பல தாய்மாரும் குழந்தைகளும் நிறை உணவுக் குறைவால் பாதிப்படையும் அவலத்துக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




www.tamilarangam.net

**சோற்றுடன் மட்டும் மனிதர்கள் வாழ்ந்துவிடுவதில்லை. உணவு, உடை, உறையுள் போன்றவை மனிதனின் அடிப்படைத் தேவைகளாக இருப்பினும், இவை மட்டுமே போதுமாய் இருந்துவிடுவதில்லை. இவற்றிற்கு அப்பால் மனித வாழ்க்கைக்கு எண்ணங்கள் தேவைப்படுகின்றன. மனிதன் தன் இருப்பிற்கான தேவையையும் எவ்வாறு அதை நிறைவு செய்து கொள்வது என்பதையும் அறிந்திருத்தல் வேண்டும். எண்ணங்கள் மலராத மனித வாழ்க்கை வெறும் அர்த்தமற்ற வாழ்க்கையாகப் போய்விடும்.**

# சமூகத்தின் அரங்கு

'உணர்ச்சிகள்' பற்றி நாம் என்ன சொல்லலாம்? உணர்ச்சிகள் அற்ற மனிதன் வெறும் சடமாக, பிசாசாக மாறிவிடுகிறான்.

எண்ணங்களும் உணர்ச்சிகளும் அற்ற மனித வாழ்க்கையால் என்ன பலன்? எண்ணங்களும் உணர்ச்சிகளும் மனிதர்களுக்குச் சூழலை ஊடுருவிப் பார்க்க உதவி செய்து அவர்களது வாழ்க்கையை அர்த்த முள்ளதாக்குகின்றன.

மனிதர்கள் தமது உணர்ச்சிகள், எண்ணங்கள், அநுபவங்கள் என்பவற்றை ஒன்றாகக் கூடி தமக்கிடையே பகிர்ந்துகொள்வதற்கான இடமாக அரங்கு தொழிற்பட முடியும். அரங்கின் தொடர்பு இரத்தமும் சதையுமாக இருப்பதால், அதாவது ஆற்றுபவர்கள் பார்வையாளர்களிடையே உயிருள்ள தொடர்பு நடைபெறுவதால் மேற் கூறிய பகிர்ந்துகொள்ளல் சாத்தியமாகிறது.

எனவே அரங்கு மனித சமூகத்தில் கட்டாயம் நிலவவேண்டிய தேவை உள்ளது. வெறும் அலங்காரம் அல்லது மகிழ்வளிப்பு என்பவற்றிற்கு அப்பால் அரங்கின் பணி உள்ளது. இதன் காரணமாகத்தான் அநேகமான அடக்குமுறை ஆட்சியாளர்கள் அரங்கைத் தடைசெய்து விடுகின்றனர். இன்று சிறிலங்காவில் அரங்கு சுயாதீனமாகத் தொழிற்பட முடியாத சூழ்நிலை உள்ளது. ஆனால் குறிப்பிடத்தக்களவில் நமது பிரதேசம் விடுவிக்கப்பட்டுள்ளமையால் இங்கு அரங்கு தன் முழு வீரியத்துடன் செயற்படக்கூடிய சாத்தியம் உள்ளது. நாம் இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிட்டுவிடக் கூடாது.

ஆனால் நம்மிடையே அரங்கு ஒரு மகிழ்விப்புக் கலையாக மட்டும் கருதப்படுகின்ற போக்கு நிலவி வருகிறது. அதாவது அரங்கை ஒரு பொழுதுபோக்குச் சாதனமாகவே அநேகர் கருதுகின்றனர். இந் நிலையை மாற்றுவதற்கு அரங்கச் செயலாளிகள் பணிபுரியவேண்டும். உண்மையில் அரங்கு ஓர் ஆயுதம். மனித மனங்களில் எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் மலர்விக்கும் தூண்டியாக அரங்கைப் பயன்படுத்த முடியும். மனித மனங்களில் நல்ல எண்ணங்களும், உணர்ச்சிகளும் மலரும்போதே உண்மையான சமூக மாற்றம் ஏற்படமுடியும். ஒரு மனப்புரட்சி, ஒரு விழிப்பு நிலை ஏற்படுதல், ஒரு சமூகம் மாறுவதற்கு அத்தியாவசியமான முன் நிபந்தனையாகும். இதனை சமூகப் புரட்சியாளர்கள் மறந்துவிடக்கூடாது.

எனினும் புரட்சியாளர்கள் அரங்கை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதில் அவதானத்துடன் செயல்புரிய வேண்டும். மக்களுக்குச் சலிப்பேற்படுத்துகிற ஒரு முயற்சியாக இது அமைந்துவிடக்கூடாது. அவ்வாறு அமைந்துவிடுமெனில் அது ஓர் எதிர் விளைவையே தோற்றுவிக்கும். ஏனைய நாட்டு அரசியற் போராட்டங்களில் இவ்வாறு நடைபெற்றுள்ளது. எனவே நாம் அவதானமாக இக்காரியத்தில் பணிபுரிய வேண்டும்.

அரங்கு மக்களுக்கானதாக ஆக்கப்படும் போது அரங்கின் அடிப்படையான கவர்ச்சி அம்சங்களுக்குப் பாதிப்பில்லாத முறையில் அரங்கு மீள் கண்டுபிடிப்புச் செய்யப்படவேண்டும். அரங்கின் கவர்ச்சி மையங்கள் எவை என்பதை நாம் ஆய்ந்து அறிந்துகொள்ள வேண்டும். படைக்கப்படும் அரங்கு பார்வையாளரைக் கவரக்கூடியளவிற்கு அழகியல் வன்மையுடையதாக இருக்கவேண்டும். அவ்வாறு இருப்பின் மட்டுமே பார்வையாளர்களை ஓர் கலை அநுபவப் பரப்பினுள் இழுத்துவர முடியும். அந்த அநுபவப் பரப்பினுள் இருந்தபடி ஆற்றுபவர்கள், பார்வையாளர்கள் தமது எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் பகிர்ந்துகொள்ள முடியும். இந்த அநுபவப் பகிர்வானது வெறுமனே ஆற்றுபவர்களிடமிருந்து பார்வையாளர்களுக்கான ஒருவழிப்பாதையாக மட்டும் இராமல், பார்வையாளர்களிடமிருந்து ஆற்றுபவர்களுக்கும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆற்றுபவர்களிடையேயும், பார்வையாளர்களிடையேயும் ஏற்படமுடியும்; ஏற்படவேண்டும். இந்நிலையானது இறுதியில் ஆற்றுகையில் கலந்துகொள்ளும் அனைவரிடமும் ஒரு சங்கம நிலையை உருவாக்கும்.

அநேக அரசியல் அரங்குகள், மக்களிடையே பிரச்சாரத்தை மேற்கொள்வதில் தீவிர எண்ணங்கொண்டு அல்லது அவசரப்பட்டு மேற்கூறிய அழகியல் அம்சங்களில் போதிய கவனம் செலுத்தாமல் விட்டுவிடுவதன் காரணமாக அவர்களது முயற்சி அது எத்தகைய தீவிரமும், நேர்மையுணர்வும் கொண்டிருந்தாலும் இறுதியில் அவர்கள் நேசிக்கும் மக்களிடமே அந்நியப்பட்டு விடுகிறது. சர்வதேச அநுபவங்களைக் கவனித்தால் இது தெளிவாகத் தெரியும்.

அநேகமாக 'மக்களுக்காக' என்று உருவாக்கப்பட்ட அரங்குகள் 'தெருவெளி அரங்க' வடிவத்தை எடுப்பதைப் பலநாடுகளின் அனுபவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. வழமையாக அரங்க நாட்டம் உடைய பார்வையாளர்களை விடப் புதிய பார்வையாளர்களைப் பரந்துபட்ட மக்களிடம் இருந்து உருவாக்க வேண்டும் என்ற நோக்கம் 'தெருவெளி அரங்கு' தோன்றுவதற்கான அடிப்படைக் காரணியாகும். ஒரு சனரஞ்சக அரங்கு என்பதன் அடிப்படையே இதுதான். அதாவது ஒரு சனரஞ்சக அரங்கு இயலுமானவரை ஆகக்கூடுதலான பார்வையாளர்களைக் கவரக்கூடிய அரங்காக இருத்தல் வேண்டும். தெரு வெளி அரங்கு மக்களை நாடிச்சென்று மக்கள் கூடுமிடங்களில் 'கண்டவெளிகளில்' நிகழ்த்தப்படுகின்ற அரங்காகும். இந்த வகையில் தெருவெளி அரங்கு பரந்துபட்ட மக்களை அணுகும் வாய்ப்புள்ள ஒரு சாதாரண வடிவமே.

ஆனால் துரதிட்டவசமாக அநேகமான அரங்குகள் (நம்மிடையே இவை தெருக்கூத்து என்று அழைக்கப்படுகின்றன) சாயலில் அதிகூடிய விவரணத்தன்மை உடையதாக இருந்துவிடுவதும் உண்டு. இதன் காரணமாக இத்தகைய தெருவெளி அரங்குகள் பார்வையாளர்களுக்குச் சலிப்பை ஊட்டுகின்றன. இதையே சாட்டாக வைத்துக்கொண்டு நாடகம் கற்றறிந்த பெரியோர்கள் தெருவெளி அரங்கை ஒரு கலைவடிவமாகவே 'கருதுவதில்லை. ஒரு சமூகமாற்றப் போராட்டத்தில் அரங்கு ஒரு கருவியாகப் பயன்படமுடியும் என்பதையே நிராகரிக்கும் அளவிற்கு சென்றுவிடுவார்கள். ஏனைய நாடுகளில் இந்த நிலைமை சமூகமாற்ற அரங்க இயக்கத்தினரை அச்சுறுத்தும் அளவிற்கு உண்டு. அந்நாடுகளில் உள்ள நியம அரங்குகள் பலம் வாய்ந்தவையாக உள்ளன. ஆனால் எமது மண்ணில் அத்தகைய ஒரு பலம்வாய்ந்த நியம அரங்கு இல்லை. இங்கு மக்களுக்கான மாற்று அரங்கே நியம அரங்காக தொழிற்படும் நிலைமை தான் உண்டு. இது ஒரு சாதகமான நிலைமை.

இச்சாதகமான நிலைமையை மனதிற் கொண்டு உற்சாகத்துடன் பணிபுரிய சமூகமாற்ற அரங்கச் செயலாளிகள் முன்வரவேண்டும். அழகியல் வன்மையுடைய அரசியல் அரங்கை உருவாக்க முடியாதென்பதல்ல. ஒரு வெற்றிகரமான சனரஞ்சக அரங்கு அரசியற் கருத்துக்களை அரங்கத் தன்மையற்ற வெற்றுத் தகவல்களாக வெளிப்படுத்தாமல் வேடிக்கையும், மகிழ்வளிப்பும் கலந்த அரங்க நிகழ்ச்சியாக வெளிப்படுத்த வேண்டும். உண்மையில் ஒரு சனரஞ்சக அரங்கின் சாரமாக கல்வியினதும், மகிழ்வளிப்பினதும் பிரிக்கமுடியாத சேர்க்கை இருக்க வேண்டும். மக்களுக்கான அரங்கை உருவாக்க விழைபவர்கள் இச் சிறுவிடயத்தை மனதில் இருத்திக் கொள்ளல் வேண்டும்.

# சோளப் பயிர்ச்செய்கை ஊக்குவிக்க நடவடிக்கை

1993/94 கால போகத்தில் சோளப்பயிர்ச்செய்கையை யாழ். மாவட்டத்தில் ஊக்குவிக்கும் முகமாக யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் முன்னோடி நடவடிக்கையாக ஒரு பரப்புக்கு மேற்பட்ட நிலத்தில் சோளப்பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு பயிரின் முக்கிய வளர்ச்சிக்காலத்தில் வரட்சி நிலவுமாயின் நீர்பாசனம் செய்வதற்கு ஏதுவாக எரிபொருள் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒவ்வொரு உற்பத்திக் குழுப் பிரிவிலும் முன்மாதிரிப் பயிற்சித்துண்டங்களில் சோளம் பயிரிடுவதற்கும் வீட்டுத் தோட்டங்களில் பயிரிடுவதற்கும் சுமார் 210 கிலோ கிராம் சோளம் விதை இலவசமாக வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அத்தோடு வதிவிட வேளாண்மைப் போட்டியில் பங்கு பற்றுபவர்களுக்கு சோளம் விதை இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. யாழ். மாவட்டத்தில் சோளப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள அனைவரிடமிருந்தும் அவர்களால் விளைவிக்கப்படுகின்ற சோளம் முழுவதையும் அன்றைய சந்தை விலையின் படி கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

93ம் ஆண்டில், மண்கிண்டிமலை, புலோப்பளை, பூநகரி எனத் தரையிலும், கடலிலும் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான பல தாக்குதல்கள்...

www.tamilarangam.net








தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net






# வெற்றிப் பாதையில்...





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழரின் போர்க்கலைகள்

தமிழன் கலை ஆர்வம் மிக்கவன். இவனது அழகியற் கலையானது நாகரிகத்தின் வளர்ச்சியில் அவன் அடைந்த வெற்றிகள், பண்பாடுகளை சித்தரிக்கின்றன. இதேபோன்று அன்றும் இன்றும் போர்க்கலையில் வல்லுனனாக திகழ்ந்து கொண்டிருக்கிறான். அதில் அவனது தற்காப்பு யுத்தி போர்முறைகளானது அவனது வீரத்தையும், மனோதிடத்தையும் வன்மையையும் பிரதிபலிக்கிறது. அவனது தற்காப்புக்கலைகளில் சிலம்படி போர்முறையும் ஒன்று.

இதில் சிலம்பாட்டத்தின் வளர்ச்சியடைந்த ஒரு உச்சநிலை தான் புலியாட்டம். போர்க் கலையில் மிக உன்னதமாக வளர்ச்சியடைந்த தமிழன் அதில் தனது அழகியல் ஆளுமையையும் வெளிப்படுத்தி இருக்கிறான். உதாரணமாக பரம்பரை பரம்பரையாக புலியாட்டம் பயிலும் ஒருவரை சந்தித்த போது அவர் தனது குருவைப்பற்றிக் கூறினார். மழைத்தூறல் போடும்போது கையில் இரண்டு கழிகளை வைத்து வேகமாகச் சுற்றியபடியே ஒரு சொட்டு மழைத்தூறல் கூட தன் உடல் மீதுபடாமல் வீடுவந்து சேருவார் தனது குரு என்று கூறியபோது அந்த கழிசுழற்சியின் வேகத்தைச் சற்று மனதில் நினைத்துப்பாருங்கள்.

செடிக்குச்சி, சில்தா, சிறும்பு, என்று பல பெயர்களில் வழங்கும் கலையில் துடைப்பக்குச்சியில் இருந்து சோளத்தட்டை வரையிலான கனமுள்ள குச்சிகளை வைத்து எதிரியை நகரவிடாமல் சிறை வைத்து விடமுடியும்.

புலியாட்டம் தற்காப்புக்கலை மட்டும் அல்ல. பிறரைத்தாக்கும் கலையுமாகும். சிலம்பாட்டத்தின் அடிப்படையான அடிவரிசைகளின் தொகுப்புதான் புலியாட்டம். சிலம்பாட்டத்தில் 'வீடுகட்டுதல்' என்று குறிக்கப்படும் பதுங்கிப்பாயும் நிலைகளை புலியாட்டம் வெளிப்பாடு செய்கின்றது. இதன் அடுத்த பகுதி மூச்சுக்கலை. கையில் ஆயுதங்கள் ஏதுமற்று எதிரியைத் தாக்குவது, இது தொடுவர்மம், தொடாவர்மம் என்று இரு பிரிவுகளுள்ளன.

தொடுவர்மம் என்பது எதிரியின் உடம்பை இலேசாக தட்டுவது போல் தாக்குவது. இது மரணம் வரையில் கூட இட்டுச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செல்லும். தொடாவர்மம் என்பது நம் உடம்பின் அதிர்வுகளைக் கொண்டே எதிரியைத் தாக்குவது சிலம்பம் கற்ற பிறகு சமநிலையை கற்றுக் கொள்வதற்காக துணியைத் தலையில் கட்டிக் கொண்டு வெறும் செம்பை கரகமாக வைத்துக் கொண்டு ஆடக் கற்றுக் கொள்ள வேண்டும். இச் சமநிலை யைக் கற்றுக் கொண்டால்தான் புலிபோல் பாய்ந்து இருவர் தாங்கி வரும் குச்சியின் மேல் ஏறிநிற்க முடியும். இதில் கொல்லும் புலி யின் சினப்பார்வையை கண்களில் காட்ட வேண்டும். எப்போதும் 'குருவரிசை' செய்து தான் ஆட்டம் தொடங்கப்படும். இதில் மூன்று மிதியானது குருவரிசைக்கு முக்கியம். அதோடு குருவரிசை முடியும்போது வலதுகாலில் மிதிக்கவேண்டும்.

எதிரிக்கு தான் எந்தவகையில் பலம்கொண்டவன் என்பதைக் காட்ட உதவும் ஒரு அரங்கேற றம்தான் புலியாட்டம். நாளடை வில் சிலம்பாட்டத்தின் சிகரங் களை மறந்துவிட்ட தமிழர்கள் புலியாட்டத்தில் தங்கள் விந்தை களைக் காட்டிவிட்டே ஒய்ந்து விடுகிறார்கள். ஆரம்பப்பயிற்சி ஒரு நடனம்போல, கூத்துப் போல இழிந்துபோய் நின்றுவிடுகின்றது. சிலம்பாட்டத்தின் தேர்ச்சிதான் புலியாட்டம். சிலம்பாட்டத்தில் தேர்ச்சி பெற்றவன் இக்கலையில் தான் ஒரு புலியென்று எதிரா ளிக்கு காட்டுவதற்காக தனது அடி, வரிசை, உடல்வாகு, பாய்ச்சல், ஓசையை கவனித்தல், வேகம் திரும்புவதில் நளினம் போன்றனவற்றை புலியாட்டத்தின் மூலம் உணர்த்துகின்றான்

புலியாட்டம் தொடங்கும் போது கொம்பு என்னும் நுளைக் கருவியையும் பறை என்னும் தோற் கருவியையும் இசைக்கத் தொடங்குவார்கள். இந்தகானத் தின் குரலை அதை கேட்பவனின் ரத்த நாளங்களில் அதிர்வலை களாகபரப்பும் புலியாட்டக்காரன் கொம்பு ஊதும் சத்தம் கேட்டு சட்டென அந்த திசையில் திரும்புவான். இத்திரும்பலானது புலியின் குணாம்சத்தைக்காட்டும். சிலம்பாட்டத்தில் வெறும் ஓசை யைக் கேட்டே எதிராளியின் இருப்பிடம் அறிந்து தாக்குவதற் கான தனது திறமையின் வெளிப் பாடுதான். இது புலியாட்டக் காரரின் தயார்நிலையைக்காட்ட கொம்பின் இசை முக்கியம். நாலைந்து பேர் பல்வேறு திசை களில் இருந்து கொம்பு ஊது வார்கள் இதன் இசையைக்கேட்டு புலியாட்டக்காரன் திடீர் திடீரென திரும்பிநிற்பான். ஒரு குறிப்பிட்ட காலநேரத்தில் திடீ ரென எல்லோரும் சேர்ந்து கொம்பு ஊதுகின்ற போது திடீரென புலி மண்ணைவிட்டுப் பாய்ந்து இருவர் பிடித்துக் கொண் டிருக்கும் கொம்பில் ஏறிநின்று விடும் கொம்பின் இரண்டு முனை களையும் பிடித்துக் கொண்டி ருக்கும் முகங்களைத் திரும்பிப் பார்க்கும். இது அவர்களிற்கான ஒரு சைகை.இதன் மூலம் அவர்கள் கொம்பை சற்று தாழப்பிடிப்பர். பின் அதிலிருந்து புலி இறங்கி நடக்கும். இதில் இறங்குவதில் ஒவ்வொருவரிற்கும் ஒவ்வொரு பாணி உண்டு.

இன்றைய புலியாட்டம் சிலம்பத்திற்கும், வர்மத்திற்கும் தொடர்பற்ற ஒன்றாக இருந்து விட்டது. திருவிழாக்களில் ஆடப் படும் கரகாட்டம் போல புலியாட்டமும் ஒரு நிகழ்த்தும் கலையாக நின்றுவிட்டது. நம்நாட்டில் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை பகுதிகளிலும் தமிழ்நாட்டில் சேலம், மதுரை போன்ற பகுதிகளிலும் இது ஓரளவு பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இது மதம் சார்ந்த ஒரு கலையாக இல்லாததால் இந்தியாவில் இஸ்லாமியர்களும் இதை பயின்று பின்பற்றுகின்றனர்.

தமிழனின் போர்க் கலைகள் பாமர மக்களின் கலைகள் என குறிப்பிடப்பட்டு இன்றைய கல்விச் சமுதாயம் இக் கலைகளை பயிலாமல் போயினர். இதனால் தமிழனின் வழிவழியான கலைச் செல்வம் அருகிக் கொண்டு போதல் வருந்தத்தக்கது.

**நன்றி: சாரளம்**

துப்பாக்கி வேலியை மீறி
எனது
பேனா பொறி மலர்த்தும்
தோழமை முகங்களை
எது தடுத்தாலும்
என்
தூரிகை வரைந்து
செல்லும்.

அன்று
அலைகள் சிவந்து
என்
கரையில் மடிந்தன...
காற்றில் குருதியின்
வாடை கலந்தது.
கடலின் மார்பில்
பட்ட காயம்
என்
கவிதை வரிகளில்
இன்னும் கசியும்.
மூழ்கிய தோழமை
நெஞ்சின் ஆழத்தில்
நாளைச் சுடர
முத்தாய் விளையும்.

எந்தத் திரைக்கும்
விடுதலை வானத்தை
மூடமுடியாது!
பொய்களின் கரியை
ஞாயிறு முகத்தில்
பூச முடியாது.

எவர் தடுத்தாலும்
வீரவணக்கம்!
எங்கிருந்தாலும்
வீரவணக்கம்!
தியாகிகளுக்கு
வீரவணக்கம்.
விடுதலைப் புலிகளே
வீரவணக்கம்.

**-கவிஞர் இன்குலாப்-**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போராளியின் பேனாவிலிருந்து...



தொப்பிக்கல்மலை, கிழக்கு காட்டுப்பகுதியில் இராணுவம் ஊடுருவிப், பதுங்கியிருக்கும் செய்தி எல்லா முகாம்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

விசாலகன், விசேட படைப் பிரிவு போன்ற பலமான நிலைகளைத் தவிர ஏனைய நடுத்தர சிறிய முகாம்களின் நாளாந்தக் கடமைகள் சில பாதுகாப்பின் நிமித்தம் வழமையான நேரங்களில் நடைபெறுவது தவிர்க்கப்பட்டிருந்தது. இதன்படி எமது முகாமில் அன்று சத்தியப்பிரமாணம் காலை 8.45 மணிக்கு நடந்தது.

எமது சிறிய முகாமில் நாங்கள் 11 பேர்தான். மிகவும் அமைதியான இருள் போன்ற அடர்ந்த காட்டிற்குள் கட்டடப்பட்டிருந்த அந்த முகாமுக்குச் செல்கின்ற வழியைக் கூட இலகுவில் கண்டுபிடித்து விட முடியாது. மாவட்ட படப்பிடிப்பு முகாம் அது. இதன் வெளியமைப்பு இயற்கையோடு இயற்கையாக உருமறைக்கப்பட்டு விட்டாலும், உள்ளே ஒரு நகர்ப்புறத்து வீடு போன்று ஸ்ரூடியோ அமைக்கப்பட்டிருந்தது.

மாரிகாலமென்றாலும் நான்கு நாள் பிடித்த அடைமழை சற்றுமுன் விட்டு, அடுத்த மழையை அழைப்பதற்காக அகோர வெயிலொன்று எறித்தது. நாங்கள் ஏறிக்கிடக்கின்ற மலையெல்லாம் புகை போன்று நீராவி கிளம்பிற்று. சல சலவென்று வியர்வை கொட்டியது.

வழைமைபோல் அன்றைய முகாம் வேலையைப் பங்கிட்ட பொழுது, நானும் முரளிதாசும் 'கிச்சின்' கொட்டிலுக்கு சுவர் வைக்கக் கூட்டுச் சேர்ந்தோம். நான் மண்வெட்டியும் அவன் கூடையுமாக, இளகிப்போயிருந்த புற்றடிக்குப் போனோம். இதேபோல் அவரவர் வேலையை அனைவரும் துவக்கிவிட்டிருந்தோம். காலை உணவு எருமைப்பாலில் பாயாசம் தயாராகிக்கொண்டிருந்தது. மத்தியானம் காட்டுக் கோழியிறைச்சி வற்றலை மிகவும் சுவையாக வரட்டி சமைத்துப் பரிமாறுவதாக நரேஸ்குமார் முன்பே கூறிவிட்டார். அவர்தான் அன்று சமையல்முறை. முகாம் பொறுப்பாளரும் அவர்தான்.

இதற்கிடையில் மத்தியானத்திற்கு அனைவரும் போய் பொங்கிப் பாய்கின்ற பக்கத்து ஆற்றில் குதித்து, நீராடி, படம் பிடித்து நத்தார் கொண்டாடுவது என்ற நேற்றைய திட்டத்தைப் பற்றிய கதைகளைப், பற்பல கோணங்களிலும் போட்டுக்கொண்டு வேலை ஓடியது.

எல்லோரும் உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் ஓடி ஓடி வேலையை முடிக்கப்பார்க்கின்றனர். பலமுறை வானொலிக் கருவி அழைத்துக் கொண்டிருக்கிறது. எவரும் கவனிப்பதாக இல்லை. மீண்டும் "ஜேசுதாஸ் ஜேசுதாஸ் ஓவர்" என அழைக்க, நான் போய்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எங்கள் பயணம்

எடுத்தேன். பிரதான முகாம் கதைத்தது. உடனடி வானொலி மூல அழைப்பை பொறுப்பாளரிடம் கூறினேன். விடயமும் பரிபாசையில் அறிவிக்கப்பட்டுவிட்டது.

தாக்குதல் படப்பிடிப்புக்கு நாங்கள் 'றொட்டேச'னில் போவது தான் வழக்கம். இந்தமுறை நானும் பிறேமாவும். சுணக்கமின்றி உடைகளை மாற்றிக்கொண்டு தயாராக இருக்கிற 'கமரா'ப் பையைத் திறந்து மீண்டும் ஒருமுறை சரி பார்த்தோம். நான் 'ஸ்டில்'; அவன் 'வீடியோ'. ஆளுக்கொரு பையைத் தோளில் போட்டுக்கொண்டு புறப்படும் தருணம் 'திடு திடு' என்று காடு அதிர, அடுத்த மழை வந்து பிடித்தது. தாமதித்தாலும் மாரி மழை விடப்போவதில்லை. மரக் கிளைகளின் இடையே குடை பிடிக்கவும் முடியாது. எனினும் மழைநீர் கசியாவணணம் "நீர்க் காப்புப் பை" இருந்தமையால் நாங்கள் பிரதான முகாமை நோக்கி நடந்தோம். மழை அள்ளி முழுக வார்ப்பதுபோல் பெய்தது.

பிரதான முகாமில் பாடசாலைகள் மாதிரி அமைந்திருந்த பெரிய கொட்டில்களுக்குள் அனைவருக்கும் தாக்குதலின் கடைசி விளக்கம் அளிக்கப்பட்டது. நாங்கள் போகின்ற போது, மழையோடு மழையாக அணிகள் மைதானத்தில் ஒழுங்குபடுத்தப்படுகின்றது. நீண்ட தூரத்தில் அல்லது எல்லையில் நடைபெறப்போகும் தாக்குதல் என்பதால் எல்லோருக்கும் மூட்டை முடிச்சுக்கள் பெரிதாக இருந்தன. அதிலும் பெண் போராளிகள் பருமனான பைகளை தலையில் ஏற்றிக்கொண்டு அணிவகுத்து நின்றனர்.

நானும் பிறேமாவும் தாக்குதல் பொறுப்பாளரைச் சந்தித்தோம். அவர் எங்களுக்குச் சில விடயங்களைச் சொன்னார். அதன்படி நாங்கள் குறிப்பிட்ட அணியில் சேர்ந்து கொண்டோம். பெண் போராளிகளின் தாக்குதல் பொறுப்பாளராக டென்சியும், வளர்மதியும் இருந்தனர். அனைத்து ஆயத்தங்களையும் செய்துகொண்டு, அவ்விடத்திலிருந்து ஒரு பலம் நிறைந்த இராணுவ அணியாக ஒற்றை வரிசையில் எண் சொல்லிக் கொண்டு எமது நகர்வு ஆரம்பமானது.

ஒரே சீராக பேரணி நகர்கின்றது. நேரம் காலை 11 மணியாவது இருக்கும். எனக்கு அப்போதுதான் பசி தெரிந்தது. வரும்போது பாயாசம் குடிக்கவில்லை என்பதைவிட இரவாவது கொஞ்சம் சோறு சாப்பிட்டிருக்கலாம்... என்று தோன்றிற்று. நாங்கள் சாப்பாடு எதுவும் எடுத்து வரவில்லை; 'பிஸ்கட்' வகையெதுவும் இல்லை. எடுத்து வந்திருந்தாலும் இப்போது உண்பதற்கு அனுமதியில்லை. இனி எப்போது சாப்பாடு கிடைக்குமோ.... என்பதை நினைத்தால் இன்னும் வயிற்றைக் கார்ந்தது.

மழை பௌவ்வல் கட்டிக் கொண்டு இருளாகப் பெய்கின்ற போக்கு, நாளையும் விடுவதாகத் தெரியவில்லை. கடல்மாதிரி தெரிகிற பெண்டுகள்சேனை ஆற்றையும் அதனோடு தொடர்புற்றிருக்கிற நீண்ட நீர்நிலைகளையும் இன்னும் சிறு ஆறுகளையும் நாங்கள் கடக்க வேண்டியிருந்தது. பெண்டுகள் சேனை ஆறு, அறுங்கோடையிலேயே இடுப்பளவு தண்ணி ஓடும். அதைக் கடந்தால்தான் சண்டை நிச்சயம்; நிம்மதி.

மூன்று மைல் நடந்து அந்த சமுத்திர ஆற்றை அண்மித்தோம். 'சொள சொள'வென பேரிரைச் சலுடன் பாயும் அந்த ஆறு. சுமார் 100 மீற்றருக்கு முன்பே எங்களைக் கழுத்தளவு தண்ணீர் பிடித்து விட்டது. சில போராளிகள், நாங்கள் 'மடு' என்று வழங்குகின்ற கிடங்குள் காலை வைத்து பதாறென்று போய்வந்தார்கள்.

ரைபிளுக்கு பொலித்தீன் போட்டு மாளாது என்பதால் எவருமே போடவில்லை. உணவுப் பொருட்களும், தொலைத்தொடர்புக் கருவிகளும் மட்டும் நீர் கசியாமல் பாதுகாக்கப்பட்டு இருந்தது. ஆற்றைக் கடவுபடுத்தி விடுவதற்கு, பக்கத்தில் வதியும் கிராமத்தவர் ஐந்தாறு தோணிகள் சகிதம் காத்து நின்றார்கள். தோணிகள் குறிப்பாக ரைபிள்களையும் உணவுப்பொருட் களையும் இதர சாமான்களையும் அக்கரைப்படுத்துவதற்காகும்.

கரையிலேயே, கழுத்துக்கு மேல் இருந்து தண்ணியை இரண்டு மூன்று தரம் நான் 'வக் வக்' என்று குடித்துவிட்டேன். இருபது இருபத்தைந்து மீற்றர் அகலத்தில், 'கோ..... ஓ.....' என்ற இரைவுடன் பிய்த்து வாங்கும் ஆற்றின் வேகத்தை, மிதந்துவருகின்ற இறந்த மரக்கட்டைகளின் ஓட்டம் காட்டியது. இதனைக் கடக்கவேண்டும் என்று எண்ணுகிற போது, என்னையே மறந்து ஒரு அச்ச உணர்வு படர்ந்து, அங்கே போராளிகளின் கூத்தையும்

## கோளாவிலூர் கிங்ஸ்லி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குதூகலிப்பையும் கண்டு அது அகல்கிறது. இதேபோல் போன வருடத்து மாரிக்குள் இராணுவம் கடந்துகொண்டு காட்டிற்குள் வர முற்பட்டு, 6 சிப்பாய்களை ஆற்றில் விட்டு தோல்வியுடன் திரும்பியது. வழியில் தோணியை ஒளித்து விட்டார்கள் என்ற குற்றத்திற்கு, பதிலுக்குப் பதில் 6 கிராமவாசிகளைப் பிடித்து காலையும் கையையும் கட்டி ஆற்றில் போட்டனர்.

இரண்டு கரையிலும் நின்ற பெரிய மதுரை மரங்களை இணைத்து இரு பெரிய நைலோன் கயிற்றைக் கட்டி நாங்கள் ஒன்றிலும் பெண்போராளிகள் ஒன்றிலுமாகக் கடந்துகொண்டிருந்தோம். கயிற்றையும் ஆளையும் சேர்த்து இழுத்துக் கொண்டு ஓட பிரயத்தனம் செய்த்து ஆறு. அந்தவேளையில் கட்டைகள் வந்தால் ஆள் இல்லை. இவ்வாறு கயிறுகள் வழியாகக் கடக்க வேண்டியிருந்ததால், நீண்ட நேரம் எடுத்தது. தண்ணீருக்குள் நின்று நின்று உடலெல்லாம் குளிரேறி கடகட வென பல்லடிபட நடுங்கியது. பற்களும் இரு தந்தமும் வலித்தது. பசித்துப் பசித்து வயிற்றில் ஒரு புது உணர்வு. உடல் சோர்வில் குந்தவும் முடியாது; சரியவும் முடியாது.

தீர்த்தக்கரை மாதிரி இருந்த ஆற்றின் அக்கரையை அரைவாசிப் பேர் வரை கடந்துவிட்டனர். கயிற்றில் சென்றுகொண்டிருந்த ஒரு போராளியை ஆற்றின் நடுப் பகுதியில் வைத்து எதிர்பாராத விதமாக வட்டமிட்டுவந்த சுழி இழுத்தடித்துக்கொண்டு போகிறது. அப்பொழுது அனைவரது குதூகலமும் அடங்கிப்போனது. அவன் தனது ரைபிளைக் கழற்றி ஒருமுறை உயர்த்தினான். அந்த ரைபிளை அவன் காப்பாற்ற எண்ணியிருக்க வேண்டும். அவ்வளவுதான் தெரிந்தது. அவனைக் காப்பாற்ற நாலைந்துபேர் பாய்ந்தடித்து நீந்தினார்கள். ஆயினும், அடுத்த சுழி வரமுன் அவர்கள் அழைக்கப் பட்டுவிட்டனர்.

சீறிச் சினத்துப் பாயும் இந்த ஆறுமீது ஆத்திரப்பட்டு எதையோ வெல்லாம் சொல்லி முணுமுணுத்துக்கொண்டு திரும்பினேன். ஆற்றையே பரிதவிப்புடன் பார்த்துக் கொண்டு நின்ற பலர், அதிலிருந்து விடுபடாமல் இருந்தார்கள். இவ்வாறு ஆரவாரப்பட்டு, ஒரு போராளியையும் பறிகொடுத்து 6.30 மணியளவில் ஆற்றை முற்றாகக் கடந்து முடித்தோம்.

மழை சற்றுத் தணிந்துவிட்டது. இன்னும் சிறிது தூரம் தண்ணி கடந்து போனால், எல்லாப் பகுதிகளில் இருந்தும் சிங்களவர்களால் துரத்திவிடப்பட்ட தமிழர்களின் ஒரு சிறிய கிராமம் வருகிறது. இவர்களுக்கு எமது அரசியல் பிரிவினரால் குடிசை வீடுகளும், சிறிய பாடசாலையும் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. முன்பு இதனையும் இராணுவத்தினர் இரண்டுமுறை எரித்துவிட்டு சென்றிருந்தனர். கிட்டத்தட்ட இரவு 7.30 மணியளவில் அந்தக் கிராமத்தை நாம் அடைகின்ற போது நாய்கள் எல்லாம் சேர்ந்து கிராமத்தை அமர்க்களப்படுத்திவிட்டன. நாங்கள் இருள் உருவங்களாக நேரே போய் இரு கிடுகுப் பாடசாலைகளுக்குள் அடங்கினோம். ஆறு கடந்து இராணுவம் வரமுடியாது என்ற

# பழந் தமிழ்ப் பெயர்கள் சிங்கள மயமாதல்

மகாவம்சம், தீபவம்சம் ஆகிய சிங்களவரது நூல்களிலும் பல தமிழ்ச் சொற்கள் உண்டு. மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடம்பநதி மல்வத்துஓயாவாகவும் கிருந்துநதி கலுஓயாவாகவும், பட்டிப்பளை ஆறு கல்ஓயாவாகவும், அம்பாறை திகாமடுல்லவாகவும், தம்பலகாமம் தம்பலகமுவ வாகவும் பெயர் மாற்றம் பெற்றுள்ளன.

வரலாற்றை மாற்றுவதற்கு டாக்டர் என். பரணவிதான தாம் விரும்பிய இடத்தில் புத்த விகாரைகளை உருவாக்க தொல்பொருட் திணைக்களத்தை நன்றாகப் பயன்படுத்தினார். அதற்கு அவர் மிகப் பழைய இந்து ஆலயங்களின் இருப்பிடங்களையும் தமிழர் வதியும் பகுதிகளையும் இலக்காக்கினர். உடைந்த புத்தர் சிலைகள் புதிது புதிதாக தோண்டி எடுக்கப்பட்டன. அந்த இடங்களில் புத்த கோவில் முன்னர் இருந்தது என்று எழுதப்பட்டது.

பரணவிதான அனுராதபுரத்திற்கண்மையில் இருந்த எல்லாளன் சமாதியின் கீழ் ஆய்வுசெய்து அந்த இடத்தில் 'எலகரா' என்ற மன்னன் ஆட்சி செய்ததாகவும், அங்கே ஒரு புத்த விகாரை இருந்ததும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்றும் எழுதிவைத்தார். பின்னர் அந்த இடம் 'தக்சிணதூப' மாக பெயர் மாற்றம் பெற்றுள்ளது. மகாவம்சத்தில் சொல்லப்பட்டவையே அவர் கூற்றுப்படி பிழையாகின்றன.

திருகோணமலை பற்றிய ஆராய்ச்சியில் இவரைப் போன்ற பலர் ஈடுபட்டுள்ளனர். 'திருகோண' வில் உள்ள 'கோண' வை 'கோன' என்றும், அந்த இடத்தில் 'கோகன்ன' என்ற பெரிய விகாரை இருந்துள்ள தென்றும், 'சோடகங்தேவ்' என்ற கலிங்க இளவரசன் இந்த விகாரைக்கு யாத்திரை வந்தான் என்றும் சொல்லுகின்றார். வரலாற்று அடிப்படைகளையும் தென்னிந்தியா இலங்கை வரலாற்றையும் தெரிந்து கொள்ள விரும்பாதவர்களின் ஆராய்ச்சி இதுவாகும்.

திரு 'கோணேஸ்வரம்' கிறிஸ்துவுக்கு முன்பு வாழ்ந்த தமிழ் மக்களால் கட்டப்பட்ட கோவில் என்று மகாவம்சம் கூறுகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வகையில், எம்மை இனங்கண்ட கிராம மக்கள் சினிசினென்ற மழையையும் முந்திக்கொண்டு வந்து சூழ்ந்து கொண்டனர். பாடசாலையில் ஆசிரியருக்கு மட்டும் எப்படியோ ஒரு கதிரையும் மேசையும் இருந்தது. நீண்ட நேரம் தண்ணீருக்குள் நின்றிருந்தமையால் கால் வலித்தது. காலை மடக்கி கொஞ்சம் இருந்தபோது, நீர் ஊறிய நிலத்தில் உடல் பட்டதும் சட்டென எழுந்து விட்டேன். நுளம்பு ஈர உடுப்பையும் மீறி "சுள் சுள்" என குத்தியது. நான் காலை உதறி உதறி நின்றிருந்தேன். சில போராளிகள் நுளம்புக் கடியையும் அலட்சியம் செய்து விட்டு இருந்தார்கள்; படுத்திருந்தார்கள்; பகிடி பண்ணினார்கள்.

வந்து 15 நிமிடத்துக்கு மேல் இருக்கும் "இதில் இனியிருந்தால் நுளம்பு தூக்கிக்கொண்டு போய் விடும்." என்று நயமாகக் கூறிய பொறுப்பாளர், சுணங்கமுடியாது என்று புறப்படச் சொன்னார். அப்பொழுது, ஒரு நடுத்தர வயதுடைய அம்மா, அவித்த சோளங் குலை இருக்கிறது; தருவதற்கு சற்று இருக்குமாறு அன்புடன் கூறினார். பின்னர் அவரே எமது நிலைமையைப் புரிந்துகொண்டு சிலருடன் சேர்ந்து வழியில் கொண்டுவந்து வைத்தார்கள். ஒரு வயது முதிர்ந்தவர் எமக்கு நடையில் வைத்து ஒவ்வொன்றாகப் பகிர்கின்றார். எனது வரிசை அவரை அண்மித்து நான் வேண்டுகின்றபோது, ஊர் ஞாபகத்தில் "ஐயா புதிர் எடுத்து சாமிக்கு படைத்துவிட்டீர்களா.....?" என்று கேட்டேன். "சாமிக்குத் தந்தாலும் சரி; உங்களுக்குத் தந்தாலும் சரி" என்றார். பொக்குவாயால் நிமிர்ந்து சிரித்துக் கொள்கிறார். பெற்றுக்கொண்ட சோளங்குலையை கிறிச்சென்று வாயில் வைத்தேன். அதில் அறுசுவையோ, அதிலும் கூடுதலாகவே தெரிந்தது. அவ்விடத்தில் இருந்து இருளோடு இருளாக மறைந்தோம்.

மூன்று மைல் வரை கிரவல் பாதையாக இருந்தது. பின்பு வயல்வெளிப் பாதை. தண்ணீரும், சேறும், பள்ளமும், படுகுழியும், யானைகள் பதித்த சுவடுகளுக்குள் கால் வைத்தால் ஒரு அடிக்குமேல் தாழ்கிறது.

நேரம் 11.30 மணி ஆகின்றது. பாட்டம் பாட்டமாக மழை பெய்து, உடல் சூட்டில் சற்று காயந்துவரும் உடுப்பையும் மீண்டும் நனைத்து தொல்லை செய்திற்று. அதுவும் நித்திரைக்கு மருந்து என்று திருப்திப் படப்போனால் சிலர் நித்திரை தூங்கி விழுந்து எழும்பினர். இதனால் இடைவெளி விடப்பட்டு வியர்க்கின்றவரை ஓட்டமும் நடையும்.

நகர்வு ஆட்டங்காணாமல் இருப்பதற்காக, ஒவ்வொரு சிற்றணிப் பொறுப்பாளர்கட்கும் கடும் உத்தரவு மீண்டும் அறிவிக்கப்பட்டது. அவர்கள், உலகம் தன்னையும் சுற்றி சூரியனையும் சுற்றுவதற்கு நகர்வது போல் செயற்பட்டார்கள். எனக்கு நித்திரையும், பசியும், களைப்பும் சேர்ந்து அப்படியே பேசாமல் படுத்துவிடச் சொன்னது. ஒரு போராளி மயக்கம் போட்டு விழுந்துவிட்டார். உடனே அவசர மருத்து வக்குழு அணுகி முதலுதவி செய்து ஸ்ரெச்சரில் ஏற்றிவிட்டது. தாமதம் இல்லை. இரட்டை வரிசையாக பெண்போராளிகள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களது மூன்றாவது நிலை சிற்றணிதான் அது. அதன் பொறுப்பாளர், அணியின் முன் ஆளை உஷார்ப்படுத்துவதற்காக வேகமாக நடந்துபோனார். முழங்கால்வரை புதையும் உவர் சகதி இழுத்துப் பிடிக்கிறது. அவர் ரைபிளை சிலிங்கில் போர்ட்டுக் கொண்டு தலையில் ஒரு அரிசி மூடையை ஏற்றி வைத்திருந்தார். "அந்த மூட்டை இப்போதைக்கு எனக்குக் கிடைத்தால்...." என்று ஒரு கணம் எண்ணியபோது தலை சுற்றுவது போன்று இருந்தது. மறுகணம் 'தபெக்' என்று விழுந்தெழும்பினேன். 'திக்' என்றது; கமரா...! கமரா பின்பக்கம் போட்டிருந்ததால் பாதிப்பில்லை. பின்னால் கையை வைத்து எடுத்தேன்.

நடந்துகொண்டு இருக்கின்றோம். "சத்தமிடாமல் மெதுவாக காலை வைத்து வரவும்" என்ற

# எல்லாளன் சமாதியில் துட்டகாமினியின் சாம்பல்

அநுராதபுரத்தில் தமிழ் மன்னர்களின் ஆட்சி நீண்டகாலம் நிலவியதை உறுதிப்படுத்தும் நினைவுச் சின்னங்களில் ஒன்று எல்லாளன் சமாதியாகும். 44 ஆண்டுகள் நீதி தவறாது ஆட்சி செய்து மக்களின் நம்பிக்கையைப் பெற்ற எல்லாளன் துட்டகாமினியால் கொல்லப்பட்டபோது அவன் இறந்த இடத்தில் சமாதியொன்றைக் கட்டி இதன் அருகாமையால் செல்லும் பவனிகள் ஒலியை நிறுத்தி மரியாதை செய்யுமாறு துட்டகாமினி கட்டளையிட்டான் என்பது வரலாறு. ஆனால் இலங்கையை ஒரு பௌத்த சிங்கள நாடாகக் காட்ட விரும்பும் அரசுகள் பௌத்த விகாரைகளுக்கு மத்தியில் எல்லாளன் சமாதி தலைநிமிர்ந்து நிற்பதை விரும்பவில்லை. இதை அழிப்பதற்கு, மாற்றியமைப்பதற்கு காலத்திற்குக் காலம் எடுத்த பல முயற்சிகள் தோல்வியடைந்தன. ஆனால் அண்மையில் தென்னிலங்கை தொல்லியலாளர் புதிதாக ஒன்றையும் கண்டுபிடித்தனர். இச்சாமாதியில் இறந்துபட்ட ஒருவரின் சாம்பல் இருப்பதாகவும், அது துட்டகாமினியினுடையதெனவும் கூறியுள்ளனர். வருங்கால வரலாற்று நூல்களில் எல்லாளன் சமாதி துட்டகாமினியின் நினைவுச்சின்னம் என்ற பெயரில் வெளிவந்தாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை.

பா. புஸ்பரட்ணம் வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உத்தரவு முன் வரிசை அஞ்சல் வழியாக வந்தது. சரியாக விளங்காமல் "என்ன?" என்று காதைக் கொடுத்தேன். கடதாசி ஆலையை நோக்கிச் செல்லும் மின் கம்பக் கோபுரம்! இதை ஒவ்வொரு முறையும் இந்த இடத்தில் அவதானிக்கின்ற பொழுது இராணுவத்தைக் காண்கிற பிரமை. கனமான மின் கம்பிகளைத் தாங்கிக் கொண்டு தமிழரின் வயல்வெளியில் உயர்ந்து நிற்பது இருளில் தெரிந்தது. வயல் செய்கை பண்ணி பத்து வருடமாவது இருக்கலாம். இந்தப் போராட்டம் இல்லாவிட்டால், இந்த இடம் சிங்களவரிடம் இருந்திருக்கும். மீண்டும், ஒருதரம் திரும்பிப் பார்த்தேன். அதுவும் எதிர்த்து நிற்பது போல் பட்டது. இடது பக்கம் ராணுவ முகாம் வெளிச்சம் பிரகாசமாகத் தெரிகிறது.

நாங்கள் கடக்கப்போகின்ற ரயில் பாதையும், பிரதான பாதையும் சுமாரான துரத்தில் இருந்தது. பாதை நிலைமையை அறிந்துவர, அணி நகர்த்தும் குழு சென்று வரும்வரை அதில் நிற்கவேண்டியதாயிற்று. பொதுவாக கொழும்பு றோட் என்றும் இதனைச் சொல்லிக்கொள்வோம். இதில் பரஸ்பரம் பதுங்கித் தாக்குதல் நிகழ்வதுண்டு. கடைசியாக எமது அதிரடிப்படை அணி (Commando Group) கொடுத்த நுட்பமான தாக்குதலை அடுத்து, இராணுவம் ரோந்தை முற்றாக நிறுத்திவிட்டது. பாதை கடந்து ஏழு மைல் நடந்திருப்போம். மழை விட்டு வானம் கழுவிக் கவிழ்த்தது போல் வெளித்துக் காணப்படுகிறது. சகதிகளைக் கடந்து உடைந்த குளக்கட்டில், வந்தபடி வரிசையில் அமர்ந்து கால்களுக்கு சிறிது ஓய்வு கொடுத்தோம். குளத்திற்கு மேற்கில் ஒரு சிறிய குடியிருப்பு பாழ்பட்டுக் கிடந்தது. இந்தக் குடியிருப்பை போன வருடம் ஒரு பாரிய இராணுவ நடவடிக்கை மூலம் இராணுவம் வெட்டி அழித்தது. மரங்களெல்லாம் விழுந்து குறுக்கு மறுக்காக கிடக்கிறது. ஒரேயொரு தென்னை மட்டும் மலடுபத்திபோய் சோகமாகக் காற்றில் அசைகின்றது.... இவைகளை எண்ணியபடி பக்கத்தில் இருந்த போராளியின் முதுகில் சாய்ந்தேன்.... 15 நிமிடம். சட்பட்டென்று தட்டி எழுப்பினார்கள். காலை நிமிர்த்தி எழும்பிய போது ஏற்பட்ட வேதனை, இருக்காமலேயே விட்டிருக்கலாம் என்று ஆகியது.

www.tamilarangam.net

வேகமான நடை தொடங்கி விட்டது. கால்களில் எல்லாம் தொட்டாமுள் ஏறி, கிறவல் நிலம் மீது கால் பதிக்கவே கூசுகிறது. ஆயினும் ஊன்றி வைக்காவிட்டால் அணியோடு போகமுடியாது. கல்லோடு முள் ஏறிய பகுதி அமுத்தப்படுகின்றபோது உயிர் போய் வந்தது. ஓட்டமும் நடையும் தொடர்ந்தது.

கிழக்கு வெளிக்கின்ற வேளை ஆண்டாங்குளப் பிரதேசத்தில் உள்ள மதுரங்குளத்தை அண்மித்தோம். பில்பில் என்று விடிகின்றது. அதிகாலை 4.30 மணி. அங்குள்ள போராளிகள் பிரதான முகாமிலிருந்து வந்து மதுராங்குளத்து கிராம மக்களுடன் சேர்ந்து, இறைச்சிக் குழம்புடன் சோறும் சமைத்து வைத்துக் கொண்டு காத்திருந்தார்கள். நாங்கள் போன போக்கிலேயே ஒரு தட்டில் நான்கு ஐந்து பேரென்று கூடினோம். நான் சாப்பிடுவதற்கு ஆவென்றேன். சிறிதும் இயலவில்லை. குளிரின் வேகம் இப்போதுதான் தெரிந்தது. பசியும் இல்லை. இதைவிட ஒரு படுக்கை கிடைத்தால் அதுதான் சொர்க்கமாக இருந்திருக்கும். அனைவரும் சாப்பிட்டு முடிந்து, ஆண்டான்குள பிரதான தளத்தை நோக்கி நடந்தோம். ஆறுமைல் நடந்து காலை 8.30 மணிக்கு போய்த் தட்டினோம். அங்கு பெரிய கொட்டில்கள் இருந்தாலும், எங்களின் தொகைக்குப் போதாமல் போயிற்று. பெண் போராளிகள் வந்த வரத்திலேயே கொண்டுவந்திருந்த பொலித்தீனால் கொட்டில் அடிக்கின்றார்கள். சமையல் வேலையும் நடக்கிறது. நான் எங்கள் கொட்டிலைப் பார்த்தேன். தொங்கல்வரை குறுக்கும் மறுக்குமாக போராளிகள் கிடந்தார்கள். எனது கமராப் பையைக் கழற்றி அருகில் வைத்துவிட்டு, ஒருவர் மீது தலையை வைத்துச் சரிந்தேன். அவ்வளவுதான் தெரியும்.

அன்று பிற்பகல் 4.00 மணிக்கு எல்லைப்புறத்தை நோக்கி மீண்டும் ஆரம்பமான நகர்வு, நள்ளிரவு 12.30 வரை நீடித்தது. அடர்ந்த காட்டுப் பாதையில் 16 மைல்வரை நடந்து தாக்குதல் நிலையை அடைந்தோம்.

சிறிலங்கா, தமிழீழ எல்லை வீதி. தாக்குதல் திட்டத்திற்கு ஏற்ப, தாக்குதல் தளப் பொறுப்பாளரால் கட்டளையிடப்பட்டு, நிலையெடுத்துக் காத்திருக்கிறோம்.

காலை 7.30 மணி. கவசவாகனம் 'ம்ம்...' என்று உறுமிக்கொண்டு புறப்படும் சத்தம் கேட்டது. கழுத்தில் தொங்கிய கமராவை எடுத்து மேலும் ஒரு சொட் 'சடக்' என்று அடித்து உறுதி செய்துகொண்டேன். வலதுபக்கத்தில் ஒரு 15 வயதுடைய போராளி RPG உடன் தயாராகிறான்.

இராணுவத்தினர் "தெமல கொட்டி...." என்று தொடங்கி, சொல்ல முடியாத வார்த்தைகளைப் பேசிப் பயத்தை வெளியிட்டுக் கொண்டு, நகர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

"பட பட"வென்று எமது தாக்குதல் கடுமையாகத் தொடங்கப்பட்ட போது, கவசவாகனம் உன்னுகிற மூச்சுக்கு RPG ஏவப்படுகிறது. அது நிற்க, மற்றொரு கவசவாகனம் முன்னேற, அதற்கும் அடுத்த RPG ஏவப்பட்டு கவசவாகனம் நிறுத்தப்பட்டதும், இராணுவம் எமது கொலை வலயத்துக்குள் சிக்கி, திக்குத் திசை மாறியது. இருவர் புழுதி அடித்த யானை மாதிரி எங்கள் முன்பாக ஓடி வந்து, எங்களைக் கண்டதும் துப்பாக்கியை நீட்டுகின்றனர். அப்பொழுது இங்கிருந்து ஒரு பெண்போராளி இலகு இயந்திரத் துப்பாக்கியால் சரமாரி பொழிந்தார். அவர்கள் சரிகின்றனர். நான் படமாக்கினேன்.

தாக்குதல் முடிந்து கைப்பற்றிய இராணுவப் பொருள்களையும், விழுப்புண் அடைந்த நான்கு போராளிகளையும், வீரமரணமடைந்த ஒரு போராளியையும் 'ஸ்ரெச்சரில்' ஏற்றிக்கொண்டு எல்லையிலிருந்து திரும்பினோம். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## சிறுகதை

# உண்மை

நச நசவென்று இருந்த பாதை ஊடாக ஓட்டோ இரைந்தபடி ஊர்ந்தது. அது தள்ளிய மண்ணெண்ணையின் கரும்புகையைக் குடித்தபடி ஒரு ஹொண்டா எம்.டி.நைன்டி.

அதில் அதன் உருவம் தெரியாதபடி ஆட்கள். அவர்களைச் சுமக்கும் அந்த வண்டியை லாவகமாக ஓட்டியபடி கம்பீரமான



ஒருவன். எல்லோரையும் தன் தலையில் சுமப்பதுபோல் பாவனையுடன் கூடவே அவர்களின் பொதிகள்.

எம்.டி. கக்கிய புகையைச் சுவைத்தபடி சில சைக்கிள்கள். அவற்றிலும் சுமைகளும் ஆட்களும்.

கிளாலி படகுத்துறையை நோக்கிச் செல்லும் பாதையில் அவர்கள் படையெடுத்திருந்தனர். ஆனையிறவில் இருந்து 'யாழ்தேவி' புறப்பட்டதால் கிளாலிப்பாதை தடைப்பட்ட பின்னர் நடைபெறும் முதலாவது படகுப் பயணத்திற்காக அவர்கள் பயணித்திருந்தார்கள்.

www.tamilarangam.net

* * *

புறப்படும்போது மெல்லியதாக மழை அடித்தது. பெய்வோமா? வேண்டாமா? எனச் சிந்தனை செய்து கடைசியில் 'யாழ்தேவி' போல அதுவும் பிசு பிசுத்து அடங்கிப்போய்விட்டது.

பதினொருமணிக்கு ஓட்டோ பயணப்பட ஆயத்தமாகி, தண்ணீர் இறைப்புக்குத் தயாராகும் 'வாட்டர் பம்' போல இறைக்கத்தொடங்கியது.

மாமாவும் மாமியும் கூடவே அவர்களையே அடைத்துவைக்கக் கூடியவாறான அளவுகளில் சூட்கேசும்; அவைகளின் கற்பாறைச் சுமைகளாய் பொருட்கள்.

"இதென்ன கோதாரி" எனச் சங்கர் முணுமுணுத்தான்.

"கிளாலிக் கடலில் இப்படி இரண்டு சூட்கேசை ஏத்தினால் காணும் போட் கவிழுறதுக்கு" என்றான் சுரேஷ்.

மாமாவைம் மாமியைம் பயணமேத்த முதலில் சுரேஷ்தான் போவதாக இருந்தது. அவன்தான் வீட்டுக்குப் பெரியவன்.

சங்கரை விட அப்பாவுக்கும் அம்மாவுக்கும் விருப்பமில்லை. என்றாலும் சங்கர் விடாக்கண்டனாக இருந்தான்.

சண்டை நடந்த இடத்தைப் பார்ப்பதில் சங்கருக்கு ஆர்வம் இருந்தது. ஏற்கனவே போர்க்கால கருத்தரங்கில் இடம்பெற்ற வீடியோக் காட்சியில் சண்டையின் சில காட்சிகளைப் பார்த்ததுதான் என்றாலும், அது நடந்த இடத்தைப் பார்ப்பது என்பது கள அனுபவம்தான்.

"மிதிவெடி கிடக்கும்; வெடிக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

காத குண்டுகள் இருக்கும்"

என அம்மாவும் அப்பாவும் செய்த ஆலாபனைகள் எல்லாம் தமிழீழப் பிரதேசத்தில் அறிவிக்கப் படும் ஊரடங்குச் சட்டம் போல கவனிக்காமலே போய்விட்டது.

"டேய் சுரேஷ், உவனை என்னடா செய்யிறது? ஒரு இடத் தில ஒரு நிமிஷம் சும்மா நிக்க மாட்டான். அங்கை போய் இறங்கி கொம்மானும் மாமியும் போட் ஏறும்வரை உவன் சும்மா இருப் பானே" என்று புலம்பிய அம்மா வைப் பார்த்து வேடிக்கையாகச் சிரித்தான் சங்கர்.

"ஆமிச் சென்றிக்குக் கிட்டப் போய் பங்கர் வெட்டின எனக்கு எந்த நேரத்தில என்ன செய்யிறது எண்டு தெரியும்" என்றான் பதிலுக்கு.

அம்மாவின் முகம் இருண்டு கறுத்தது.

"நீங்களும் போட்டுவாங்கோ வன்" என்றாள், கணவரைப் பார்த்து. அப்பாவுக்குக் கிளாலியை நினைக்கவே பயமாக இருந்தது. வானத்தில் இரைவதைக் கேட்ட வுடனே பதறுகின்ற மனுசன் அவர்.

* * *

மாமாவும், மாமியும் சகலரி டமும் விடைபெற்றார்கள். யாழ்ப் பாணத்தை விட்டுப் போவது அவர் களுக்குச் சந்தோசமாய் இருந்தது. ஆனாலும் ஒருவகைப் பதட்டம் இருந்தது.

கிளாலிக் கடலைக் கடந்ததும் அந்தப் பதட்டமும் போய்விடும் என்பது சங்கருக்குத் தெரியும்.

மாமாவும் மாமியும் கொஞ்சக் காலமாகவே யாழ்ப்பாணத்தை விட்டுப் போவதற்கு அதீத அக்கறை காட்டினார்கள். அதற்கான காரண காரியம் பெரிதாக ஒன்றும் இல்லை.

"என்ன இருக்கிறது எங்க ளுக்கு?" என்று மாமி அடிக்கடி கேட்பார்.

'பாங்'கில் உள்ள காசையும் உடம்பில் சுமக்கும் நகைகளையும் விட வேறு என்ன இந்த மண்ணில் இருக்கிறது, என்பதுதான் அதன் அர்த்தம்.

குடியிருந்த இருபது பரப்பு வளவும் அதில் மாளிகை மாதிரி வீடு, வளவில் இருந்து நாலைந்து வளைவுகள் தாண்டிச் செல்லும் ஒழுங்கையூடாகப் போனால் வரும் தோட்டக்காணி எல்லாமே இரா ணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங் களாகிவிட்டன.

சூட்டுச் சத்தங்களும், விசில் அடித்தபடி வந்த 'ஷெல்' சத்தங் களையும் கேட்கத் தொடங்கிய பின்னர் போட்டிருந்த உடுப்பு களோடும், தயாராக வைக்கப் பட்டிருந்த நகைகளோடும் வீட்டை விட்டு ஓடிவந்த கதை உண்மை. பிறகு போகமுடியவில்லை.

பிள்ளைகள் எல்லோரும் ஏற்கனவே வெளிநாடு போய் இருந்தனர். வீட்டையும் வளவுக ளையும் சொத்துக்களையும் நாள் தவறாமல் சாப்பிட்டுக் கொண்டு மாமாவும் மாமியும் காவல் காத்து வந்தார்கள்.

இப்போது அதுவும் போய் விட்டது. பிறகு ஏன் இந்த மண் ணில் இருப்பான்? என்றுதான் மாமி கேட்டபடி இருந்தார்.

* * *

கிளாலிக்கு 'யாழ்தேவி' புறப் பட்டு கடற்பாதைக்குப் பிரச்சினை வர மாமி புராணம் தொடங்கி விட்டார். "என்னெண்டு இனிப் போறது? அவன் மூத்தவன் எத்தனை கடிதம் போட்டிட்டான். கடவுளே இனி என்ன செய்யிறது?"

மாமா கச்சேரிக்கும் போய் வந்தார். கப்பலிலும் போகலாமா என்று சுழியோடிப் பார்த்தார்.

சாமான்கள் வராமல் செத்துப் போகும் லட்சக்கணக்கான சனங்

# பன்னிருவர் நினைவாக வீடுகள் அமைப்பு

இந்திய அரசின் வல்லாதிக்க வெறியை அம்பலப்படுத்தி வீரச்சாவைத் தழுவிக்கொண்ட பன்னிரு வேங்கைகள் நினைவாக, இடபெயர்ந்த வீடற்ற மக்களுக்கு, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் சுன்னாகம் கல்லாக்கட்டுவன் பகுதியில் 7 வீடுகள் அமைக்கப்பட்டு அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

வலிகாமம் கோட்ட, அரசியல் துறையைச் சேர்ந்த திரு. கலைவரதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சுன்னாகம் சிற்றூர் உதவிப் பொறுப்பாளர் திரு. அன்பு மங்கள விளக்கேற்றி வைக்க, யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி வீடுகளை உரிமையாளர்களுக்கு வழங்கினார். இந் நிகழ்வில், வலிகாம கோட்ட, அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. திருக்குமரன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த மணியண்ணா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சக்திப்பகுதி அலுவலகத்தில் ஆக்கிவாயு பிறப்பாக்கி




தற்போது நிலவிவரும் பெற்றோலிய எரிபொருள் பிரச்சினையை ஓரளவேனும் நிவர்த்தி செய்ய குறைந்த செலவில் ஒரு மாற்றீடாக ஆக்கிவாயு பிறப்பாக்கியினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சக்திப் பகுதியினர் வடிவமைத்துள்ளனர்.

இரட்டைச் சூட்டடுப்புத் திட்டத்தை தொடர்ந்து சக்திப் பகுதியின் இரண்டாவது முக்கியமான அறிமுகமாக இத் திட்டம் விளங்குகிறது. இதன் மூலம் விவசாயிகள், தொழிற்சாலை உரிமையாளர்கள், இயந்திர பாவனையாளர்கள் மிக விரைவில் பயன்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத் திட்டம் தொடர்பான விபரங்களையும் ஆக்கிவாயுவில் இயந்திரம் இயங்குவதையும் தாவடியில் அமைந்துள்ள சக்திப் பகுதி அலுவலகத்தில் எல்லா நாட்களிலும் காலை 10 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரையும் பார்வையிடலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

களுடன் தாங்களும் சேர்ந்து விடுவோமோ எனப்பயந்திருக்க வேண்டும்.

யாழ்தேவி என்று வந்தவர்கள் அந்தக் காலத்து இன்டர்சிற்றி ரயிலாக திரும்பிப்போக கிளாலிப் போக்குவரத்து மீண்டும் நடக்கும் என அறிவிப்பு வந்ததும் மாமாவும் மாமியும் தப்பினால் போதும் என்று ஆயத்தமாகிவிட்டார்கள்.

* * *

சேறாகிப்போன தெருவோரமாக தென்னைமரங்கள் தெரிந்தன. எரிந்து கருகிப்போன குடிசைகள், வெறியாட்டம் நடந்ததிற்கான ஆழப் பதிந்து சுவடுகளாகச் சாட்சி சொல்லின.

சேற்றுத்தரையை உழுதிருந்தது போல டாங்கிகளினதும் கவச வாகனங்களினதும் வரித்தடங்கள்.

ஷெல் வீச்சுகளுக்கும், விமானத் தாக்குதலுக்கும் சிதறியிருந்த மரங்களையும் கட்டிடங்களையும் தாண்டி வந்தால் மண்வெளி எங்கும் உக்கிரமான போர் நடந்தமைக்கான முழுமையான அறிகுறிகள்.

மாமாவும் மாமியும் பதட்டத்துடன் அவற்றினைப் பார்த்தனர்.

"என்ரை அம்மாளே என்ன கஸ்டப்பட்டு எண்டாலும் இண்டைக்கு போய்ச்சேந்திடவேணும்" என்று மாமி முணுமுணுத்தாள்.

"உப்பிடித்தான் எல்லா இடமும் நடக்குமெண்டால் இஞ்சை இருந்து என்ன செய்யிறது?" என்றார் மாமா பதிலுக்கு.

ஓட்டோவின் வேகம் குறைந்து ஊரத்தொடங்கியது. பாதையின் ஓரமாக தலைகளில் சுமையுடனும், களைத்துப்போன முகங்களுடனும் சனங்கள்.

"உதுகளும் போட்டுக்கே போகுதுகள்?" என்று மாமா கேட்டார்.

"ஆர்?" என்றான் சங்கர்.

"உதில போற சனங்கள் தான்?"

"உவை இஞ்சை குடியிருந்த சனங்கள். இப்ப திரும்ப குடியிருக்க வருகுதுகள்."

"என்ன இஞ்சையோ?" என்றாள் மாமி வியப்புடன்.

"ஓமோம்?"

"மெய்யோ"

"நாலு தடியும் ஐஞ்சு ஓலையும் இருந்தால் ஒரு கொட்டில் போட்டிடுங்கள். பிறகு நிம்மதியான சீவியம்"

மாமிக்கு நம்புவது கஷ்டமாக இருந்தது.

"இந்தச் சனங்களுக்கு மாமி, சொந்தமாய் நிலமோ, வீடோ கிடையாது. எண்டாலும் இந்த மண்ணில சீவிக்குதுகள்"

மாமி, சங்கரை விநோதமாகப் பார்த்தார்.

"இஞ்சை சொந்தமாய் ஒண்டும் இல்லாட்டியும் மாமி, இது அதுகளின்டை சொந்தமண்" என்றான் சங்கர்.

www.tamilarangam.net

1994 ஆண்டுக்கான நாட்காட்டி விடுதலைப் புலிகளின் சர்வதேச செயலகத்தினால் வெளியிடப்பட்டிருக்கிறது.

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே.பிரபாகரன் அவர்களின் உருவப்படத்தை முகமாகத் தாங்கி இது வெளிவந்திருக்கிறது.

இவ் நாட்காட்டியில் திங்கள்கள் தமிழில் குறிக்கப்பட்டிருக்கிறது. வேற்று மொழிக்கலப்பால் தமிழ் சொற்கள் மெல்ல மெல்ல அழிந்து போகாது அவை தமிழராகிய எம்மிடம் புழக்கத்திலிருப்பதற்கான நிலையைக் கொண்டுவரும் ஒரு முன்னெடுப்பாக இதனைக் கருதலாம்.

தமிழில் இதுவரை காலமும் வழங்கி வந்த நாட்களில் விடுபட்ட தமிழ் சொற்கள் மீண்டும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நாட்காட்டியில் போராட்ட காலத்தில் திருப்புமுனையை ஏற்படுத்திய நாட்கள் நினைவழியாது நின்று எம்முள் தொடரும் வண்ணமாக குறிக்கப்பட்டிருக்கின்றன. இந்திய இராணுவத்துடனான போர் தொடங்கிய நாள், திலிபனின் நினைவு நாள், அன்னைபூபதியின் நினைவு நாள், கரும்புலிகளின் நினைவு நாள், மாவீரர் நாள் என்பனவாகும்.

மேலும் சிறந்த புகைப்படங்கள் சமகால வீரவரலாற்றை நினைவு கூர வைப்பதோடு, இதயத்தை நெருடும் எமது மண்ணின் போராட்ட வாழ்வியலையும், புதிய அரசொன்றின் உருவாக்கத்திற்கான அடிப்படைக் கட்டுமானங்களின் தோற்றத்தையும், விடுதலைக்கான எழுச்சிமிகு மாற்றங்களையும் வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளன. ஒட்டுமொத்தமாக இந்நாட்காட்டி தமிழீழ மக்களின் விடுதலையை குறிகாட்டி நிற்கிறது.











































தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழத்தில் இயங்கிவரும் 'தமிழீழக் காவல் துறை'யின் உருவாக்கத்தின் பின்னர் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் குறித்து, காவல்துறைப் பொறுப்பாளர் திரு.பா. நடேசன் அவர்கள் யாழ். பத்திரிகைகளுக்கு செவ்வி வழங்கும்போது, போர்க்கால சூழ்நிலையில், தொழில்களை இழந்தும், சொத்துக்களை இழந்தும் அகதி முகாம்களில் ஏராளமான மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தமிழீழ மக்கள் சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருகின்றனர். இவ்வாறான சூழ்நிலைகளில் எமது மக்கள் மத்தியில் ஏற்படும் பல்வேறுபட்ட சமூகப் பிரச்சினைகள், சமூகக் குற்றங்கள் ஆகியவற்றைக் களைந்து, சமாதானமும் சமூக நீதியும் கொண்ட ஒரு உன்னத சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் பணியில் காவல்துறை செயல்பட்டு வருகின்றது எனத் தெரிவித்துள்ளார். எமது மக்களுக்கு சவாலாக இருந்த சமூகக் குற்றங்களை பெருமளவில் வீழ்ச்சியடையச் செய்துள்ளோம் எனத் தெரிவித்த அவர், பாரிய குற்றச் செயல்கள் 70 வீதத்தாலும், பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் 90 வீதத்தாலும் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.



காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீட்டுக்கு வேலி அல்ல..... நாட்டுக்கு எல்லை வேண்டும்!

ஒவ்வொரு மனிதனின் பிறப்புக்கும்
அர்த்தம் இருக்கிறது.
பிறப்புக்கும் இறப்புக்குமான இடைவெளிக்குள்
எல்லோருமே பூமியில் தாம் பிறப்பெடுத்ததை
அழியாத பதிவாக்கிவிட்டுப் போகமுடியும்.
ஆனால்.... அதிகமானவர்கள் முயற்சிப்பதில்லை.
சோம்பற் கதிரைகள் எம்மை எழும்பவிடுவதில்லை.
விறகாகும் மரங்களைப் போல
காய்ந்து, எரிந்து, சாம்பலாகி விடுகின்றோம்.
பூமிப் பந்தெங்கும் தெரிந்தவர்களாக.....
ஒருசிலரே உயர்ந்து நிற்கின்றனர்
ஒரு தந்தை தந்தைக்குரிய கடமையை,
ஒரு தாய் தாய்க்குரிய பொறுப்பை,
ஒரு கணவன் கணவனுக்குரிய பணியை,
ஒரு மனைவி மனைவிக்குரிய கடமையை,
விரும்பி ஏற்றுச்செய்து முடிப்பது போல
ஒரு மனிதன் தன் மண்ணுக்குரிய கடமையை,
ஒரு தமிழன் தன் தாயகத்துக்குரிய பணியை
விரும்பி ஏற்றுச் செய்வது வெகுகுறைவு.
அன்னதான மண்டபத்தில்.....
முதற்பந்திக்கு முன்னேறத் துடிக்கும் தமிழன்
இரத்ததானமென்றால் மட்டும்
தன்னை ஒட்டியுலர்ந்தவனாக
உருவகித்துக் கொள்ளுகின்றான்.
தாய் மண்ணுக்கு எல்லையிட வாருங்கள்
என்றால்
எழுந்து வராத தமிழன்
தான் குடியிருக்கும் வளவுக்கு மட்டும்
ஐந்து வேலியும்
பன்னிரண்டு படலையும் போட்டு
இருபத்துநான்கு பூட்டும் பூட்டிவிட்டு
திறப்பை இடுப்பிலேயே வைத்திருக்கின்றான்.
இன்று தேவைப்படுவதெல்லாம்
நாட்டுக்கு எல்லையே தவிர
வீட்டுக்கு வேலியும், பூட்டுமல்ல.....
தேவை ஏற்படும் போது மட்டும்
தேசம் எங்களை அழைத்துக் கொள்கிறது.
இன்று அன்னை பூமி அழைப்பு
விடுத்துள்ளாள்.
இந்தக் "காலத்தின் குரல்" காற்றிலே பரவி
பிறவிச் செவிடர்களுக்குக் கூட

## உலைக்களம்

### விசாகன்

அதிர்வுகளை ஏற்படுத்துகின்றது.
தாய்நிலத்தின் வாழ்வும், தாழ்வும்
சேய்களாகிய எங்களுக்கே சேரும்.
எத்தனை காலத்துக்கு எங்கள் தேசம்
சிறைப்பட்டிருப்பது?
இன்னும் எத்தனை வருடங்களுக்கு
அன்னைமண் அழுதுகொண்டிருப்பது?
நாங்கள் பாதம்பட ஏறிமிதிக்கும் போது
மேனி சிலிர்த்துக்கொள்ளும் தாயகம்
எதிரி முத்தமிட்டாலும் ஏற்றுக்கொள்வதில்லை.
தன் பிள்ளைகள் சிறுநீர் கழித்தால்.....
தீர்த்தத் திருவிழாவாகவும்
மலம்கழித்தால்..... சந்தனக் காப்பாகவும்
மகிழ்ந்து ஏற்றுக்கொள்ளும் தாயகம்
பகைவன் பன்னீர் தெளித்தாலும்
ஏற்றுக் கொள்வதில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏன் தெரியுமா?
எங்களை தன்மடிதவழும் மழலைகளாகக்
கருதுகின்றது.
எதிரி கட்டியணைத்தாலும் காறித்துப்புகின்றது.
ஏன் தெரியுமா?
ஆக்கிரமிப்பாளர்களை எந்த மண்ணும்
அங்கீகரிப்பதில்லை.....
எங்கள் தாய்நிலத்தில்
மஞ்சள் நிறமாகப் பூத்துக் கிடக்கும்
ஆவரசம் பூவிற்கூட ஒரு அழகிருக்கிறது
கத்தரிப்பூ வர்ணத்தில்
நாகதாளி பழுத்திருக்கும் போது எத்தனை எழில்
அருவி வெட்டிய வயல்களில்......
முள்ளி பூத்திருக்கும்
அதுகூட நெஞ்சத்தைக் கிள்ளி எடுக்கும்.
கள்ளிச் செடிகளுக்கு அழகில்லையா?
ஏனில்லை,
எங்கள் மண்ணில் எதுதான் அழகில்லை.
இத்தனை வடிவையும் எப்படி இழப்பது?
எதிரியிடம் கொடுத்துவிட்டு எப்படிக் கிடப்பது?

பெற்றதாயை மற்றொருவன் எட்டி
உதைக்கும்போது
சுமந்துபெற்ற பிள்ளை சும்மா இருப்பானாகில்
அவன் பிள்ளையல்ல..... பிறவிக்குருடன்.
கட்டிய மனைவிக்கு இன்னொருவன்
கைநீட்டும்போது
புருஷன் பார்த்துக்கொண்டு பேசாமல்
இருப்பானாகில்
அவன் புருஷனல்ல.... கோழை.
தாய்நிலத்தை பகைவன் தணலிலிடும்போது
பாய்சுருட்டி வைக்காதவன் மனிதனல்ல.....
வந்த எதிரியை வாசலில் வரவேற்று
சந்தனம் கொடுப்பவன் தமிழனல்ல.
காலத்தின்குரல் காதுகளில் கேட்கும்போது
நாளநரம்புகள் துடிக்க வேண்டும்.
உலகமெங்கம் நிலவு ஒன்றுதான்
"அரியாலைக்கு" மேலேறிவரும் நிலவுதான்
ஆபிரிக்கக் கண்டத்திலும் தெரிகிறது.
"கதிரவெளியில்" பாற்குடம் சரிக்கும் நிலவுதான்
கனடாவிலும் காலித்து வருகிறது.
ஆனாலும்..... அரியாலையில் பார்க்கும் நிலவும்
கதிரவெளியில் தரிசிக்கும் அதே நிலவும்தான்
எமக்கு அழகாகவும் குளிர்ச்சியாகவும் இருக்கிறது.
ஏன் தெரியுமா?
இது எங்கள் சொந்த மண்ணில் ஏறிவரும்
நிலவு.....


இந்த உணர்வோடுதானே
எங்கள் "பிள்ளைகள்" உயிர்கொடுக்கின்றனர்.
"புலிகள்" "பூநகரி"க்குள் புகுந்தபோது
அவர்களின் அடிமனதில் ஆர்ப்பரித்த
உணர்வு என்ன?
இது எம் தாய் நிலம்.
இது எம் அன்னை மடி.
இது எம்மைப் பெற்ற மண்.
இதில் எதிரி எப்படி ஏறி இருக்கமுடியும்?
என்ற கேள்வியே அவர்கள் மூட்டிய வேள்வி.
"பூநகரி"
தமிழ்க்குறுநில மன்னர்களின் தலைநகரம்.
தன்னளவிலாவது தனியரசாக இருந்தபூமி.
சின்னவிரலாயினும்
வைரமோதிரம் அணிந்தவிரல்.
"நாகதேவன்துறை"
தமிழரின் சின்னப்படகுத்துறை
பெரிய கப்பல்கள் வந்துபோகவில்லைத்தான்
என்றாலும்
அச்சமில்லாது தானியமாவது ஏற்றிய துறை.
"இந்த இடங்களை எப்படி எதிரியிடம் விடுவது?"
என்றபடிதான் புலிகள் ஏறிப் பாய்ந்தார்கள்.
இந்த உணர்வு... நெஞ்செல்லாம் பூத்து
எல்லோருக்கும் என்று வருமோ
அன்று தமிழீழம்!

★★★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நகர்த்திச் செல்லும் தலைவனே எழுதிச் செல்லும் வரலாறு



எந்தவொரு விடுதலைப் போராட்டத்திலும் காண முடியாத பல்வேறுபட்ட விசேடமான குணவியல்புகளைக் கொண்டது தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பது இப்போது மேலும் உறுதியாக்கப்பட்டுவிட்டது. அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்தால் வெளியிடப்பட்ட "எனது மக்களின் விடுதலைக்காக" என்கின்ற தலைவர் பிரபாகரனின் சிந்தனைத் தொகுப்பு பற்றியே இங்கு குறிப்பிடுகிறோம். 300 பக்கங்கட்கு மேல் கொண்ட இந்நூல் அறிக்கை வடிவமாக, நேர்காணல் வடிவமாக, கடித வடிவமாக, மேடைப்பேச்சு வடிவமாக எனப்பலதரப்பட்ட வடிவில் அமைந்துள்ளது. மிக வித்தியாசமான முறையில் ஒரு அதிமுக்கியமான வரலாற்று காலகட்டத்தில் காலப் பொருத்தமாக தமிழினம் ஒரு கணம் நிதானித்து முன்னைய வரலாறுகளை மீள் நினைவூட்டி முனைப்புடன் முன்செல்லவேண்டிய சூழ்நிலையில் வெளியாகியுள்ளது. அது மட்டுமல்ல மலைவிழுங்கி மகாதேவன் போல வரலாற்றுண்மைகளை விழுங்கி பேரினவாதப் பொய்களைக் கூச்சலாக வெளிப்படுத்தும் இன்றைய சிங்களத் தலைமைக்கு தக்க பதிலடி கொடுக்கும் வண்ணம் வரலாற்றுண்மைகளை இந்நூல் வெளிப்படுத்துகின்றது. "ஜே.ஆர். ஒரு உண்மையான பௌத்தராக இருந்திருப்பின் நான் ஆயுதம் ஏந்தியிருக்க நேர்ந்திராது" என்கிற தலைவரின் காத்திரமான பதில் (1984 மார்ச் சண்டே இதழில் வெளியான பேட்டி) இதற்கு தக்க சான்றாகும். இவற்றையெல்லாம் விட முக்கியமானது என்னவென்றால் போராட்டம் நிகழ்த்தப்படும் போதே அது வழிநடத்தப்படும் முதன்மை நபராலே அது வரலாறாக்கப்படும் விதம்தான்; இது வேறு எங்கும் காணமுடியாதது. ஏனென்றால், தலைவரின் சிந்தனை வடிவங்களே செயல்வடிவமாகி அச்செயல் வடிவமே தலைவர் வாயிலாக சொல் வடிவம் பெறுவதால், இந்நாடு பெறுமதியான வரலாற்று ஆவணம் உருவாகிவிட்டது. இங்கே இன்னொரு விடயம் சுட்டிக்காட்டப்படவேண்டும். ஏனென்றால் பொதுவாக தமிழ்நாட்டில் என்றாலென்ன, குறிப்பாக தமிழீழத்தில் என்றாலென்ன, தனது வரலாற்றையே செப்பமாக காலத்தொகுப்பாக குறித்துவைக்கும் பழக்கமின்மை தமிழனின் பெருத்த குறைபாடாக அறிவாளரால் சொல்லப்பட்டுள்ளது. இங்கே இப்போது அக்குறைபாடு இல்லாமல் போகிறது. இனிவரும் சந்ததி இப்போதுள்ள சந்ததி மேல் குறைசொல்ல வழியில்லாமல் போகின்றது.

**பாலகுமாரன்**

"வரலாறு எனது வழிகாட்டி" எனத்தொடங்கி "சத்தியத்தின் அடிப்படையில் சமூகநீதி மலரவேண்டும்" என தர்க்கரீதியாக முடிந்தும், இத்தொகுப்புநூல் 1984ஆம் ஆண்டிலிருந்து 1993ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி உள்ளடக்கும் முக்கிய நிகழ்வுகளை விளக்கி நிற்கிறது. அத்தோடன்றி அக்காலகட்டத்தில் உடனடியாக வெளியிடமுடியாதிருந்த பல உண்மைத் தகவல்களை, முக்கிய அரசியல் மடல்களை தமிழ் மக்கள்முன் வெளிப்படையாக வைக்கின்றது. குறிப்பாக எம்மக்கள் மீது அநீதியாக இந்தியப்படையால் தொடுக்கப்பட்ட போர் பற்றி எம்.ஜி.ஆர். அவர்கட்கு தலைவர் எழுதிய 11.10.1987 ஆம் திகதிய மடல், அதுபோல முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்திக்கு எழுதப்பட்ட பல மடல்கள், ஐ.நா. செயலாளருக்கு, அணிசேரா அமைப்பிற்கு இந்தியப் படையின் கொடூரம் குறித்து, போரை நிறுத்தவேண்டிய அவசியம் குறித்து எழுதப்பட்ட இராஜதந்திர வகையிலான மடல்கள் முக்கிய


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மானவை. இவையெல்லாம் இன்று வெறும் மடல்கள் அல்ல. தமிழீழ மக்கள் தமது விடுதலையை வென்றெடுக்க வேண்டியதற்காக தார்மீக நியாயங்களை நிறுவியவையாக, விடுதலைப்போர் எவ்வாறு தவிர்க்க முடியாதது ஆகிவிட்டது என்பதற்கான ஆணித்தரமான சான்றுகளை முன்வைப்பவையாகிவிட்டன. அவ்வகையில் 1980 இன் பின்னான தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் எவ்விதம் படிப்படியாக தமிழீழ மக்களின் விடுதலைக்கான போராட்டமாக, பங்காகப் பரிணமித்தது பற்றி அறியமுடியும்.

இத்தொகுப்பு நூலின் தனித்த சிறப்பியல்பு தலைவர் பிரபாகரனின் சிந்தனையில் படிமுறை வளர்ச்சியை, தாக்கம் முதலிலேயே எடுக்கப்பட்ட முடிவுகளின் இன்றைய பொருத்தத்தை, எதிர்காலத்தை முற்கூட்டியே பிசகின்றி கணிக்கும் ஆற்றலை, அணுகுமுறைகளை அறிய வழிவகுப்பதேயாகும். இதேபோன்ற பல உண்மைகள் இந்நூலுக்குள் விரவிக்கிடக்கின்றன. இந்நூலை 1987க்கு முன்னான காலப்பகுதி, 87-90க்கும் இடைப்பட்ட பகுதி, 90க்கும் பிற்பட்ட பகுதியென மூன்றாக வகுக்க முடிகிறது. முதற்பகுதி தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் காரணங்களை அதன் நியாயத்தை இலட்சியத்திற்கு பாதகமேற்படாமல் இந்திய உறவினை அதன் தலையீட்டை கையாள முயன்றமை பற்றி பல செய்திகள் உள்ளன. இரண்டாவது காலகட்டத்தில் இங்குவந்த இந்தியப்படை வழிதவறி, சிங்களச் சதிக்கு இரையானது பற்றி, அப்போரை நிறுத்த மேற்கொண்ட முயற்சிகள் பற்றிய தகவல்களைக் கொண்டுள்ளது. ஆனால் இவற்றிலெல்லாம் முக்கியமானதாக, மூன்றாம் காலகட்டப்பகுதி அமைகின்றது. முன்னிரு கட்டங்களை விட வேறுபட்டதாக தலைவரின் தன்னுணர்வுகளை, பட்டறிவின் பண்பினை, பல விடயங்கள் பற்றி அவாவி நிற்கும் அவரது ஆவல்களை, ஒரரு பெரும் போரை நடாத்தும். அதேசமயம் தமிழ் மக்களின் பல்துறை சார் வளர்ச்சிக்காக தமிழ்த்தேசத்தின் கட்டுக்கோப்பான எதிர்கால விருத்திக்கான அவரது எண்ணப்பாங்குகளை அறிய முடிகின்றது.

இவை எல்லாவற்றையும் விட மிகமுக்கியமானது, தமிழ் மக்கள் அனைவருமே மிக்க விருப்புடன் அறியமுற்படும் அறிய விரும்பும் தலைவரின் ஆளுமை, அவரது தனித்த எண்ணங்கள் பற்றிய பூரண வடிவத்தையும், இந்நூல் அளிப்பது தான். அவ்வகையில் இது ஒரு ஆய்வுக்குரிய அதிசய நூலாக அமையப்போகிறது. ஏனெனில் தலைவரின் தனித்த இயல்பான, இயற்கையின் இயல்பினை வரலாற்று விதிகளை அறிந்து அவ்விதிகளையே நெறிப்படுத்தி அதேசமயம் புதிய வரலாறு படைக்கும் அவரின் உள்ளுணர்வே இங்கு முக்கியம் அல்லவா! இந்நூலுக்குள் அதற்கான சான்றுகள் பரந்துகிடக்கின்றன. 1984 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சண்டே இதழில் வெளிவந்த செவ்வியில் "இயற்கை எனது நண்பன், வாழ்க்கை எனது தத்துவாசிரியன், வரலாறு எனது வழிகாட்டி" என்பது தலைவர் எந்த முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட தத்துவ வரம்பிற்குள்ளும் தன்னை அடைத்துக்




'மாதன முத்தா'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்ளாமையை புலப்படுத்தும். அதேபோல், "கெரில்லா போர் முற்றையை சிலர் இப்போது கண்டித்து விமரிசனம் செய்கின்றனர், நாம் கெரில்லா போராட்டத்தை மக்கள் மத்தியில் படிப்படியாக நிலைநிறுத்தி மக்களின் பங்களிப்போடு விரிவுபடுத்தி வெகுசன யுத்தமாக்கும் கொள்கை திட்டத்தையே பின்பற்றுகிறோம்" என்பதும் "போர்க்களத்தில் குதியுங்கள்; எமது பொது எதிரிக்கு எதிராக ஒன்றிணைந்து போராடுவோம்; களத்திலே எதிரியை சந்திக்கும் போதே ஒற்றுமை, நல்லெண்ணம் பிறக்கும்'' என 1984ஆம் ஆண்டு மே மாதம் வெளியிடப்பட்ட தலைவரின் அறிக்கை இரு பெரும் வினாக்கட்கு விடையை அன்றே கூறி இன்று அது நிதர்சன உண்மையானதை காட்டுகிறது. "என்னைத் திருப்திப் படுத்துவது இலேசான காரியமல்ல; இன்னும் சிறப்பாக செய்ய முடியும்" என யூனியர் விகடனுக்கான 86 மே மாத செவ்வியில் செய்வன திருந்தச் செய்யும் தனது இயல்பை வெளிக்காட்டியமை அதேபோல 86 ஆம் ஆண்டு நியூஸ் வீக் செவ்வியில் "நான் தனிப்பட்ட முறையில் சொந்த முயற்சியில் பயிற்சி பெற்றேன். நான் எனது இயல்பான திறனாற்றல் மூலமே செயற்படுகிறேன்" என்றமை, அதே செவ்வியில் இந்திய இராணுவத் தலையீடு அனாவசியம் என திட்டவட்டமாகக் கூறியமை, இங்கு குறிப்பிட்டுக் காட்டவேண்டியமை. அது போலவே புகழ்பெற்ற 1987 யூலை சுதுமலைப் பேச்சின் போது "சிங்கள இனவாதப் பூதம் இல. இந்திய ஒப்பந்தத்தை விரைவில் விழுங்கி விடும் காலம் வெகுதூரத்தில் இல்லை'' என்றமையில் எங்கும் எல்லாச் செவ்விகளிலும் அறிக்கைகளிலும் அடிநாதமாக, தமிழீழ இலட்சியத்தை மேன்மைப்படுத்தும் இயல்பினைக் காணமுடியும். இவற்றினை எல்லாம் விட 1986 செப்டெம்பர் மாத இந்து செய்தித் தாளில் வெளிவந்து மிக்க பரபரப்பை ஊட்டிய தலைவரது பேட்டியின் இறுதியில் "என் இயல்பான போக்கையும் சொல்கிறேன்-உண்மையான அரசியலில் நான் எப்போதும் பேச்சுக்கு தருவது குறைந்தளவு முக்கியத்துவமே, செயலால் வளர்ந்த பின்பு தான் நாம் பேசத் தொடங்குதல் வேண்டும்.... சொல்லுக்கு முன்பே எப்போதும் செயல் இருக்க வேண்டும். இச் செயல்தான் எம்மையும் மக்களையும் இறுகப் பிணைத்தது. இராணுவம் உங்களை தாக்க வருகிறது-நாங்கள் எதிர்த்துத் தாக்குவோம். உங்களைப் பாதுகாப்போம் என்று நாம் சொன்னால்-சொன்னதை செயல்படுத்தும் போதுதான் மக்கள் எம்மீது நம்பிக்கை வைக்கிறார்கள். இதனால்தான் நாம் இராணுவ நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்துகிறோம்.'' இப்பேட்டியில் இந்து பத்திரிகை ஆசிரியர் ராம் "தலைவரின் முன் நாம் தோற்றுப் போனோம்-அவர்பால் ஈர்க்கப் பட்டுவிட்டோம்.'' எனப் பின்னர் கூற நேரிட்டது. எனவே இவ்வாறாக வாசிப்போர் மனதிலே பலதரப்பட்ட உணர்வுகளை தோற்றுவிக்கக் கூடிய இத்தொகுப்பு நூல் உண்மையிலேயே அதிசயமானதாகும். ஏனென்றால் இரத்தமும் சதையும் நிரம்பிய உயிர்ப்போராட்டம் ஒன்றின் பிரதிபலிப்பு அல்லவா இவை? ★★★




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அக்கரைப்பூக்கள்





**அன்பிற்குரிய ஆசிரியர் அவர்கட்கு,**
**வணக்கம்,**

தங்களின் 'எரிமலை' ஆகஸ்ட் மாத இதழ் கிடைக்கப்பெற்றேன். அதற்காக எனது அன்பான நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். உலக அரங்கில் தமிழர்களுக்கான செய்திகளை வழங்கி எமக்கு ஆதரவாக இருப்பது எரிமலை. குறிப்பாக அறிந்துகொள்ள அரிதாக இருக்கும் ஈழச்செய்திகள் நிரம்பி இருப்பது மிகவும் பாராட்டுக்குரியது.

அன்பு, தமிழ்நாடு.

***

**எம்மினத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் பாடுபடும் இனமான இதழ் எரிமலையின் ஆசிரியர் அவர்கட்கு வணக்கம்.**

எதிர்பாராத விதமாக எரிமலை இதழ் பார்த்தேன். படித்தேன். இப்படியொரு இதழ் பார்க்க வாய்ப்புக் கிடைத்தமை கண்டு மகிழ்ந்தேன்.

உலகத்தமிழின வளர்ச்சிக்காகப் பாடுபட்டுக்கொண்டிருக்கும் அந்த புறநானூற்றுப் போர் புரிவோரின் பெருமைகளை உலகமெல்லாம் பரப்பிக்கொண்டிருக்கும் எரிமலையின் இதழ் பயின்றாலே உள்ளமும் உடலும் வலிவுறும் என்பதை எண்ணி இந்த இதழ் நமக்கும் வேண்டும் என்று என் மனம் வாங்க விழைந்ததில் வியப்பேதுமில்லை.

தமிழ்மகன், தமிழ்நாடு.

***

**அன்பின் எரிமலை குழுவினருக்கு,**

அண்மையில் தமிழீழத்தை விட்டு இடம்பெயர்ந்து வெளிநாடு வந்த எனது கைகளில் 'எரிமலை பத்திரிகை கிடைக்கப்பெற்று மகிழ்ந்தேன். இடம்பெயர்ந்து வந்த எமக்கு தொடர்ச்சியாக நாட்டுப்பற்றை ஊட்டும் விதத்தில் எரிமலை வெளிவருவது மிகவும் சிறப்பம்சமாக அமைகிறது. எனினும், இந் நாடுகளில் வாழும் தமிழீழ மக்களின் எண்ணங்களும், சிந்தனைகளும் குறிப்பாக தங்களின் எதிர்காலம் குறித்த பிழையான கருத்துக்களையே கொண்டிருப்பதை காணமுடிகிறது. இங்கு வாழும் எம்மக்களை வழிநடத்திச் செல்லவேண்டிய பெரும்பங்கு தங்களால் வெளியிடப்படும் எரிமலைக்கு பெரும் கடமையாகின்றது. இதனை கருத்திற்கொண்டு செயல்படுமாறு தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு
ரமணன், ஜேர்மனி.

***

**எரிமலை ஆசிரியர் குழுவினருக்கு எனது அன்பார்ந்த வணக்கங்கள்,**

தங்களின் எரிமலை இதழ் பல்துறைசார் விடயங்களையும் தாங்கிவருவது இட்டு மிக்க மகிழ்ச்சி. புரட்டாதி மாத இதழில் "புலம்பெயர்ந்த மக்களின் இலக்கியங்கள்" சேர்க்கப்பட வேண்டும் என கூறியிருந்தீர்கள். ஆனால் அதன்பின்பு இன்றுவரை அப்படியெதுவுமே காணப்படவில்லை. இன்றைய காலகட்டத்தில் வெளிநாட்டில் வாழும் எம்மக்களை வழிநடத்த இப்படியான புலம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் அடங்கிய விடயங்கள் வரவேண்டியது அவசியமானதே. எரிமலையின் வளர்ச்சிக்கு எனது நல்வாழ்த்துக்கள்.

இங்கனம்
செல்வராசா,
பாரிஸ்.

***

**எரிமலை ஆசிரியர்கட்கு**
**எனது அன்பு வணக்கம்,**

தங்களின் எரிமலை இதழ் எனக்குக் கிடைக்கப்பெற்றது. கரும்புலிகளின் தியாக வரலாறும், சிங்கள இராணுவத்தை உலுக்கி எடுத்த மண்கிண்டிமலை முகாம் தாக்குதலையும் படித்து மிக்க பெருமிதமும் மகிழ்ச்சியும் கொண்டேன். அந்த நூலில் பூநகரி இராணுவமுகாம் தாக்குதல் பற்றியும் இடம்பெற்றிருக்கும் என்று ஆவலோடு தேடினேன், ஏமாற்றம் அடைந்தேன்.

ராசு,
தமிழ்நாடு.

***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கி.மு. 1 – கி.பி. 3 ஆம் நூற்றாண்டு வரையிலான தமிழிலக்கியத்தில் பெண்கள்

சென்ற இதழ் தொடர்ச்சி

## தலைவியின் உறவும் அன்பின் ஐந்திணையும்

இக்கால இலக்கியங்களில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்பட்ட நிலங்களில் வாழ்ந்த மக்களின் அக ஒழுக்கம் அதாவது காதல்/இல்லற ஒழுக்கம் புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் எனப்பட்ட ஐந்து ஆகும். இந்த ஐந்து அன்பின் ஐந் திணைகளும் வீட்டில் தலைவியின் ஒழுக்க நிலைகொண்டே தீர்மானிக் கப்பட்டுள்ளன என்பதை அதனைப் படிப்போர்/நுணுகி ஆராய்வோர் உணர்ந்துகொள்ள முடியும். குறிஞ்சி ஒழுக்கமான புணர்தலையும், பாலை ஒழுக்கமான பிரிதலையும் ஆண், பெண் இருவருக்கும் உரியதாகக் கொள்ளலாம் எனினும், ஏனைய மூன்று அக ஒழுக்கங்களும் அதா வது முல்லையின் இருத்தலும், மருதத்தின் ஊடலும், நெய்தலின் இரங்கலும் அங்கு வாழ்ந்த காதலி யருக்கு அல்லது மனைவியருக்கு உரியனவே என்பது நிச்சயம்.

முல்லை நில வாழ்க்கையை நோக்கின் மந்தை மேய்ப்புக்கும் நாட்டைக் காப்பதற்கும் தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றான். அச்சமயத்தில் தலைவி தனது வீட்டி லிருந்து அங்கு இருந்த மிருகங்க ளையும், ஏனைய சொத்துக்களையும், குழந்தைகளையும் பார்த்துக் கொண்டு வீட்டில், அவன் வரும் வரை இருக்கவேண்டி ஏற்பட்டது. எனவே இருத்தல் முல்லை நில ஒழுக்கமாகியது.

நெய்தல் நிலத்தை எடுத்துக் கொண்டால் கடல் மேல் மீன் பிடிக்கச் சென்ற/வணிகத்துக்காகச் சென்ற தலைவன் வரும்வரை, தலைவி வீட்டில் இருந்து அல்லது கடற்கரையில் நின்று அவன் வருவானோ மாட்டானோ என இரங்குவாள். அந்த இரங்கல் நிலை நெய்தல் நில அக ஒழுக்கமாயிற்று.

மருத நிலமும் அவ்வாறே. தலைவன் ஊடல் கொண்ட செய்தி எங்காவது கூறப்படவில்லை. தலை வியே தலைவனின் பரத்தையர் உறவு காரணமாக தலைவனுடல் ஊடல் கொள்கிறாள். அவனது பரத்தைமையை அறிந்த தலைவி கவலைப்படுவதையும், ஊடல் கொள்வதையும், கலங்குவதையும், தோழி தேற்றுவதையும் சங்கப் பாடல்கள் பல எடுத்துக்காட்டும். உதாரணத்துக்கு பின்வரும் பாட லைக் கூறலாம்.

## ஆயிழை மகளிர்

“ஆரற்தாங்கிய அலர்முலை ஆகத்து
ஆராக் காதலொடு தாரிடைக்குழைய
முழவுமுகம் புலரா விழவுடை வியனகர்
வதுவை மேவலனாகலின் அதுபுலந்து
அடுபோர் வேளில் வீரைமுற்றுகை
நெடுவெள்ளுப்பின் நிரம்பாக் குப்பை
பெரும் பெயற்கு உருகியாங்கு
திருந்திழை நெகிழ்ந்தன தடமேன் தோளே”

(அகம்)

பரத்தைமை காரணமாக தலைவனைக் கோபித்த தலைவி, உப்புக்குவியல் மழைக்கு உருகினாற் போல் உருகி விட்டாள் என இப்பாடல் அமைகிறது. எனவே ஊடல் ஒழுக்கமும் பெண்ணுக் குரியதாக அமைகிறது.

## பெண்களின் கடமைகள்

மேற்குறிப்பிட்ட நிலங்களில் வாழ்ந்த மகளிர் வீட்டிலேயே அல் லது வீட்டோடு சேர்ந்த சூழலி லேயே வாழ்ந்தனர். அவர்களுடைய கடமைகள் வீடு சார்ந்தனவாக இருந்தன. குறமகளாக்கிய சமையல் பற்றி மலைபடுகடாமிற் கூறப்படு கிறது.

அம்மன்கிளி முருகதாஸ்
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.

“கழைவளர் நெல்லினரியுலையூழ்த்து
வழையமை சாரல் கமழத்துழைகி
நறுமலரணிந்த நாறிருமுச்சிக்
குறமகளாக்கிய வாலவிழ் வல்சி”

(மலைபடுகடாம் 179 . 183)

பெண்கள் கிளிகடிதல் பற்றிப் பல பாடல்களிற் கூறப்படுகிறது (குறு.36). தினைப்புனத்தில் புள்ளோப் பும் காதலியைக் காதலன் வந்து சந்தித்துச் செல்வது கூறப்படுகிறது. கொடுவிற்காவின் யானையைத் துரத்துதலையும் பெண்கள் கிளி ஓட்டுதலையும் குறு. 333 கூறும்.

தினைப்புனம் காக்க மகளைத் தாய் அனுப்பிய செய்தியை குறு. 141 கூறும்.

“வளைவாய்ச்சிறுகிளி விளை தினைக் கடிஇயர் செல்க என்றாளே அன்னை”

என வரும் அது.

முல்லைநில மக்களில் மந்தை மேய்த்தலுக்கு ஆண்கள் பொறுப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாக இருந்ததை நெடுநல்வாடை காட்டும். முல்லைநிலத்துப் பெண் அதிகாலையில் எழுந்து மத்தை அடித்து தயிரைக்கடைந்து வெண்ணை எடுத்து மோர்ப்பானையைத் தலையிலே வைத்து காலை மோரைக் கொடுத்து நெல் முதலிய வற்றைப் பெற்று சுற்றத்தாரை உண்ணவைப்பாள். நெய்க்கு விலையாகப் பசும் பொன்னை வாங்காது பால் எருமையையும், நல்ல பசுவையும் கரிய எருமை நாகினையும் வாங்கிவருவாள். அங்கு தினையரிசிச் சோறு பாலுடன் கிடைக்கும் (பெ.ஆ.ப.) அவள் அவல் இடிப்பாள். வீட்டில் பறவைகளை வளர்ப்பாள். இரும்பாற்செய்த விளக்கின் திரியைக் கொளுத்தி இல்லுறை தெய்வத்தை வணங்குவாள். கணவன் இல்லாத சமயத்திலும் இருக்கிற சமயங்களிலும் அவனது பொருளையும் பிள்ளைகளையும் காத்து இருத்தல் அவளது கடனாயிற்று. இவள், 'மனைக்கு விளக்கு', 'கற்பின் வாணுதல்' என அழைக்கப்பட்டாள்.

மருதநிலம் வளம்பொருந்திய நிலம் பெண்களுக்குப் பல கடமைகள் இருந்தன. பெண்கள் அவலிடித்தனர். மனையிலே பல கடன்களைச் செய்பவளாக இருந்தாள். 'திருமனைப் பல கடம்பூண்ட பெருமுதுபெண்டிர்' எனப் பெண்கள் வருணிக்கப்படுகின்றனர். கணவன் வெளியில் சென்ற பிறகு வீட்டின் கடமைகள் அனைத்துக்கும் அவள் பொறுப்பாளி ஆனதை இது தெரிவிக்கும். ஆண் பரத்தையிடத்துச் செல்ல, பெண் தனியே வீட்டில் உறைதல் கூறப்படுகின்றது. மருதம் பாடிய இளவீகடுங்கோ பாடிய இப்பாடல் தோழி சொல்வதாக அமைவது. "ஆம்பலோடு அரியமலர் சேர்த்துக் கட்டியதழையாடைய உடுத்துக்கொண்டு விழவிலே கூத்தாடுகின்ற ஆடுமகளிரோடு தழுவி மலர் போன்ற கண்களுடைய நின் காதலியின் (பரத்தை) குறிய முன் கையோடு நீ பிணைப்பை விட்டு விட்டாய் போலும். எம்மைப்போல புதல்வனைப் பெற்று நெல்லை உடைய பெரிய இல்லிலே நீ இல்லாமல் தனியே உறைய அவளுக்கென்ன அறக்கடமை இருக்கிறது"? என்று அவள் தனியே உறைதல் கூறப்படுகிறது.

நெய்தல்நில மகளிரும் அவ்வாறே வீட்டுக் கடமைகளைச் செய்தனர். புலால் உணங்கலைக் காத்து நின்றனர். அவற்றைத் தின்ன வரும் பறவைகளைத் துரத்தினர். உப்பு கொண்டுசென்று விற்றனர். கணவர், மகன்மார், தந்தையர் திரும்பி வரும்வரை கடற்கரையில் காவல் நின்றனர்.

## பெண்களின் திருமணம்

காதல் திருமணம் வழக்கில் இருந்தது எனினும், அக் காதல் பற்றிய செய்தி ஊரில் அலர் எழ வைத்து தந்தை, தாய், தமையன் போன்றோரையிட்டுப் பயப்பட்டமை கூறப்படுகின்றது. மகளின் காதலை அறிந்த தாய் அவளை இற்செறித்தலையும் (வீட்டில் தடுத்தல்) காணுகின்றோம்.

"பல்லோர் துஞ்சும் நள்ளென்யாமத்து
உரவுக் களிறு போல் வந்து இரவுக் கதவு
முயறல்
கேளேம் அல்லேம் கேட்டனெம் பெரும்
ஓரி முருங்கப் பீலிசாய
நன்மயில் வலைப்பட்டாங்குயாம்
உய்வீடு தோறும் முயவீடும் அறனில்பாயே"

(குறு.244)

மயில் வலையில் அகப்பட்டது போல தாயின் கட்டுப்பாட்டில் தான் அகப்பட்டதாகக் கூறுகிறாள்.

தந்தையின் குணநலன் பற்றிப் பின்வரும் பாடல் காட்டும்.

"புலிக் கணத்தன்ன நாய்த் தொடர் விட்டு
முருகினன்ன சீற்றத்து கருத்தற
லெந்தையும் இல்லானாக
அஞ்சுவனல்லனோ இவளிது செயலே."

தந்தை புலிக்கூட்டம் போன்ற நாய்களையுடையவன். முருகன் போன்ற தோற்றமுடையவன். கடு வலிமையுடையவன். அவன் வீட்டிலிருக்கிறான். அதையிட்டு அவள் பயப்படுகிறாள் என இது அமைகிறது.

காதலனைச் சந்திப்பதையிட்டு தமையன்மாருக்குப் பயப்படுவதைப் பின்வரும் நெய்தல் பாடல் எடுத்துக் காட்டும்.

"கருங்கோட்டுப் புன்னைப் பூம் பொழில்
புலம்ப
இன்னும் வாரா வரூஉம்

# கணனிக் கண்காட்சியில் பெருந்திரள் மாணவர்கள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கணனிக் கிளையினர் யாழ். பல்கலைக்கழகத்துடனும் மற்றும் யாழ். மாவட்டத்தின் கணனிக் கல்வி நிறுவனங்களின் ஆதரவுடனும் கணனி இலத்திரனியல் கண்காட்சி ஒன்றை அண்மையில் யாழ். பல்கலைக்கழகப் பீடத்தில் நடாத்தினர்.

இக்கண்காட்சியை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள் நாடாவெட்டி திறந்து வைத்தார்.

இக்கண்காட்சியின் ஆரம்ப விழாவில் தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணிப்பாளர் ஏற்றிவைத்தார்.

இக்கண்காட்சியை பலநூற்றுக் கணக்கான மாணவர்கள், மற்றும் பலரும் கண்டுகளித்தனர். கணனி இலத்திரனியல் பற்றிய அறிமுகம், கணனி இலத்திரனியல் தொழில்நுட்பத்தின் அடிப்படைத் தத்துவங்கள், கணனியின் வரலாறு, கணனியின் விந்தைகள், கணனி விளையாட்டுக்கள் போன்றவை காண்பிக்கப்பட்டன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பன்மீன் வேட்டத் தென்னையர் திமிலே"

என வரும் இப்பாடலில், காதலனைக் காணாத காதலி, மீன் வேட்டைக்காகச் சென்ற தமையன் மாரின் திமில்கள் வருவதால் அவனைச் சந்திக்க இயலாமற் போனது பற்றிக் கூறப்படுகிறது.

காரணம், காதலன் கைவிட்டுச் சென்றமையாக இருக்கலாம் என ஊகிக்கவும் இடமுண்டு.

"யாருமில்லைத் தானே கள்வன்
தானவன் பொய்ப்பின் யானெவன்
செய்கோ"

என, அவன் பொய்த்துவிட்டால் தான் என்ன செய்வது எனக்கவலைப்படும் காதலியையும் காணமுடிகிறது.

தோழி கூற்றாக வருகின்ற பாடல் தலைவியை எப்படியேனும் திருமணம் செய்யவேண்டும் என்று இரங்கும் பாடலில் அவள் 'மனைவி யானால் சரி' என்றவகையில் வரும் வரிகளையும் அவதானிக்க முடியும்.

"நயவாயாயிதும் வரைந்தனை சென்மோ
கன்முகை வேங்கை மலரும்
நன்மலைநாடன் பெண்டெனப் படுத்தே"

(குறு.76)

நீ அவளை விரும்பவில்லை எனினும் 'நன்மலை நாடன் பெண்டு' என்ற பெயரைப் பெறுமாறேனும் செய்வாயாக என அமைகிறது இது.

காதல் திருமணம் (உடன் போக்கு) ஒருபுறம் இருக்க பேச்சுத் திருமணம் (மகட்கொடை), ஏறு தழுவுதல் காரணமாய் அமைந்த திருமணம் என்பனவும் வழக்கில் இருந்தன. மகட்கொடை என்பது பெண்ணை விரும்பிய ஒருவன் தந்தையிடம் பெண்ணைக் கேட்டுத் திருமணம் செய்தல் ஆகும். மகளைக் கொடுக்க தந்தை விரும்பாவிடில் சண்டை நடந்ததும் உண்டு. அடுத்து ஏறுதழுவுதல் முறையாற் செய்யப்பட்ட திருமணத்தில் ஆண்மகனின் வீரம் போற்றப்பட்டது.

எனவே திருமணத்தில் தாய், தந்தை செல்வாக்குச் செலுத்தியுள்ளமையை இவற்றின் மூலம் அறியலாம்.

## பரத்தையர்

அக்கால சமூகத்தின் பிரதான உறுப்பினராக இருந்தனர். இப்பரத்தையர் ஆடல் பாடலில் வல்லவராதலால் ஆண்கள் இவர்களிடம் சென்று இன்பம் துய்த்தனர். எனினும் சமூக அமைப்பில் இவர்கள் வஞ்சகராகக் கருதப்பட்டனர்.

"நுண் பூணாகம் வடுக்கொள முயங்கி
மாயப்பொய் பலகூட்டி கவவுக் கரந்து
சேயரும் நணியரும் நலநயந்துவந்த

இளம்பல் செல்வர் வனந்தப வாங்கி" என்று வருகின்ற மதுரைக் காஞ்சி வரிகளில், மாயப்பொய் பல கூட்டி செல்வரின் வளங்களை முழுமையாகக் கறக்கின்றவர்களாக, இவர்கள் கூறப்பட்டுள்ளமையைக் காண முடிகிறது. குடும்பத்தைப் பிரித்து குடும்பத் தலைவியரின் வெறுப்புக்குள்ளானவர்களாகக் காணப்பட்டனர்.

## விதவைகள்

கூந்தல் கொய்து, குறுத் தொடி நீக்கி, வெள்ளாம்பலின் அல்லி உணவை உண்டனர்; அணிகலன்கள் அணியமாட்டார்கள்; இல்லை எனில் அவர்கள் தீயில் பாய்ந்து உயிரைப் போக்கினர் (உ+ம் புறம் 280)

## போர்

பெண்கள் போரிற் கலந்து கொள்ளவில்லை; ஆனால் கணவரை, மகன்மாரைப் போருக்கு அனுப்பினர். (உ+ம் புறம் 279)

"கெடுகசிந்தை கடிதிவன் துணிவே
மூதின் மகளிராதல் தகுமே
மேனாளுற்ற செருவில் இவடந்தை
யானை எறிந்து களத் தொழிந்தனனே
நெருநலுற்ற செருவிற்கிவள் கொழுனன்
பெரு நிரை விலங்கி யாண்டுப்பட்டனனே
இன்னும் செருப்பறை கேட்டு விருப்புற்று
மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇ
பாறுமயிர்க்குடுமி யெண்ணெய்நீவி
ஒருமகனல்ல தில்லோள்
செருமுகநோக்கிச் செல்கென விடுமே"

(முற்றும்)

## முன் அட்டையில்



"நிச்சயமாக மிகப்பெரிய சோதனைகளையும், மிகப்பெரிய வேதனைகளையும் தாண்டித்தான் எம்மால் இந்தப் போராட்டத்தை, இந்த இலட்சியத்தை அடையமுடியும் என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும். ஆனால் நிச்சயமாக இராணுவத்தினரோ அல்லது அரசாங்கம் நினைத்தது போலவோ எந்த அடாவடித்தனங்களாலோ அல்லது எந்த அராஜகத்தின் மூலமாகவோ தமிழ்மக்களின் விடுதலை உணர்வுகளை மழுங்கடிக்க முடியாது என்பது கடந்தகால வரலாற்றிலிருந்து நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் உண்மை"

தேசவிரோதிகளின் சதிக்கு ஒரு காலை இழந்த பின்பு, 1987ம் ஆண்டு 'மே 1' தொழிலாளர் தின விழாவில் ஆர்ப்பரிக்கும் மக்கள் கூட்டத்தின் மத்தியில் உரையாற்றும் கிட்டண்ணா.

## பின் அட்டையில்

'காத்திருத்தல்'

ஓவியம்: ஓவியர் கிட்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குடாநாட்டில் தேர்ந்த சில தொல்லியல் மையங்களும் அவற்றின் வரலாற்று முக்கியத்துவமும்

அல்லைப்பிட்டி:

யாழ்ப்பாணக்குடாநாட்டிற்கு மேற்கேயுள்ள தீவுகள் புராதன காலம் தொட்டு இந்து சமுத்திர வர்த்தகத்தில் முக்கிய பங்கினை வகித்து வந்துள்ளன என்பதைப் பெற்றுக் கொள்ளப்பட்ட தொல்லியற் சான்றுகள் வாயிலாக அறிய முடிகிறது. இத் தீவுகளில் மிக நீண்டகாலமாக வெளிநாட்டு வர்த்தகர்கள் வந்து சென்றதற்கான தடயங்கள் கிடைத்துள்ளன. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்து வட இந்திய ஜாதகக் கதைகளிடையே காவேரிப்பட்டணத்திலிருந்து இப் பகுதிக்கு வர்த்தகர்கள் வந்து சென்றமைக்கான குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இத்தொடர்பினால் ஊர்காவற்றுறையும் யாழ்ப்பாணப் பட்டினத்துறையும் முக்கிய துறைகளாக எழுச்சி பெற்றபோது கூடுதலாக வெளிநாட்டு வர்த்தகர்கள் இத் தீவுகளுக்கு வந்து சென்றனர். இக் கட்டத்திலேயே அல்லைப்பிட்டியும் வர்த்தகர்களுடன் தொடர்புடைய ஓர் இடமாக விளங்கியிருக்கவேண்டும்.

அல்லைப்பிட்டி யாழ்ப்பாண குடா நாட்டிற்கு மேற்கே வேலணைத்தீவின் தென்பகுதியில் உள்ள வேலணை, மண்கும்பான் பகுதியிலே மண்டைதீவுக்கருகில் அமைந்துள்ளது. யாழ்ப்பாணம், மண்டைதீவு பிரதான வீதியூடாக அல்லைப்பிட்டியை இலகுவாகச் சென்றடையலாம்.

1977இல் லண்டன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கலாநிதி ஜோன் காஸ்வல் என்பவரே அல்லைப் பிட்டியில் அகழ்வாய்வு செய்து பெருந்தொகையான சீனப்பாத்திரங்களை முழுமையாகவும் உடைந்த துண்டங்களாகவும் கண்டுபிடித்தார். பல உடைந்த துண்டங்களை ஒன்றுசேர்த்து முழுமையான பாத்திரங்களாக அவர் உருவாக்கினார். இச்சீனப்பாத்திரங்கள் இன்று முழுமையான தோற்றப்பாட்டுடன் யாழ்ப்பாண நூதன சாலையிலிருந்து கொழும்பு அரும் பொருளகத்திற்கு கைமாற்றப்பட்டுவிட்டன.


சே. கிருஷ்ணராசா M. A.
தொல்லியல் வரலாற்று விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அல்லைப்பிட்டியில் கிடைத்த பாத்திரங்களுள் பெரும்பாலானவை "பௌல்ஸ்" எனப்படும் சட்டிமூடி போன்ற சின்னங்களேயாகும். இவற்றில் சீனருடைய குறியீடுகள் பல காணப்படுகின்றன இந்தப் பாத்திரங்கள் அல்லைப்பிட்டியிலே ஓரிடத்தில் மணற்கும்பிகளுக்குள் குவியலாக இருக்கக் கண்டுபிடிக்கப் பட்டநிலை பற்றி பலவிதக் கருத்து வேறுபாடுகள் வரலாற்றாசிரியர்கள் மத்தியில் நிலவுவதனைக் காணலாம். சிலர் உடைந்த அல்லது பழுதடைந்த கப்பலில் இருந்த பாத்திரங்களே இவ்வாறு ஓர் இடத்தில், அல்லைப்பிட்டி, மணலினுள் புதைந்திருக்க வேண்டும் என்று விளக்கியுள்ளனர். வேறு சிலர் இப் பாத்திரங்கள் அங்குள்ள புராதன கோவில் ஒன்றில் பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளனர். அக்காலத்தில் சீனவர்த்தகர்கள் கொண்டுவந்த பாத்திரங்கள் பெரும்பாலும் பல்வகைப்பட்ட கிரியைகளுடன் தொடர்புடைய பாவனைப் பொருட்களாக விளங்கியமையால் கோவில்லொன்றில் அவை வைக்கப் பட்டிருக்கலாம். அதனாலேயே ஓரிடத்திலே திரட்சியாக அவை காணப்பட்டன.

1621க்கும் 1623க்கும் இடைப்பட்ட காலத்தில் போத்துக்கீசர் அல்லைப்பிட்டியில் சூசையப்பர் ஆலயமொன்றினை அமைத்திருந்தனர். இதற்கு முன்னரே அவ்விடத்தில் புராதன இந்துவாலயமொன்று அமைந்திருந்ததற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. அங்குள்ள புராதனம் வாய்ந்த கிணறுறொன்றினை ஆழமாக்கும் போது அதனுள்ளிருந்து புராதன இந்துக் கோவில் ஒன்றுக்குரிய பொருட்கள் மீட்டெடுக்கப்பட்டன. 1877 அளவில் பல பொற்காசுகள் அல்லைப் பிட்டியில் கண்டுபிடிக்கப்பட்டதற்கான ஆதாரங்களும் உண்டு. 1922ல் வினாசி பிலிப்பன் என்பவர் பனம் பாத்தியொன்றுக்காக மண்வெட்டும் போது 179 குஜராத்தி பொற்காசுகள் கொண்ட மட்பாத்திரமொன்றினைக் கண்டெடுத்தார் என்று கூறப் படுகிறது. இதனையும் விட புராதன விளக்குகள், செங்கட்டிகள், சிறுசிறு உருவங்கள் என்பன அல்லைப் பிட்டியில் காலத்துக்குக் காலம் மண்படைகளிலிருந்து வெளிவந்தன.

அல்லைப்பிட்டியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட சீன மட்பாத்திரங்கள் யாவும் கி. பி. 10ம் நூற்றாண்டுக்கும் 14ம் நூற்றாண்டுக்குமிடைப்பட்ட காலத்துக்குரியவை என அறிஞர்களால் காலவரையறை செய்யப்பட்டுள்ளன. தென்னிந்தியாவில் சோழப்பேரரசு ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில் சீனத்துடனான வியாபார நடவடிக்கைகளும் மேலோங்கியிருந்தன. இக்காலத்திலே தான் சீனருடைய பீங்கான் பாத்திரங்கள் உலகப்புகழ் பெற்றவையாக விளங்கின. அப்பின்னணியில் அல்லைப்பிட்டியிலும் சீனர்களது மரக்கலம் வந்தொதுங்கியதெனக் கொள்ளலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்